சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

## தங்கத்துரை சம்பந்தமாக

ஏனையா சும்மா எமக்குள்ளே சண்டையென்று
வீணாயேன் கேக்கின்றீர் விளங்காமல் - போனாற்போ
எனச்சொல்லிப் போகவென்ன பஜரோவும் எங்களது
இனவுரிமை யாமாமோ என்?

- ஈழமோகம்

இதழ் 65 பெப். 09 - பெப். 22, 1995 விலை 7.00

**பூநகரி முகாமை மூட முடியாது! - அரசு | மூடிய பின்னரே பேச்சு! - புலிகள்**

# பேச்சுவார்த்தையின் எதிர்காலம்?

**பூநகரி இராணுவ முகாமை மூடி விட்டு பூநகரி- சங்குப்பிட்டி பாதையைப் போக்குவரத்துக்காக திறக்கும்படி புலிகள் முன்வைத்த கோரிக்கையை ஏற்க மறுத்த அரசு, வேண்டுமானால் 1000 மீற்றர் தூரம் பின்னோக்கி அதை நகர்த்த முடியும் என அறிவித்ததைப் புலிகள் ஒப்புக்கொள்ள மறுத்துள்ளதைத் தொடர்ந்து நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் எதிர் காலம் கேள்விக்குறியாகி உள்ளது. 'பூநகரி முகாமை மூடாமல் அரசுடன் தொடர்ந்து பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை' என்று புலிகளின் தலைவர் பிரபாகரனே அறிவித்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பூநகரி-சங்குப்பிட்டி பாதைக்குப் பதில், ஆனையிறவுப் பாதையைத் திறந்து விட அரசு ஒப்புக்கொண்ட போதும், ஆனையிறவுப் பாதை பாவனைக்கு விடப் படுவதற்கு பூநகரி முகாம் மூடப்படுதலை ஒரு முன் நிபந்தனையாகப் புலிகள் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.**

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பதில், 1000 மீற்றர் பின்நோக்கிப் பூநகரி ராணுவ முகாமை நகர்த்துவதென்ற பிரேரணையுடன் யாழ் சென்ற கண்காணிப்புக் குழு தலைவர்கள் அடங்கிய தூதுக்குழுவிடம் புலிகள் தாம் பூநகரி முகாம் விடயத்தில் மிகவும் உறுதியாக இருப்பதாக அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. இம்முடிவைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே தூதுக் குழுவிடம் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பிய தூதுக்குழு புலிகளின் இந்த நிலைப்பாட்டை அரசிடம் தெரிவித்துள்ளதாகவும், ஆயினும் அரசு தரப்பில் இது தொடர்பான எந்த இறுதி முடிவும் இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை எடுக்கப்படவில்லை. ஆயினும், அவசரகாலச் சட்டப் பிரேரணையை நிறைவு செய்து உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ''பூநகரி முகாமை அகற்றும் உத்தேசம் அரசுக்குக் கிடையாது'' என்று தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான, திகதியை நிர்ணயிக்கும் பொறுப்பைப் புலிகள் அரசிடமே விட்டு வைத்திருப்பதாகவும், கண்காணிப்புக் குழுக்கள் இவ்வுத்தேச நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் இயங்கினாலே போதும் என அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகள்-அரசு பேச்சுவார்த்தை

→15




## திரும்பி வந்த தொண்டமான் 'செக்'!

எயர் லங்காவுக்கு அமைச்சர் தொண்டமானின் குடும்பத்திற்கு சொந்தமான ட்ரான்ஸ் லங்கா லிமிட்டெட்டினால் வழங்கப் படாமல் நிலுவையாக நின்ற 45 மில்லியன் இந்திய ரூபாய்களில் சுமார் 34 மில்லியன் ரூபாய்களை இந்நிறுவனம் திருப்பிக் கொடுத்திருந்ததாக செய்திகள் வெளிவந்திருந்தது தெரிந்ததே. இச் செய்தி சரிநிகர் இதழ் 61 இல் வெளியானது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

திரு.தொண்டமான் குடும்பத்தினர் காசு திருப்பிக் கொடுத்து விட்டார்கள் என்று ஆச்சரியப்பட்டு நமது ஈழ மோகமும் கவிதை பாடியிருந்தார். ஒருவேளை ஈழமோகம் 'ஏன் கொடுத்தாய்?' என்று பாடியதாலோ என்னவோ தெரியவில்லை. அந்தப் பணத்திற்கான காசோலைக்கு பணம் ஒழுங்கு செய்யப்படவில்லை என்று வங்கி அறிவித்திருப்பதாக இப்போது செய்திகள் கூறுகின்றன.

இப்போது எயர் லங்கா இம் மோசடி 'செக்' விவகாரத்திற்காக சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதாக தெரியவருகிறது. (இதே வேளை இது தொடர்பாக 'ராவய' வாரப்பத்திரிகையின் பத்திரிகையாளர் ஒருவர் எயர் லங்கா கடன் தொடர்பாக கேட்ட கேள்வியொன்றுக்கு அப்படியா? அப்படிப் பேசிக் கொள்கிறார்களா? எனக்கு

→15

## பஜிரோவுக்கு விண்ணப்பிக்கும் தமிழ்ப் பா.உக்கள்!

ஐ.தே.கவினரை பஜிரோக் கட்சியினர் என்று பொ.ஐ.ஐ.முன்னணி திட்டியிருந்தது. பொ.ஐ.ஐ.மு. ஆட்சிக்கு வர முதல் அது நடந்தது. ஆட்சியேறியதும் ஐ.தே.கவினர் பஜிரோக்களுக்கு செலவழித்த பணத்தை பட்டியலிட்டுக் காட்டியது. ''பொது மக்கள் பணத்தை விரயமாக்கி விட்டார்கள் ஐ.தே.கவினர்'' என்று குற்றம் சாட்டியது. தொலைக்காட்சிகள் ''ஐ.தே.கவினர் இறக்குமதி செய்தவை இவை'' என்று ஆடம்பரமான பல வாகனங்களை நாள்தோறும் காட்டின. இது முடிந்த கதை.

இப்போது மக்களுடைய பிரதிநிதிகள் 60பேர் மக்களுக்கு சேவையாற்ற பஜிரோ தந்தே ஆக வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்கள். இதில் அரைவாசிப்பேர் பொ.ஐ.ஐ.மு. பா.உறுப்பினர்கள். 40 லட்சம் ரூபா பெறுமதியான இந்த பஜிரோ இன்ர கூலர் 4 லட்சம் ரூபாவுக்குக் கிடைக்கிறது இவர்களுக்கு. அந்த நேரமே அண்ணன் அமிர் யப்பான் ஜீப்புக்காகக் கொள்கையையே விட்டு விட்டதாக கதை உண்டு. அவர் வழியில் வந்த கூட்டணியினர் மட்டும் எம்மாத்திரம்? ஈ.பி.டி.பியினர் 9 பா.உறுப்பினர்களுக்கும் 9 பஜிரோவுக்கு விண்ணப்பித்து விட்டார்கள். புளொட்டும் 3 பா.உ.க்கும் 3 பஜிரோ கேட்டிருக்கிறார்கள். சாட்சாத் தொண்டமானே தனக்கும் பஜிரோ வேண்டும் என்று விண்ணப்பித்திருக்கிறார்.

→15

www.tamilarangam.net



# மெல்லத் தமிழினி

## கீற்றுப் போன்ற நம்பிக்கை

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொழும்பிலுள்ள ''லொட்ஜ்'' ஒன்றில் தங்கியிருந்து விட்டு ஊர் திரும்புவதற்காக கோட்டை ரெயில் நிலையத்திற்கு வந்திருந்த நண்பர் ஒருவரை எதேச்சையாக காண நேர்ந்தது.

ஐந்து ஆண்டுகளுக்குப்பின் சந்திக்கின்றேன். ஐந்து ஆண்டு களுக்குள் ஐம்பது வருடத்துக் குரிய மூப்பு அவர் முகத்தில் தெரிந்தது.

சாப்பாடு, குழந்தைகளின் படிப்பு, உடுதுணி, மண்ணெண்ணை, விறகு என்பவற்றிக்காக ஒருவர் ஐம்பது ஆண்டுகள் உழைக்க வேண்டிய உழைப்பை ஐந்தே வருடத்தில் செய்ததால் ஏற்பட்ட ''வேகப்படுத்தப்பட்ட'' மூப்பு.

என்னை அடையாளம் கண்டு கொண்டு அவர் கேட்டார் ''எப்படி இருக்கிறீர்''?

இதற்கு பதில் சொல்லாமலே அவரைப்பற்றி அதே கேள்வியை நான் திருப்பிக் கேட்டேன்.

'இந்த முறையும் பிரச்சினை தீராவிட்டால், இப்படி ஒரு வாய்ப்பு அடுத்த முறை வர முதல் நாங்கஎல்லாம் செத்துப் போவோம், ஆனால், அங்கையெண்டால் நிலைமை சரிவரும் எண்ட நம்பிக்கையை ஏற்படுத்திற மாதிரி ஒண்டையும் காண வில்லை'

'என்ன அப்படிச் சொல்லிறியள்' என்றேன் நான் ஆச்சரியத்துடன்.

''அப்படிதான் தெரியுது. பேச்சு வார்த்தையாலை பிரச்சினையை தீர்க்க இவை ஒத்துவருவினம் எண்டு ஒருதரும் நம்பேல்லை. புலிகளுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறதா தெரியயேல்லை. ஏதாவது கிடைக்கிற மட்டும் லாபம், ஏன் விடுவான் எண்ட நிலை தான் அங்கை இருக்குது....

''என்ரை கடைசிப் பிள்ளை வீட்டிலையே பிறந்து, செத்துப் போச்சுது. இத்தினைக்கும் நான் ஆஸ்பத்திரியில வேலை, பெரியப் பருக்கு நெஞ்சு வலியெண்டு மருந்தெடுக்க போக கான்சர் எண்டு அறிஞ்சம். கொழும்புக்கு வர கப்பலுக்கு புக் பண்ணிட்டு காத்திருக்கையுக்கை அவரும் போயிட்டார். தம்பியாற்றை மனிசிக்கும் அது தான், அவவை ஒருக்கால் கொண்டு வந்து, கறன்ற் பிடிச்சிட்டு கொண்டு போன நாங்கள். அவவும் போயிட்டா.... மூண்டு சின்னப் பிள்ளையள் அவருக்கும் இப்ப மூளைப் பிசகுமாதிரி... ஒரு வேலையும் செய்யிறதில்லை... விஜயராணி செத்தது தெரியுமோ.... ஆஸ்பத் திரில வேலை செய்த விஜயராணி அவவுக்கு தான் எவ்வளவு கவலை... தங்கச்சிமார், தம்பி எல்லாம் வெளியில, புருஷனுக்கு ஒரு வேலையும் தெரியாது... பிள்ளையை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டா... ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு வெளிக்கிட்டுக் கொண்டு நிண்டவ திடீரெண்டு நிண்டாப் போலை தலையை சுத்து தெண்டு படுத்தவ. அவ்வளவு தான். பிறகு எழும்பவே இல்லை.... இந்தக் கதையளுக்கு ஒரு முடிவே இல்லை... சாகிறது ஒன்று மட்டும் தான் நிச்சயமாக இருக்கிறது....'' நம்பிக்கைகள் வரண்டு போன ஒரு மனிதனின் வாக்குமூலங்களை நான் மௌனமாக பதிவு செய்து கொண்டிருந்தேன்.

திடீரென ஏதோ நினைவு வந்தவர் போல தனது கைப்பையை திறந்து ஒரு கசங்கிய கடதாசித்துண்டை எடுத்து, என்னிடம் நீட்டினார்.

'என்ன இது....

'உங்களுக்கு எடியுக்கேசன் டிப்பாட்மென்ரில ஆரையும் தெரியுமோ.... நான் கிளறிக்கல் சோதினை எடுத்தனான்... உது என்ரை இன்டெக்ஸ் நம்பர் நான் பாசோ பெயிலோ தெரியாது... இச்சை வந்தனான் அதையும் பாத்திட்டு போவம் எண்டு பார்த்தால் முடியேல்லை... முடிஞ் சால் ஒருக்கா பாத்து அனுப் பேலுமோ...

அந்த முகத்தின் வரட்சிக்கும் சுருக்கங்களுக்கும் உள்ளால் அடியாழத்திலிருந்து, கண்களின் கோடியில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு கீற்றுப் போன்ற நம்பிக்கை என்னைப் பார்த்து இரந்தது.

செய்வதறியாமல் மௌனமாக அந்தத் துண்டை மடித்து பொக் கற்றில் வைக்கிறேன்.

# ஜனாதிபதியின் புதிய குழப்பம்!

பிரெஞ்சுப் பத்திரிகையான **'லா மொண்டிக்கு'** ஜனாதிபதி அளித்த பேட்டி பற்றி சொல்ல வேண்டும்.


'புதிய புதிய கோரிக்கைகளை புலிகள் வைப்பது நியாயமல்ல. பேச்சு வார்த்தை தோல்வியுற்றால் நாம் யுத்தத்திற்கு போவோம் என்று நான் கூறவில்லை. ஆனால், நேர்மையான ஒரு அரசாங்கமும், கட்டுப்பாடான ஒரு ராணுவமும் யுத்தத்தில் வெற்றி பெறுவது சாத்தியமென்பதை கூற விரும்பு கிறேன்.'

ஜனாதிபதியின் இந்தக் கருத்து, காமினி கொல்லப்பட்ட போது, அநுருத்த ரத்வத்தை அவர்கள் கூறிய வார்த்தைகளை ஞாபகப் படுத்துகின்றன.

''சமாதான முயற்சி தோல்வி யுற்ருல், எம்மால் யுத்தத்தில் வெல்ல முடியும், என்பதைக் காட்டுவோம். இராணுவத்திற்கு போதியளவு ஆயுதமும், வசதியும், சரியான உத்தரவுகளும் கிடைக்கு மானல் யுத்தத்தில் எம்மால் வெல்ல முடியும் என நம்புகிறேன்''

ஆக இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு பேச்சுவார்த்தையல்ல, யுத்தமும் கூடத்தான்என்பது தான் இதன் அர்த்தமா?

அப்படியானல், யுத்தத்தினால் புலிகளை வெற்றி கொண்டால்



இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என அரசு நம்புகிறதா?

இதுதான் தர்க்கம் என்ருல், புலிகளை யுத்தத்தில் வெற்றி பெறுவது போலவே, பேச்சு வார்த்தையும் புலிகளை வெல்வதற்காக செய்யப்படும் ஒன்று என்று கருதலாமா?

பேச்சுவார்த்தை எத்தகைய திட்டமும் இல்லாமல் தொடங் கப்பட்டதால், கோரிக்கைகள் புதிதுபுதிதாக வருதல் சாத்திய மில்லையா? தவிரவும் பூநகரி முகாம் பிரச்சினை ஒரு பழைய பிரச்சினையாயிற்றே?

கோரிக்கைகளே எழுப்பப்படா விட்டால் பேச்சுவார்த்தை நடத்து வது எப்படி?

அப்படியானல், அரசு பேச முன்பே தனது அரசியல் தீர்வை அறிவிப்பது தானே நியாயம்.

தமிழீழம் கோரிப் போரிடும் புலிகளுடன், அரசு பேசப்போய் யுள்ளது என்ருல் அவர்கள் அக்கோரிக்கையை கைவிடத் தேவை யான மக்களது அரசியல் பிரச் சினைக்கான நம்பகமிக்க ஓர் தீர்வை முன்வைப்பதல்லவா நியாயம்?

பூநகரி பற்றி பேசினல் பொல்லெடுப்போம் என்ற பாணியில் பேசுவது என்ன தர்க்கம்?

ஜனாதிபதி அவர்களுக்கு இது புரியவில்லையா? அல்லது புரிந் தும் இவ்வாறு சொல்ல நிர்ப்பந் திக்கப்படுகிருரா?

எது எப்படியானாலும், விளைவு ஒன்றுதான், இத்தகைய அணுகுமுறை பிரச்சினையை தீர்க்காது. புதிய குழப்பத்திற்கு தள்ளிவிடும்!

# ஜே.ஆர். வெளியிட்ட ஒரே ஒரு வர்த்தமானி

1981இல் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலின் போது அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெறும் பொருட்டு நடாத் திய கொடூர நிகழ்ச்சிகளை இன்றும் யாரும் மறக்கமாட்டார் கள்.

அந்தத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளருக்கும் தெரி யாமல் அவரது அதிகாரங்கள் நீக்கப்பட்டு, அத்தேர்தல் காலத் தில் அவ்வதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு தற்காலிகமாக வழங்கியிருந்தது. இந்த நீதி விரோத கட்டளையை அரசாங்க விசேட வர்த்தமானியில் (1981 யூன் மாதம் 3ஆம் திகதி 143/10A இலக்கம் கொண்ட) வெளியிட்டது. இந்த விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் ஒரே ஒரு பத்திரிகை பிரதி மாத்தி ரமே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரகசியம் 13 வருடங்களுக்குப்பின் இப்போது வெளியா கியுள்ளது. பெப். 5ஆம் திகதிய ராவய பத்திரிகையே இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் அதனை நடத்தியே தீருவது எனும் வெறியில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன முயற்சித்த வேளையில், அங்கு அப்ப டியொரு தேர்தலை நடாத்துவது கடினமானதென அன்றைய தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்படி வர்த்தமானிப் பத்திரிகை வாயிலாக பாதுகாப்பு அமைச்சுக்கு அவ்வதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது.

அத்தேர்தலின் போது ஐ.தே.க. அரசு குருநாகல் மாவட்டத்தில் இருந்து பெரும் கொலைக்குழுக்களுடன் யாழ்ப்பாணம் சென்று சண்டித்தனத்துடனும், சர்ச்சைகளுடனும் தேர்தலை நடாத்தியிருந்தது அறிந்ததே.

# தங்கத்துரையின் பதில் என்ன?

ஜனவரி 31ந் திகதியுடன் த.வி.கூட்டணி திருமலை பா.உறுப்பினர் தங்கத்துரை அவர்கள் பதவி விலகி சம்பந்த னுக்கு வழிவிடுவார் என்று எதிர்பார்த்திருந்த போதும், தான் பா.உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யப்போவதில்லை என சம்பந்தனுக்கு ஒரு நீண்ட கடிதத்தை அனுப்பி வைத்திருந் தார்.

இதனை அடுத்து எழுந்த நெருக்கடியைத் தீர்க்குமுகமாக பெப். 4ஆம் திகதி திருமலையில் கிளைக்கூட்டத்தை கூடுவதென வும், இக்கூட்டத்தில் சம்பந்தன், தங்கத்துரை ஆகிய இருவரை யும் கலந்து கொள்ளச் செய்வதன் ஊடாக இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பெப். 4ஆம் திகதிக் கூட்டத்திற்கு தங்கத்துரை அவர்கள் திரும லையில் இருந்த போதும் சமூகமளிக்கவில்லை. சம்பந்தன் அவர்கள் மட்டும் சமூகமளித்திருந்தார்.

அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க ஏற் கெனவே செய்து கொள்ளப்பட்ட கனவான்கள் ஒப்பந்தப்படி 20.02.1995க்கு முன்னதாக தங்கத்துரை ஆக்கபூர்வமான நட வடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் கூட்டணித் தலைமைப்பீடம் உடனடியாகத் தலையிட்டு தங்கத் துரை, சம்பந்தன் உட்பட திருமலைக்கிளை உறுப்பினர்களை அழைத்துப்பேசி 10.03.1995க்கு முதல் ஆக்கபூர்வமான நடவ டிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

தங்கத்துரையின் பதில் என்னவாக இருக்கப்போகிறது?

# சண்டே லீடர் ஆசிரியர் மீது குண்டர் தாக்குதல்!

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரதுங்கவும், பத்திரிகையாளரும் அவரது மனைவியு மான றேன் விக்கிரமதுங்கவும் கார் ஒன்றில் வந்த நான்கு குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

பெப். 6ஆம் திகதி மாலை அலுவலகத்திலிருந்து நுகேகொடை காத்தவத்த றோட்டிலுள்ள வீட்டிற்கு அவரது மனைவியுடன் வந்து கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் நடைபெற்றிருக்கி றது.

லசந்தவும் அவரது மனைவியாரும் வந்த மோட்டார் சைக்கி ளுக்கு குறுக்கே வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய நான்கு குண்டர்களே அவரைத் தாக்கினர். பொல்லுகளாலும், தடிகளா லும் தாக்கியதில் அவருக்கு தலையிலும், காலிலும், முதுகிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. லசந்த தாக்கப்படுவ தைத் தடுத்த மனைவி றேனும் தாக்குதலுக்குள்ளானார். பலத்த காயங்களுக்குள்ளான லசந்த கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





புலிகளின் தலைவர்கள்: ஒரே பேச்சு

# பூநகரியா? ஆனையிறவா? இழுபறிக்கு புலிகள் முத்தாய்ப்பு!

கடந்த ஞாயிறன்று வடக்குக்குப் பயணமான வெளிநாட்டு கண்காணிப்பு குழுவினர் யாழ்ப்பாணத்தில் பிரபாகரனைச் சந்தித்து பேசிவிட்டு திரும்பியுள்ளனர்.

போர் தவிர்ப்பு ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட கண்காணிப்பு குழுக்களின் தலைவர்களான போல் ஹென்றி ஹோல்டிங் (நோர்வே), ஜோகான் கபிரியேல்ஸன் (நோர்வே), அடன் ஹோம் (நோர்வே), கிளிவ் மில்னே (கனடா) ஆகியோரும், பிரிகேடியர் சிறி பீரிஸ் அவர்களுமாக ஐவரடங்கிய இக்குழு அங்கு சென்றிருந்தது.

பூநகரி முகாமை மூடி பூநகரி – சங்குப்பிட்டி பாதையை திறந்து விடுமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து எழுந்த நெருக்கடி நிலையை அடுத்து இக்குழுவினர் வடக்குக்கு சென்றிருந்தனர். பூநகரி முகாமை மூடுவது சாத்தியமில்லை, அதற்கு மாற்றாக அதை வேண்டுமானால் ஒரு கிலோ மீற்றர் உள்நோக்கி நகர்த்த முடியும் என்பதே அரசுதரப்பினரின் உறுதியான முடிவாக இருந்தது. இந்த முடிவை அறிவிப்பதும் இது காரணமாக ஏற்பட்டிருக்கும் இறுக்க நிலையைத் தளர்த்தி, மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கான சூழலை ஏற்படுத்துவதுமே இத்தூதுக்குழுவின் யாழ் பயண நோக்கமாக இருந்தது.

யாழ் சென்ற இத்தூதுக்குழுவினரில் பிரிகேடியர் சிறி பீரிஸ் நீங்கலாக மற்றைய நால்வரும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர். இரண்டாம், மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பில் கலந்து கொண்டவர்களில் ஒருவரான பிரிகேடியர் சிறி பீரிஸ் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

இப்பேச்சுவார்த்தையின் போது பிரபாகரன் பூநகரி முகாமை அகற்றுவது தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்துள்ளதாகவும், முகாம் அகற்றப்பட்டால் மட்டுமே மீளவும் பேச்சுக்களை தொடர்வதில் அர்த்தமிருக்கும் என்றும் அவர் வலியுறுத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேமதாசா காலத்தில் ஏமாற்றப்பட்டது போல இன்னுமொருமுறை தாம் ஏமாறத் தயாரில்லை என்று அவர் குறிப்பிட்டதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஆக, இப்போது நிலைமை மிகவும் தெட்டத் தெளிவான இறுக்க நிலைக்கு வந்துள்ளது. புலிகள் புதிய புதிய கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள் என்று ஜனாதிபதி அவர்கள் ஏற்கனவே அதிருப்தி தெரிவித்திருக்கிறார் என்ற போதும், வைக்கும் கோரிக்கைகளைவிட்டு அவர்கள் உறுதியாகவே இருக்கப்போகிறார்கள் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

ஆனையிறவு பாதையைத் திறக்க தாம் தயார் என்று அரசு அறிவித்துள்ள போதும், புலிகள் அதையிட்டு அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பூநகரி முகாமை மூடவைப்பதிலேயே அவர்கள் குறியாக உள்ளனர். பூநகரி முகாமை அரசாங்கம் மூடினால் ஆனையிறவுப் பாதை திறக்கப்படுவதற்கு தாம் ஒத்துழைக்கத் தயார் என்று ஏற்கனவே அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

புலிகளை கட்டுப்படுத்துவதற்காகவும் வடக்கை முற்றாக முற்றுகை நிலையில் வைத்திருப்பதற்காகவுமே வெற்றிலைக்கேணி, பூநகரி முகாம்கள் போடப்பட்டன என்று புலிகள் கூறுகின்றனர். அது உண்மையும் கூட. முற்றுகை நிலையில் தம்மை வைத்துக் கொண்டே தம்முடன் அரசு பேச நினைக்கிறது, இதன் மூலம் ஏமாற்றிவிட அது முயல்கிறது என்ற சந்தேகம் புலிகளிடையே நிலவுவதாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பேட்டியொன்றில் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை அவர்கள் இருதரப்பாரும் தத்தம் இராணுவ நலனகளில் இருந்து பேசுகிறார்களே ஒழிய மக்களைப் பற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை என்று சில தமிழ் பத்திரிகைகளும் , அரசியல்வாதிகளும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனால் இவர்களில் பலர் ஒரு உண்மையைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். மக்களின் அன்றாட நலன்கள் இந்த இழுபறிகளால் பாதிக்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. அதேவேளை இந்த இழுபறிக்குப் பின்னால் உள்ள சிக்கலை இவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

முதலாவதாக, இவர்கள் இப்போது நடந்து கொண்டிருப்பது இரு தரப்பினருக்கும் இடையில் நிரந்தர போர் நிறுத்தம், அரசியல் தீர்வு காணல் என்பவற்றைப் நோக்கி வளர்வதற்கான அடிப்படைகளைப் போடுவதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை என்பதை மறந்து விடுகிறார்கள். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நடக்கும் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திய போராட்டம் பதினைந்து ஆண்டுகளை கடந்துவிட்ட நிலையில் பேசும் இருதரப்பாருக்கும் இடையில் ஐக்கியம் என்பது பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படுவதில்தான் தங்கியிருக்கிறது. அதே நம்பிக்கை இருதரப்பாரும் விட்டுக்கொடுப்பதற்கு தயாராகும் பட்சத்திலேயே துளிர்விடல் சாத்தியமாகும்.

இரண்டாவதாக, இவ்வாறான விட்டுக்கொடுப்பின்போது இருதரப்பாரும் எவ்வெவற்றை விட்டுக்கொடுப்பது என்ற விடயம் எழுவதை கவனிக்க இவர்கள் தவறி விடுகிறார்கள், ஒரு ஸ்தாபனம் என்ற முறையில் புலிகள் பேச்சுவார்த்தை நல்லமுறையில் நடக்கும் என்று மட்டும் நம்பி ஏமாந்து போக தயாராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையல்ல. ஆனையிறவு முகாமை திறப்பதில் தீவிரமாகவும், குறியாகவும் இருக்கும் அரசு பூநகரி பற்றிய பேச்சு வந்தவுடன் மறுப்பது ஏன்? இது அரசு தரப்பிலும் சந்தேகத்தின் அடிப்படையிலேயே இவ்விடயம் கையாளப்படுகிறது என்பதையே காட்டுகிறது.

மூன்றாவதாக, பூநகரியை விட்டுத் தந்தால் நாம் ஆனையிறவு பாதையை அனுமதிப்போம் என்ற பேரத்தில் எப்படித் தப்புக்காண முடியும்? இருதரப்பாரும் ஒருவரில் ஒருவர் சந்தேகம் கொள்ளும் நிலையே நிலவுகின்றதென்ற உண்மை நிலையில் இருந்து பார்க்கையில் இந்தக் கோரிக்கை 'நியாயமற்ற' புதிய கோரிக்கையாகத் தெரியவில்லை.

நான்காவதாக, பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பதை முன்மொழிந்த அரசு, அரசியல் தீர்வை முன்வைக்காமலேயே பேச்சுவார்த்தையை தொடர்கையில் சந்தேகங்

**நாசமறுப்பான்**

கள் வெறும் புலிகளுக்கு மட்டுமல்ல. சாதாரண மக்களுக்கும் எழுவது சாத்தியமே.

பூநகரியை திறக்காமல் ஆனையிறவை திறப்பதனால் இராணுவ ரீதியில் பாதிப்புக்குள்ளாகப் போது அரசை விட அதிகமாக புலிகளே. ஏனென்றால், அவர்களது போக்குவரத்துக்கான கட்டுப்பாடு அதிகரிக்கும். ஆனையிறவு பாதையில் சோதனை நடாத்தப்படும் என்பதால், மக்களோடு மக்களாக புலிகள் நடமாடும் வாய்ப்பை அவர்கள் இழந்துவிடுவர், எனவே, இத்தகைய ஒரு முயற்சி புலிகளை பலவீனமாக்க திட்டமிட்டு செய்யப்படும் முயற்சியே என்று அவர்கள் சந்தேகப்படுவதில் நியாயமிருக்கிறது.

புலிகள் சரியானவர்களா, தவறானவர்களா என்பதல்ல இங்குள்ள விவாதம். அவர்களுடன் பேசப்படப்பட்டபின், அதுவும் ஒரு தவிர்க்க முடியாத தேவை என்று உணர்ந்து கொண்டு புறப்பட்டபின், நல்லெண்ணத்தை வலுப்படுத்தும் விதத்தில் அரசு நடந்து கொள்வதுதான் நியாயம். மாறாக, அவர்களை பலவீனப்படுத்த முயல்வது, சுமூகமான பேச்சுக்கு உகந்ததல்ல!

அரசுக்கு இராணுவ தரப்பில் நெருக்கடிகள் இருக்கலாம். இவ்வாறான நெருக்கடி வெறும் ஜனாதிபதிக்கு மட்டுமல்ல. அது பிரபாகரனுக்கும் இருக்கலாம் என்பதை இவ்விடத்தில் யாரும் மறந்துவிடக் கூடாது. அதுவும், ஆயுதப் போராட்டத்தை தொடங்கி, தானே கட்டியமைத்த அமைப்பின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனது உறுப்பினர்களை இழந்துவிட்ட ஒருவருக்கு தமது சொந்த அமைப்பு பலவீனப்படும் விதத்திலான ஒரு முடிவுக்கு ஒத்துப்போதல் எவ்வளவு சிரமமான காரியம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

திட்டவட்டமான ஒரு மாற்று அரசியல் தீர்வாவது முன்வைக்கப்பட்டிருக்குமானால், அதன் பலத்திலாவது இத்தகைய விட்டுக் கொடுப்புக்களை ஒருவர் ஒரு ஸ்தாபனம் என்ற ரீதியில் த.ஈ.வி.பு. அமைப்புக்குள் நியாயப்படுத்தலாம், அதுவும் இன்னமும் தெளிவாக இல்லாத போது எவ்வாறு விட்டுக்கொடுப்பு சாத்தியம்?

பிரபாகரனது நிலையில் சந்திரிகா இருந்தாலும் இப்படித்தான் கூறியிருப்பார்.

'பையிலுள்ள பலாக்காயைவிட கையிலுள்ள களாக்காய் மேல்' என்பார்கள்.

புலிகளுக்கு இது தெரியாததல்ல.

'கைக்கு வருமுன்னம் நெய்க்கு விலைபேச' புலிகள் தயாரில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இவ்வாறான நிலைமைகளில் மதிநுட்பமும், கெட்டித்தனமும் அல்ல இதயபூர்வமான புரிந்துணர்வே நிரந்தரமான தீர்வைத்தரும் என்பதை மட்டும் கூறிவைக்கலாம்.



சந்தேகப் பேச்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலம்

# காத்திருப்பதைத் தவிர வேறுவழி?

நிஷாந்த

இப்போதெல்லாம் அனேகமாக எனது தமிழ் நண்பர்கள் எல்லோரும் ஒரு வகை அச்சத்துடனேயே வாழ்கின்றார்கள். சில வாரங்களுக்கு முன் எனது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நண்பன் ஒருவனுடன் பியர் அருந்திக் கொண்டிருக்கையில், அவன் சொன்ன வார்த்தைகள் எனது இதயத்தில் இந்த உண்மையை பலமாக உறைக்க வைத்தன. இந்தத் தடவையும் சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில்தான் முடியப்போகின்றன என்பதற்கான சான்றுகள் இப்போதே தெரிய ஆரம்பித்துவிட்டன என்றான் அவன். எத்தகைய அரசியற் கோட்பாடுகளோடும் தன்னை இணைத்துக் கொள்ளாத மிகச் சாதாரணமான ஒருவன் அவன் என்ற போதிலும், நிகழ்வுப் போக்குகளை மணந்து பிடித்து அபிப்பிராயம் தெரிவிக்கும் அளவுக்கு அவனிடம் கூர்மை இருந்தது.

உண்மையில் அவன் தெரிவித்தது சரியே. இந்தத் தீவின் தமிழ் மக்களுக்கு, திரும்பவும் ஒரு ஆபத்து காத்திருக்கிறதோ என்று எண்ண வைக்கும் விதத்திலேயே அண்மைக்கால சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சமாதானத்திற்கான இன்றைய முயற்சிகளை இவ்வாறு அவ நம்பிக்கையுடன் பார்ப்பது சரியா என்று ஒருவர் கேட்கக் கூடும். ஆனால், உண்மையில் எது நடந்து கொண்டிருப்பதாக எமக்குப் படுகின்றதோ அதை நாம் எதிர்கொள்ளத்தானே வேண்டும். இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இப்போது நடந்து கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளையிட்டு திருப்தியாக இருக்கிறார்களா? நான் நினைக்கிறேன் இல்லை என்று. அரசாங்கமும் த.ஈ.வி.புலிகளும் சில வேளைகளில் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், 'கௌரவமான அமைதி' என்று இன்றைய சமூக - ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுவோரால் தெரிவிக்கப்படும் அமைதிக்காக நாம் எவ்வளவு காலம் தான் விவாதித்துக் கொண்டிருப்பது? உண்மையிலேயே 'கௌரவமான சமாதானம்' தான் இன்றைய விருப்பம் என்றால் இந்தக் கருத்தைக் கொஞ்சம் பாருங்கள்.

**''யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கான அனுமதியை த.ஈ.வி.புலிகளிடமிருந்து பெற்றுக் கொண்டதும் தெற்கிலுள்ள நிறுவனங்கள் செய்ததெல்லாம், பல்வேறு தலைப்புக்களில் புலிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதே. பதிலாக அவர்கள் தம்முடன் ஒரு அரசியல் தீர்வினை எடுத்துச் செல்லவில்லை. இத்தகைய வெறும் பேச்சுக்களை நடாத்திவிட்டு திரும்பிவருவதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. உண்மையில் இவர்கள் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஏதாவது ஆலோசனைகளுடன் போய் அங்கு பேசுவார்களானால், அது பயன்மிக்கதாக இருக்கும்''. (கா.மாணிக்கவாசகர் - முன்னாள் யாழ். அரச அதிபர் - லங்காதீப 01.01.1995)**

உண்மையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் அரசியல்வாதிகள் தம்முடன் புலிகளுக்கான பொருளாதார நன்கொடைகளை மட்டுமல்ல, மிகவும் முக்கியமானதும் சிக்கலானதுமாக உள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வாக உள்ளடக்கத்தன்மை வாய்ந்த அரசியல் தீர்வு ஆலோசனைகளின் தொகுப்பையும் எடுத்துச் செல்வதும் அவசியமாகும். பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதில் உண்மையான அக்கறையும் ஈடுபாடும் இருந்திருக்குமானால், இன்றைய ஆட்சியாளர்கள் அன்று எதிர்க்கட்சியில் இருக்கும் போதே அதற்காக திட்டமிட்டிருப்பார்கள். ஐ.தே.க.வினால் உருவாக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்த போது, ஸ்ரீ.ல.சு.க. அன்று என்ன சொன்னது என்பது வாசகர்கட்கு நினைவிருக்கலாம். அவர்கள் தாம் ஆட்சிக்கு வந்ததும் இனப்பிரச்சினையை தீர்ப்போம் என்று கூறியிருந்தார்கள். நாங்களும் அவர்கள் தீர்க்கும் வரை காத்திருக்கிறோம்!

பிரெஞ்சுப் பத்திரிகையாளரான 'லா மொண்டே'க்கு அளித்த பேட்டியொன்றில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி அவர்கள் புலிகள் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதாக தெரிவித்திருந்தார். இதைப் படித்த போது புலிகள் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள் என்பது ஜனாதிபதிக்கு இப்போதுதான் தெரியவந்ததா என்று கேட்கத் தோன்றியது எனக்கு.

மூன்று வருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகைப் பேட்டியொன்றின் போது இனப்பிரச்சினைக்கு ஒரு மிகச்சிறந்த தீர்வை முன்வைக்கப் போவதாக என்னிடம் தெரிவித்திருந்தார் திருமதி சந்திரிகா. அப்போது அவர் ஒரு ஸ்ரீ.ல.சு.கட். உறுப்பினராக இருந்தார். அவரது அந்த 'சிறப்பான தீர்வுக்காக நம்பிக்கையுடன் இன்னமும் காத்திருக்கிறேன் நான். ஒரு தனி நபர் என்ற முறையிலும், அல்லது ஒரு குழு என்ற முறையிலும் எம்மிடம் வேறு மாற்று வழிகள் இருக்கவில்லை - காத்திருப்பதைவிட!'

இப்போது த.ஈ.வி.புலிகளின் பக்கம் பார்ப்போம். இன்று தெற்கிலிருந்து அவர்களை நோக்கிவரும் பிரதான குற்றச்சாட்டு அவர்கள் உண்மையில் சமாதான பேச்சு வார்த்தைக்கு ஒருபோதும் ஒப்பமாட்டார்கள் என்பதாகும். மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரை, அவர் ஒருபடி மேலே போய், புலிகளுக்கு எதிராக யுத்தமிட ஒரு தனியான தமிழ்ப்படைப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (பிரபாகரனைப் போலவே கொலை செய்யப்பட வேண்டியவர்களுக்கு இரகசியப் பிடிவிராந்து இவராலும் அனுப்பப்படுகிறதுண்டு என்றும் தமிழ் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.)

எப்படியாயினும், புலிகள் தாமாகவே முன்வந்து சமாதான மேடையில் வந்து இறங்குகிறார்கள் என்று யாரும் சிறுபிள்ளைத்தனமாக எதிர்பார்க்க முடியாது. த.ஈ.வி.புலிகள் தமது யுத்தத்தையிட்டு பெருமிதம் உள்ளவர்கள் என்பதை நாம் அறிவோம். நாம் விரும்புகிறோமோ இல்லையோ யுத்தம் பற்றி ஒருவர் பெருமிதம் அடைவது என்பது வேறு விடயம். ஆனால் நான் இங்கே குறிப்பிடுவது என்னவென்றால் இதிலிருந்து வெளிக்கிளம்பும் யதார்த்த நிலையை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதைத்தான்.

பிரபாகரன் உண்மையாகவே தமிழ் மக்களின் உரிமைக்காகவே போராடுகிறார் என்றால் அதை நிறைவேற்றுவதற்கான காலம் இப்போது கனிந்துள்ளது. அவரது போராட்டத்தின் மூலமாக, அவ்வுரிமைகளை அடைவதில் தான் அவரது கடமையும், பொறுப்பும் இருக்கிறதே ஒழிய அதை குழப்புவதில் அல்ல. அவ்வாறான குழப்பல் எனது நண்பர்களையோ அல்லது தமிழ் மக்களையோ மட்டுமல்ல, முஸ்லிம் சிங்கள மக்கள் அனைவரையும் கூட மாபெரும் ஆபத்துக்குள்ளாக்கி விடும். இவற்றை யோசிக்கும் போது மிகவும் நம்பிக்கையளிப்பதாக உள்ளது மரணம் ஒன்று அன்றி வேறேதும் இல்லையோ என்ற அச்சம் என்னைத் தொற்றிக் கொண்டிருக்கிறது.

ஆகவே, பிரபாகரன் அவர்களே, நாம் ஆசிய சமூக தத்துவ மரபொன்றில் வந்தவர்கள் என்பதால், ஒரு யுத்த வீரனாகவே வாழ் நாள் முழுவதும் ஒருவர் இருப்பதான ஒரு நிலைமை இருப்பதில்லை என்பதை நன்கு அறிந்து வைத்திருப்பவர்கள் என நம்புகிறேன்.

நான் இந்தக் குறிப்பை பகவத் கீதையில் இருந்து ஒரு சில வரிகளை மேற்கோள் காட்டுவதுடன் நிறுத்திக் கொள்ள விரும்புகின்றேன். உங்களது மதத்தில் - இந்துமதம் - மிகவும் முக்கியமான இந்தப் படைப்பில், நிலையாமை பற்றியும் அமைதிக்கான நம்பிக்கை பற்றியும் குறிப்பிடுவதை இங்கே சுட்டிக்காட்டி கட்டுரையை முடிக்கிறேன்.

''யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட துயரம் அருச்சுனனது சிந்தனையை மூடியிருந்த வேளையில் அவன் சொன்னான்:

''கிருஷ்ணா,! நான் வெற்றியை எதிர்நோக்கவில்லை; சந்தோசத்தை எதிர்பார்க்கவில்லை. எமது அரசினால் எமக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? எமது உயிர்களுக்கும், வாழ்வுக்கும், எமது உடமைகளுக்கும் என்ன அர்த்தம்?

நாங்கள் எமது அசையும், வளங்களையும், பயிர்களையும் அவர்களுக்கு வழங்கியிருந்தும் கூட அவர்கள் இப்போது எங்களுடன் யுத்தம் செய்ய வந்திருக்கிறார்களே.... தமது உயிர்களை துச்சமாக மதித்து....

ஆசிரியர்கள், தந்தையர்கள், தனையர்கள், பாட்டன்மார்கள், பேரர்கள், மைத்துனர்கள் மற்றும் மற்றுமுள்ள உறவினர்கள்......

நான் கொல்ல விரும்பவில்லை. அவர்களைக் கொல்வதன் மூலமாக நான் இந்த மூவுலகையும் ஆட்சி செய்ய முடியும் என்ற போதும்....நான் கொல்ல விரும்பவில்லை

ஒரு நாட்டைப் பிடிப்பதற்காக கொல்வது என்பது எந்த அர்த்தமும் அற்றது!

# சட்டமும் நீதியும் ஆண்களுக்கும் ஆள்பவர்களுக்கும் தானே?

16 வயதுடைய யுவதியான இனோகா கால்லகே மீதான பாலியல் பலாத்காரம் தொடர்பான வழக்கில் பிரபல சினிமா, மற்றும் தொலைக்காட்சி நாடக நடிகர் கமல் அத்தாராட்சி விடுதலை செய்யப்பட்டதன் பின்னணியில் பெரும் சதி இருப்பதாகத் தெரியவருகிறது. இச் சதியின் பின்னணியில் அரசியல்வாதிகள், நடிகர்கள் மற்றும் அத்தாராட்சியின் உறவினர்கள் செயற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவ்வழக்கு விசாரணையின் மஜிஸ்ரேட் நீதிபதி திரையுலகத்தோடு தொடர்புடையவர் என்பதோடு சில நடிகைகளுடனும் நெருங்கிய தொடர்புள்ளவராவர். அவர் கலாநிதி எதிரிவீர சரத்சந்திராவின் மனமே மற்றும் இன்னும் பல நாடகங்களில் நடித்த ஒரு நடிகர். கமல் அத்தாராட்சியின் ரசிகர்.

பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகிய இனோகா கால்லகே திருமலையில் பிறந்தவர். யுத்த சூழ்நிலை காரணமாக அகதி வாழ்க்கைக்குள்ளான குடும்பமொன்றைச் சேர்ந்தவர். இதனால் கொழும்பு வந்து சேர்ந்தார்.

1993 ஒகஸ்ட் 26ம் திகதிக்குள் கிட்டிய தினமொன்றில் இனோகாவை வேலை பெற்றுத் தருவதாகக்கூறி அழைத்துச் சென்று ஹோட்டல் ஒன்றில் வைத்து பலாத்காரம் புரிந்துள்ளார் கமல் அத்தாராட்சி.



பலாத்காரம் தொடர்பான வைத்திய விசாரணை, மற்றும் வழக்கு விசாரணை என்பவற்றை விசாரித்தன் பின் மேற்படி குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே திரைப்படத் தயாரிப்பாளரான பிரிதிராஜ் வீரரட்ன அவர்கள் மஜிஸ்ரேட் நீதிபதியின் அறைக்குள் மீணித்தியாலக் கணக்கில் பேசிக் கொண்டிருந்ததாகச் சாட்சிகள் உண்டு. பொலிஸ் விசாரணை மட்டங்களில் அத்தாராட்சிக்குச் சார்பான வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பணம், மற்றும் வேறு வழிகளிலும் இதை மூடி மறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் விசாரணை அதிகாரிகள் அதற்கு உடன்படாததன் காரணமாக நீதிமன்ற மட்டத்தில் சதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.



மஜிஸ்ரேட் நீதிபதியின் தீர்ப்புக் கூட நீதித்துறை மட்டத்தில் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டது. இவ்வழக்கில் கமல் அத்தாராட்சி விடுதலை செய்யப்படுவது தொடர்பான தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னலேயே அவரது குடும்பம் அத்தகவலைத் தெரிந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. மஜிஸ்ரேட் நீதிபதி மாத்தளைக்கு மாற்றப்பட்ட போதும் தொடர்ந்தும் இந்நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது பலரைச் சந்தேகப்பட வைத்திருக்கிறது. கமல் அத்தாராட்சியை விடுதலை செய்யும் முயற்சியில் பிரபல முன்னணி நடிகர் ஒருவரின் பங்களிப்பும் உண்டு என்றும் தெரியவருகிறது.

பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகும் பெண்கள், அது அவமானம் எனக்கருதி பொதுவாகவே வெளியில் சொல்வதில்லை. அதையும் மீறி தனக்கு நியாயம் கோரிய இனோகாவுக்கு நீதிமன்றமும், சட்டமும் வழங்கிய தீர்ப்பு இது. சட்டமும் நீதியும் எப்போதும் ஆண்களுக்கும், ஆள்பவர்களுக்கும் சாதகமானதுதான் என்பது இதனாலன்றோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் மக்களும் விடுதலைப் புலிகளும்

வ.ஐ.ச.ஜெயபாலன்



வடபகுதி முஸ்லிம் மக்கள் தமது தாய் மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் அழிக்கமுடியாத கறையாகிவிட்ட இப் பாதகத்துக்கு இதுவரை பரிகாரம் எதுவும் காணப்படவில்லை. எனினும் அண்மைக்காலத்தில் வடக்கிலிருந்தும், வடபகுதி முஸ்லிம் அகதிகள் மத்தியிலிருந்தும், முதன்முறையாக உறவினர்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் கைதிகளது கடிதங்களிலிருந்தும் கிடைக்கிற தகவல்கள் மிகுந்த நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

24 அக்டோபர் 90இல் ஒலிபெருக்கி அறிவித்தல் மூலம் தமது சொத்து சுகம் வாய்ப்புகள் அனைத்தையும் கைவிட்டு விட்டு 48 மணி நேரத்துள் தமது தாய் மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என விடுதலைப்புலிகள் காலக்கெடு விதித்திருப்பதை வடபகுதி முஸ்லிம்கள் அறிந்து அதிர்ந்து போயினர். கடற்படையின் கட்டுபாட்டில் இருந்த நயினா தீவையும் மன்னார் வவுனியாவில் இராணுவத்தின் கட்டுபாட்டில் இருந்த பகுதிகளையும் தவிர்த்து ஏனைய பகுதிகள் அனைத்திலிருந்தும் முஸ்லிம்கள் உடமைகளை விட்டு விட்டு உயிர் காக்க ஒடவேண்டி ஏற்பட்டது. கடந்த நான்கு வருடங்களுள் ஒரு சிலர் புலிகளின் கைதிகளாகவும் வேறு ஒரு சிலர் புறநடை அனுமதியுடனும் வடபகுதியில் இருந்துள்ளார்கள்.

எனது இனத்துவ ஆய்வுத்துறை அனுபவங்களில் மிகவும் ஆச்சரியமூட்டும் விடயம் என்னவென்றால் இத்தனை இனரீதியான பாதிப்புகளின் பின்னரும் வடபகுதி முஸ்லிம்கள் இன்றளவும் தமிழர் விரோத நிலைபாடு எடுக்காதமையேயாகும். கட்ந்த தேர்தலின் போது வடபகுதி அகதிகள் அமைப்பு தமிழர்கள் பங்குபற்றாத தேர்தலில் நாங்களும் பங்குபற்றமாட்டோம் என அறிவித்தனர். தேர்தல் பகிஸ்கரிப்பு கள்ள வாக்கு பதிவுக்கு வழிவகுத்த போதும் வெற்றிபெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே முன்னணி அரசியல் ஆய்வாளர் 'தராகி' (D. சிவராம்) தனது ஐலன்ட் பத்தி கட்டுரைகளில் விடுதலைபுலிகள் முஸ்லிம் உறவுகளில் அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறதை பதிவு செய்துள்ளார். சென்ற டிசம்பர் இறுதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புல்மோட்டை முஸ்லிம் கிராமத்தின் மீது இராணுவத்தி ரின் தாக்குதல் இடம் பெற்றது. புல்மோட்டை முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாக இராணுவத்தினரால் குற்றம் சாட்டப்பட்டனர்.

தமிழர் முஸ்லிம் உறவுகளின் வரலாற்றில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலும் வடமாகாணத்திலும் திருமலை மாவட்டத்திலும் மாறுபட்ட சூழல் நிலவி வந்தது என்ற போதும் 1990 விடுதலைபுலிகள் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளின் பின்னர் இப்பகுதிகளிலும் நிலமை மாறுபட்டிருந்தது இந்த வகையில் புல்மோட்டை அபிவிருத்தி முக்கிய கவனத்தை பெற்றது.

*விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது தவறுகளை அமைப்பு ரீதியாக திருத்தி பரிகாரம் தேடாமல் சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் பங்களிப்பு செய்வது சாத்தியமில்லை.*



மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களை பொறுத்து சிங்கள குடியேற்றத்திட்டங்களாலும் நிர்வாக அமைப்பு மாற்றங்களாலும் தங்கள் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அவசியமான சமூக பொருளாதார புவியியல் பின்புலங்களை பறிகொடுத்து விட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் எஞ்சிய வளங்களுக்காக இனரீதியாக மோதிக் கொண்ட சூழல்கள் எழுபதுகளின் நடுப்பகுதிகளில் இருந்தே நிறுவன மயப்பட தொடங்கியிருந்தன. எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து விடுதலைபுலிகள் தவிர்த்து ஏனைய தமிழ் இயக்கங்கள் தமிழ் இனவாத நிலைபாட்டை மறைமுகமாகவும் பின்னர் நேரடியாகவும் எடுக்கத் தொடங்கியிருந்தனர். இதன் எதிர் விளைவாக சிறிய அளவில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் உருவாகும் சூழல் உருவானது. ஐ.பி.கே.எப். விடுதலைப் புலிகள் மோதலுக்கு முன் கிண்ணியாவிலும் காத்தான்குடியிலும் விடுதலைப்புலிகள் ஜிகாத் மீது பாய்ந்த நிகழ்சிகள் இடம் பெற்றன. இச்சம்பவங்கள் விடுதலைப் புலிகள் தரப்பில் அத்துமீறல்கள் இடம் பெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் இவை விடுதலைபுலிகள் முஸ்லிம் மோதல்களாக வளர்ந்திடவில்லை. ஐ.பி.கே.எப் காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் விடுதலைபுலிகளின் உறுதியான ஆதரவுத் தளங்களாக முஸ்லிம் கிராமங்கள் மாறின. விடுதலைப்புலி அமைப்புக்குள்ளும் முஸ்லிம் இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர். இவற்றுக்கு காக்கா, குமரப்பா போன்ற முன்னைய விடுதலைப் புலி தலைவர்களது அணுகுமுறை முக்கியகாரணமாக அமைந்தது.

அதன் பின்னர் விடுதலைபுலிகளின் கிழக்கு மாகாண அமைப்பு கிழக்கு மாகாண மயப்பட்டபோது தமிழ் முஸ்லிம் மோதல்களில் பக்கம் சார்ந்த கிழக்கு மாகாண தமிழர்களது முஸ்லிம் விரோத போக்கும் விடுதலைபுலிகளால் அமைப்பு ரீதியாக உள்வாங்கப்பட்டது. 1990இல் முஸ்லிம் மக்களது ஆதரவை பெருமளவில் பெற்றிருந்த விடுதலைபுலிகள் ஒருசில தமிழ் குழுக்களைக் போலவே ஒருசில முஸ்லிம் குழுக்களும் அரசபடைகளுக்கு ஆதரவாக செயல்படும் என்கிறதை புரிந்து கொள்ள மறுத்தமைக்கு பெருமளவில் உள்வாங்கப்பட்ட முஸ்லிம் விரோத இனவாதமே காரணமாகும். இதன் பின் இடம் பெற்ற பாதகமான முஸ்லிம் படுகொலைகள் உலகம் அறிந்ததே.

வடமாகாணத்தில் இருந்து கிடைக்கிற செய்திகள் விடுதலைபுலிகள் திட்டமிட்ட அடிப்படையில் வடபகுதி முஸ்லிம் அகதிகளை அவர்கள் அவர்களது ஊர்மனைகளின் குடியமர்த்துவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபவது உணர்த்துகின்றன.

முதற்கட்டமாக முஸ்லிம் மக்களது அசையா சொத்துக்கள் மீட்கப்படுவதாகவும் மேற்படி சொத்துக்களில் குடியமர்ந்திருந்த தீவுப்பகுதி அகதிகள் வேறு இடங்களுக்கு நகர்த்தப்படுவதாகாவும் தெரியவருகிறது. முஸ்லிம் அகதிகள் மீள்வருகை ஏற்பாடுகளை நிர்வகிக்க அவசியமான நிறுவனங்கள் கட்டப்படுவதாகவும் அவை ஏற்கனவே வடபகுதி முஸ்லிம் அகதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதாகாவும் வேறு ஒரு தகவல் தெரிவிக்கிறது.

காலம் கடந்தாவது ஒரு வரலாற்று தவறு திருத்தப்படுவது மனதுக்கு நிம்மதி தருகிறது. இந்த நிம்மதி நிலை பெறாமல் போய்விடுமோ என்ற அச்சமும் எழாமல் இல்லை.

விடுதலைபுலிகள் தரப்பில் இருந்து வடபகுதி முஸ்லிம்களது மத, கலாசார விடயங்களில் எவ்வித தலையீடும் இருக்காது என்று தெரிவிக்கப்படுகிறதாம். எனினும் முஸ்லிம் மக்கள் ஏனைய விடயங்களில் தமிழர்கள் போலவே நடத்தப்படுவார்கள். எவ்வித பாகுபாடோ சலுகைகளோ அவர்களுக்கு அனுமதிக்கப்படமாட்டாதாம்.

நான்கு வருடங்களாக சமூக பொருளாதார கலாசாரம் கல்வி சுகாதாரம் என சகல தளங்களில் இருந்தும் அநீதியாக வேரறுக்கப்பட்டு வீசப்பட்ட மக்களது புனர்வாழ்வு மீள்குடியமர்வு நட்டஈடு என்ற வகையில் மட்டும் ஏற்பாடு செய்யப்படக் கூடியதல்ல. குறிப்பிட்ட காலத்துக்கு சமூக பொருளாதார கலாசார விடயங்களில் தொழில், கல்வி கலாசாரம், சுகாதாரம், நிறுவனங்களை மீளமைத்தல் என பல்துறைகளிலும் சலுகைகளுக்கு வடபகுதி முஸ்லிம் அகதிகள் உரித்துள்ளவர்கள் என்பதனை சம்பந்தபட்டவர்கள் உணர்வது அவசியம்.

சிறுபான்மை இனத்தவர் என்ற வகையில் ஊர் பிரதேசமட்ட அரசியல் அதிகார பங்கீட்டுக்கும் நிர்வாக பங்குபற்றுதலுக்கும் மாநிலம் - பிரதிநிதித்துவத்துக்கும் வடபகுதி முஸ்லிம் மக்கள் உரித்துள்ளவர்கள் என்பதும் கவனிக்கபடுதல் வேண்டும்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக வடகாண முஸ்லிம் மக்களது தலையெழுத்து கடந்த காலத்தில் கிழக்கு மாகாண தமிழ் - முஸ்லிம், விடுதலைபுலிகள், முஸ்லிம் உறவுகளினாலேயே நிர்ணயிக்கப்பட்டது என்பதை யாரும் மறந்து விட முடியாது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் சக முஸ்லிம் தற்காப்பு அணிகளுடனும் முஸ்லிம் அரசியல் தலைமையுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல் வி.பு வடபகுதி முஸ்லிம் மக்களது மனதில் பாதுகாப்புணர்வை உருவாக்குவது சாத்தியமில்லை. கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேரூன்றிப் போயுள்ள இனவாததத்தை களைவதற்கும் வடமாகாண முஸ்லிம் மக்களது மத்தியில் பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி உறுதிப்படுத்தவும் இத்தகைய பேச்சுவார்த்தைகள் அவசியம்.

விடுதலைபுலிகள் முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது தவறுகளை அமைப்பு ரீதியாக திருத்தி பரிகாரம் தேடாமல் சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் பங்களிப்பு செய்வது சாத்தியமில்லை. அடிப்படையில் இது கிழக்கு மாகாணத்தில் விடுதலைபுலிகள் முஸ்லிம் உறவும் தமிழர் முஸ்லிம் உறவும் செம்மைப்படுவதிலேயே தங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா – 5

## பெண்கள் பற்றிச் சொன்ன கலைஞர்கள்

பெண்களை பிரதான பொருளாகக் கொண்டு பல கலைஞர்கள் தம் திரைப்படைப்புகளை வெளியிட்டனர். பெண்ணிலை வாத நோக்கில் பெண்களைச் சித்தரிப்பதற்கு தத்துவார்த்த ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் கலைஞர்கள் தம் படைப்புகளை வெளியிட்டனர். இவ்வகையில் பாலச்சந்தர், பாரதிராஜா போன்றோர் குறிப்பிடத்தக்க படைப்புகளை வெளியிட்டனர்.

பாலச்சந்தர் 1970ம் ஆண்டுக்கு முன்னர் தயாரித்த **இரு கோடுகள்** என்னும் திரைப்படத்தில் ஒரு பெண் கணவனை விட்டுக் கொடுத்ததன் மூலம் தியாகப் பொருளாக்கியவர் இவர். 1970ம் ஆண்டில் பாலச்சந்தர் தயாரித்த **காவியத் தலைவி** என்னும் திரைப்படத்தினை நோக்கும் போது அங்கு பணம் ஒன்றையே பிரதானமாகக் கருதி பழி பாவங்களுக்கு அஞ்சாமல் எப்படியும் சம்பாதிக்கலாம் என்று வாழும் ஒருவனுக்கு சந்தர்ப்ப வசத்தால் ஒருத்தி வாழ்க்கைப்படுகின்றாள். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று அடங்கி வாழ்ந்திடாமல் அவனிடம் இருந்து அவள் பிரிந்து விடுகின்றாள். தனது ஒரே மகளுடன் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறாள். இடையூறுகளையும் துன்பங்களையும் வென்று பெண்ணைப்படிக்க வைக்கிறாள். கணவன் என்ற உரிமையைப்பயன்படுத்திக் கொண்டும், குழந்தையைப் பார்க்கும் சாட்டிலும் அடிக்கடி அவன் வந்து போகிறான். அவனின் மகள் தான் என்பது பெண்ணுக்குத் தெரிந்து விடக் கூடாதென்று அவள் விரும்புகின்றாள். இதனைப்பயன்படுத்தி அவன் பணம் பறிக்கிறான். முடிவில் மகளைக் கற்பழிக்க முயலும் போது கணவன் எனப்பாராது அவன் சுட்டுக் கொலை செய்யப்படுகிறான். இத்திரைப்படத்தில் பெண்ணின் தனித்தன்மை பேணப்படுகின்றது. பெண் விடுதலை பற்றிப் பேசாவிடினும் இங்கு பெண்தன் சுதந்திரத்திற்கு எதிராகப் போராடுகிறாள்.

பாலச்சந்தரின் **வெள்ளி விழா** (1972) எனும் திரைப்படம் பெண்ணைத்தியாகியாகக் காட்டுவதாகும். **அரங்கேற்றம்** (1973) எனும் திரைப்படம் பற்றி முன்னர் கூறப்பட்டுள்ளது. அதில் தியாகியாக லலிதா காட்டப்படுகிறாள். லலிதா விபச்சாரி என்று தெரிந்து கொண்டு ஓர் இளைஞன் திருமணம் செய்கின்றான். ஆனால் பாலச்சந்தர் முடிவில் குழப்புகிறார். அவருக்குத் துணிச்சல் இல்லை என்றே கூறலாம். அவர் சமரச வாதியாகவே காணப்படுகின்றார். அவரால் திரைப்படத்தை முற்போக்காக நெகிட்டுச் செல்ல முடியவில்லை. அவளை அவர் பைத்தியக்காரி ஆக்குகிறார். **அவள் ஒரு தொடர் கதை** என்னும் திரைப்படமும் தியாகம் பற்றியே சொல்கிறது. ஓரளவுக்குப் பெண்கள் பிரச்சனையைக் காட்டிய பாலச்சந்தர் என்ன தான் புதுமை இயக்குனர் என அழைக்கப்பட்டாலும் சமரசவாதியாகவே காணப்படுகின்றார். அவருக்குத் தேவையானது எல்லாம் இரசிகர்களின் கண்ணீரும், பணமும் தான். இரண்டும் கிடைக்கும் திரைப்படங்களையே அதிகம் தயாரித்தார். இவர் **நூல்வேலி** எனுந் திரைப்படத்தில் பெண்களின் விடுதலை பற்றி சில கருத்துக்களை முன் வைத்தும் கூட இறுதியில் திருமணமாகும் முன்னரே குழந்தையைப் பெற்றுக் கொண்ட பெண்ணைத் தற்கொலை செய்ய வைப்பதோடு படத்தை முடித்து விடுகிறார். இக்கருத்தை இத்தகைய பெண்களுக்கு

**சுசீலா ரவி**

மரணம் தான் விடுதலை அளிக்கும் என்ற உணர்வைத் தருகிறது. இவ்வாறான கருத்துக்கள் பெண்களுக்கு விடிவைத் தரப் போவதில்லை.

**இரு கோடுகள், தாமரை நெஞ்சம், வெள்ளி விழா, நூல்வேலி** போன்ற திரைப்படங்களைத் தந்த பாலச்சந்தர் 1985ம் ஆண்டில் **சிந்து பைரவி** என்னும் படத்தைத் தருகிறார். ஆனால் இங்கு வரும் பெண் சுதந்திரம் உடையவளாகசமூகம் பற்றிய பிரக்ஞை கொண்டவளாகச் சித்தரிக்கப்படுகின்றாள். சங்கீதம் அறிந்தவளாகவும் அதே நேரம் நாட்டார் பாடல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவளாகவும் பொதுவாகச் சமூகப் பொறுப்புக் கொண்டவளாகவும் காட்டப்படுகின்றாள். சமூகம் பற்றிப் பொறுப்புணர்வு கொண்ட இன்னொரு பெண்ணை **அச்சமில்லை அச்சமில்லை** (1984) எனும் திரைப்படத்தில் காட்டுகின்றார். சமூக சீர்திருத்தவாதி ஒருவனை காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பெண் அவன் அரசியல் வியாபாரியாக மாறும் போது கொலை செய்கிறாள். இத்திரைப்படம் சமூகம் பற்றி விசாலமான பார்வையைப் பெண் கொண்டவளாகக் காட்டப்படுகின்றது. ஓரளவுக்குப் பெண்களின் தனித்தன்மையைப் பேணும் படமாக **அவர்கள்** படத்தைத் தயாரித்த பாலச்சந்தர் 1983ம் ஆண்டு வெளியிட்ட திரைப்படம் **அக்னி சாட்சி**யாகும். அக்கினி சாட்சியின் கருத்து மிகவும் ஆழமானதாகும். கணவன் தினமும் மனைவியை அடித்து நொருக்குகிறான். அத்துடன் மனைவியின் கருவையும் சந்தேகித்து அக்குழந்தையைக் கொலை செய்கின்றான். இந்த அன்றாட சண்டையையும், கொலையையும் கண்டவர்கள் 4 குழந்தைகள். நால்வரில் ஒருத்தியின் மனதை இச்சம்பவங்கள் மிகவும் பாதித்தன. இப்பெண்ணின் மனதைப் புரிந்து கொண்ட அவளது உணர்ச்சியை மதிக்கத் தெரிந்த ஒரு கணவனின் கதா பாத்திரத்தை இங்கு காண முடிகின்றது. இங்கு பெண்மை தன்னை ஏற்றுக் கொள் என்று கெஞ்சவில்லை. அழவில்லை. பெண்மை ஆண்மைக்கு அடிமை இல்லை. தன்னைத் தன் சுய ரூபத்துடன் உணர்ச்சிகளை ஒழிவு மறைவின்றி நியாயமான முறையில் வெளிப்படுத்துகின்றது. போலி அடக்கம் காணப்படவில்லை. தேவையற்ற பணிவு இல்லை. அவள் அவளாகவே தன்னைக் காட்டுகிறாள். கணவனிடத்தில் அவளுக்கு அன்பு, மரியாதை, காதல், தோழமை உண்டு. ஆனால் அடி பணியவில்லை. இது பெண் கதாபாத்திரப் படைப்பில் ஒரு திருப்பமாகும். மனநோய் வைத்தியரிடம் சென்ற போது அவளது மன உளச்சல்களைக் கண்டறிய அவர் முயல்கிறார். அவளை ஒரு படம் வரையச் சொன்ன போது சிலுவையில் அறையப்பட்ட ஒரு பெண்ணை வரைகிறாள். ஒரு சமுதாயத்தில் பெண் எப்படி அடக்கி ஒடுக்கப்படுகிறாள் போன்ற சிந்தனைக் குவியல்களையும், பல கேள்விகளையும் எழுப்பி விடுகிறது அவளின் சித்திரம். அவளின் மனத்தில் நிலைத்திருப்பது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளாகும்.

இங்கு பெண் உரிமை பற்றிக் கதைப்பவள் நோய்க் கூறு கொண்டவளாக சித்தரிப்பது பாலச்சந்தரின் ஒரு சமரசம் தான். 1985ம் ஆண்டில் தயாரித்த **கல்யாண அகதிகள்** எனும் திரைப்படம் பெண்களின் வரதட்சனக் கொடுமையை விளக்குகிறது. 1977ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட **தப்புத் தாளங்கள்** ஒரு விபச்சாரி பற்றிய கதை என முன்னர் குறிப்பிடப்பட்டது. அரங்கேற்றத்தில் விபச்சாரி எப்படி பைத்தியக்காரி ஆக்கப்படுகிறாளோ அதே போல் தப்புத் தாளங்கள் திரைப்படத்திலும் விபச்சாரி சிறைக்கு அனுப்பப்படுவது காட்டப்படுகிறது. ''பாலச்சந்தரிடம் திறமை இருந்தும் படத்தின் பாதி வழியில் செலஞ்சை ஒப்புக் கொள்ளாமல் பின் தங்குவது அவருக்கு நல்லதல்ல'' என்று ஆனந்த விகடன் (10.10.76) இதழில் பி.பி. காரந்த் சொல்லி இருந்த மாதிரி தப்புத் தாளங்கள் படத்திலும் பாலச்சந்தர் தப்பித்துக் கொண்டார். எனினும் பெண்களின் பல்வேறு பிரச்சனைகளைத் தமிழில் பாலச்சந்தர் சொன்ன அளவுக்கு வேறு யாரும் சொன்னதில்லை.

வரும்

## ஒலி புத்தகங்கள் நிகழ்வுகள் சிறு குறிப்புகள்

**கவிதாப்பிரவாகம் ஒலியிழை: மதுரகவி**

**இசை: காண்டீபன், குரல் மதுரகவி, சிவகுமார், தினேஷ் கமலினி செல்வராஜன், பீ.எச்.அப்துல் ஹமீட்**

கவிதாப் பிரவாகம் - ஒலியிழை: மதுரகவி

இசை: காண்டீபன், குரல்: மதுரகவி, சிவகுமார், தினேஷ், கமலினி செல்வராசன், பி.எச். அப்துல் ஹமீட்.

இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது ஒலி இழை எனச்சிறப்புப் பெறுகிற ஒலி இழை எனக்கூறப்படுகின்ற ஒலி இழை இது. ஏற்கனவே 1985இல் யாழ் பல்கலைக்கழகக் கலாசாரக்குழுவினர் கவிதா நிகழ்வினை ஒலி இழையாக வெளியிட்டிருந்தனர். மதுரகவியின் கவிதைகளை பின்னணிஇசையுடன் சிலர் தம் குரலால் வளப்படுத்தியிருந்தனர். இங்கு கவிதைகளுக்கு மெட்டுக் கட்டப்படவில்லை. தமிழில் இது புதிய வடிவம். ஏலவே, கவிதைகள் கவியரங்கத்தில் வாசிக்கப்பட்டன. இங்கு மோசமான கவிதைகளும் குரல் வளத்தால் சிறப்புப் பெறுவதுண்டு. 81, 82 இல் பாரதி நூற்றாண்டு விழா நடைபெற்ற போது எம். ஏ. நுஃமான் வேறு சிலருடன் (சேரன், ஆதவன், சண்முகலிங்கன்) சேர்ந்து பாரதியார் கவிதைகளை கவிதா நிகழ்வாக்கியிருந்தார். இங்கு குரல்வளமும் இசைச் சேர்க்கையும் காணப்பட்டன. 85 இல் சிதம்பரநாதன் அவர்கள் சேரன், ஜெயபாலன், செழியன் முதலானோரின் கவிதைகளை, இசை, குரல், சிறிதளவிலான நிகழ்த்திக்காட்டலினூடாக 'இந்த மண்ணும் எங்கள் நாட்களும்' எனும் கவிதாநிகழ்வை நடாத்தியிருந்தார். இதுவே பின்னர் ஒலியிழையாகவும் வெளியாயிற்று.

அதன் தொடர்ச்சிதான் கவிதாப்பிரவாகம் எனும் ஒலியிழை எனலாம். இங்கு இசை,குரல் என்பவற்றுடன் தொழில் நுட்பமும் கலந்திருந்தது.

இசை சிறப்பாக இருந்தது. கவிதை சிறப்பாக இருந்தது என்பது ஒருபுறமிருக்க இரண்டும் திருப்தி தரும் விதத்தில் இணையவில்லை என்பது பெரும் குறையாகும். சிறுவனின் குரலுடன் (தினேஷ்) ஒரு கவிதை மாத்திரம் நெஞ்சைப் பிழிந்தது.

*''சிறிய குடிலும் அரிக்கேன் லாம்பும்*
*அம்மா கையில் சோற்றுக் கவளமும்*
*எனக்கென்று இனிமேல் என்றைக்குமில்லை*
*மழையில் நனைந்து, புழுதியில் புரண்டு*
*கிளித்தட்டு கீறிக் கெந்தி விளையாடிய*
*தேசம் எனக்கினிச் சொந்தமில்லை*
*பிஞ்சுக் கால்கள் நெஞ்சை மிதித்தும்*
*பூமித்தாய்க்குக் கொஞ்சமும் இரக்கமில்லை''*

இக்கவிதை வரிகள் அற்புதமாக அமைந்திருந்தன.

ஏனைய கவிதைகள் மேற்கூறிய அளவு என்று சொல்ல முடியாவிடினும், கவித்துவத்தாலும், குரல் வளத்தாலும் சிறப்புப் பெற்றது. வர்த்தகக் கலைஞர்களாக விளங்கும் கமலினி செல்வராஜன், பி.எச். அப்துல் ஹமீட் முதலானோரும் தம் கலை ஆளுமையை இதில் சிறப்பாக வெளிக்காட்டினர்.

ஒலியிழையின் இறுதியில் இடம் பெற்ற 'சின்னக் கவிதை' களை மதுரகவி புத்திசாலித்தனமாகத் தவிர்த்திருக்கலாம்.

ஒருமுறை இவ்வொலியிழையினைக் கேட்டல் நலம். புதிய வடிவத்தைக் காணலாம்.

**பேராசிரியர் வித்தியாணந்தன் நினைவரங்கு**
**16 – 01 – 95**
**இராமகிருஷ்ண மண்டபம், வெள்ளவத்தை**

பேரா. தில்லைநாதன் தலைமை வகிக்க பேரா. சிவத்தம்பி அவர்கள் **''வித்தியானந்தன் பாரம்பரியம் கலை இலக்கிய வரலாற்று நோக்கு''** எனும் ஆய்வுக்குறிப்புரை வழங்கினார். க. சண்முகலிங்கம் தொடர்குறிப்புரை ஒன்றை வழங்கினார்.

பேரா. தில்லைநாதன் அவர்கள் வித்தியானந்தனின் அக வாழ்வைக் கதை போல சுவை பட எடுத்துக் கூறினார். பேரா. சிவத்தம்பி அவர்கள் பின்வரும் மூன்று அம்சங்களில் நோக்கலாம் என்றார்.

I தமிழிலக்கிய வளர்ச்சியில் திருப்புமுனை. II ஆராய்ச்சியாளர் என்பதில் சாதனை. III தமிழ் பேசும் மக்களுடன் கொண்டுள்ள இணைவு. இவைபற்றிச் சிறிது ஆழமாகப் பேசினார்.

க. சண்முகலிங்கம் அவர்கள் வாழ்க்கை வரலாறு எழுதுவது பற்றிய இடர்ப்பாடுகளை எடுத்துக் கூறினார். ஆய்வாளர்கள் அகநோக்கில் நின்று எழுதுகிறார்கள். வித்தியானந்தனுக்கும் இத்தகைய ஆபத்து உண்டு என்றார். வித்தியின் பங்களிப்புகள் சரியாகக் கணிப்பிடவேண்டும் என வலியுறுத்தினார். வித்தியானந்தன் மொழிவழித் தேசியத்தை வலியுறுத்திய ஆய்வாளர் எனக்குறிப்பிட்டார்.

பார்வையாளர்களுடனான குறிப்பிடத்தக்க விவாதங்களுடன் இந்நினைவரங்கு சிறப்புப் பெற்றது.

– மகாஜனன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தொடரும் விவாதம் 7

# இனத்தேசியவாதம் இனவாதத்தின் மறுபக்கமல்ல!

**இரா. நித்தியானந்தன்**

> *காலனித்துவ அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் சுயநிர்ணய உரிமையை மார்க்ஸீயம், மார்க்ஸீயமல்லாத முற்போக்கு அமைப்புக்கள் வலியுறுத்தின. லெனின் "அந்நிய அடக்குமுறையை தூக்கியெறி" எனக் கூறினார்.*

> **ஓரினம் அடக்கி ஒடுக்கப்படும் போது அவ்வாழ்வியல் சூழலில் அச்சிற்றினம் தன் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தனது இனக்குறியீடுகளை முன்வைத்து போராடுவதைத்தவிர வேறென்ன வழிமுறை இருக்கமுடியும் என்பதை இதுவரை எவரும் கூறவில்லை. எனவே, அவ்வின அடக்குமுறையில் தவிர்க்க முடியாத வாதமாக இனத் தேசியவாதமே முன்வைக்கப்படுகின்றது**

கடந்த மூன்று சரிநிகர் இதழ்களில் இனவாதம், இனத்தேசியவாதம் என்ற விவாதத் தொடரின் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வாசித்த பின் கட்டுரை ஆசிரியர்களின் கூற்றுக்களில் முரண்பாடுகளும் தெளிவின்மையும் உள்ளதாக நான் கருதுவதால் எனது கருத்து நிலைப்பாட்டினை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் இக்கட்டுரையை எழுதுகிறேன்.

நுஃமான் அவர்கள் தேசியவாதம், இனத்தேசியவாதம் என்ற கருத்துக்களைத் தெளிவாக அடையாளப்படுத்த முயற்சித்த போதும், இனத்தேசியவாதம் , இனவாதம் என்ற பதங்களுக்குள் ஒருமைப்பாட்டைக் காண முயற்சித்திருப்பதன் மூலம் கருத்துக் குழப்பமொன்றை ஏற்படுத்தியுள்ளார். தேசியவாதம் என்பது அடக்கி ஒடுக்கப்பட்ட காலனி மற்றும் ஏகாதிபத்திய நிலைமைகளுக்கு எதிராகத் தோற்றம் பெற்றது என்பது எந்தளவு நியாயமானதோ, அதேயளவு அடக்கி ஒடுக்கும் பேரினவாதத்திற்கெதிரான இனத்தேசியவாதமும் நியாயமானதே. காலனித்துவ சமூகக்கட்டமைப்பில் தேசங்களுக்கு எந்தளவு சுயநிர்ணய உரிமை நியாயமானதோ அந்தளவிற்கு ஒரு முதலாளித்துவ சமூக கட்டமைப்பில் அடக்கி ஒடுக்கப்படுகின்ற இனங்களின் சுயநிர்ணய உரிமையும் நியாயமானதே. இது முன்னைய சோஸலிச நாடுகள் என அழைக்கப்பட்ட சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அவசியம் என்பது நிதர்சனமாகிவிட்டது.

காலனித்துவ அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்புப் 'போராட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் சுயநிர்ணய உரிமையை மாக்சியம், மாக்சியமல்லாத முற்போக்கு அமைப்புக்கள் வலியுறுத்தின. லெனின் ''அந்நிய அடக்குமுறையை தூக்கி எறி'' எனக் கூறினார்/ இது ஏகாதிபத்தியத்திற்கெதிரான சர்வதேசக் கொள்கை, தேசிய பொருளாதாரம், தேசிய கலாசாரம், மக்களின் உணர்வுகள் என்ற அடிப்படையில் கணித்துக் கூறப்பட்டதாகும். ஆனால், அவ்வரசுகள் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னரும் கூட ஏகாதிபத்திய பின்னணியில் தேசிய முகமூடிகளோடு சிற்றினங்களை அரசியல் மற்றும் ஆயுத வகைகளில் அடக்கி ஒடுக்க முற்படும் போது சிற்றினங்களின் உள்ளாற்றல் பேரினவாதத்திற்கெதிராக கிளர்ந்தெழுவதும், அதற்கெதிராக இனத்தேசியவாதங்கள் தோற்றம் பெறுவதும் நடைமுறை சார்ந்த நிகழ்வேயன்றி ஒரு போதும் கருத்துமுதல்வாதமாகாது. எனவே, இந்த வகையில் தமிழ்த் தேசியவாதத்தை இங்கு இனவாதத்தின் மறுபக்கம் என்று நுஃமான் அவர்கள் எவ்வாறு இனங்கண்டார் என்பது புரியவில்லை.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் இனப்பிரச்சினை முதலாளித்துவ சமூகக் கட்டமைப்புக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டுமென்றே மாக்ஸ் கருதினார். இதனாலேயே ஐரிஸ் மக்களின் போராட்டத்தை மாக்ஸ் தீவிரமாக ஆதரித்தார். முதலாளித்துவ நெருக்கடியில் வர்க்கங்கள் கூர்மையடைந்து செல்கின்ற போது இனப்போராட்டம் இக்கூர்மையை தாமதமடையச் செய்யும் என்ற காரணத்தினாலேயே முதலாளித்துவ தேசிய அமைப்புக்குள் அப்பிரச்சினைக்கு கணக்குத் தீர்க்கப்பட வேண்டுமென அவரால் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் இலங்கையின் இனத்தேசிய விடுதலையும், அதற்கான போராட்டங்களும் எந்த வகையில் இனவாதமாகுமென்றும் எனக்குப் புரியவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பேரின ஆட்சியாளர்கள் தமிழ்ச் சிறுபான்மையினர் உரிமைகளை அடக்கி ஒடுக்க முற்பட்ட போது தமிழ் தேசியவாதம் தோன்றியதென்பதை யாவரும் அறிவர். கல்வி, குடியேற்றம், வேலைவாய்ப்பு, காணிப் பங்கீடு என்ற வகையில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்டதை எவரும் அவ்வளவு சீக்கிரமாக மறந்துவிட முடியாது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் அகிம்சா போராட்ட வடிவங்களும் அமிர்தலிங்கத்தின் பேச்சுவார்த்தை அணுகு முறைகளும் தோல்வியடைந்த பின்னரே ஆயுதப் போராட்ட வடிவம் தோற்றம் பெற்றது என்பது தமிழ் தேசியவாதத்தின் பரிணாம வளர்ச்சியையே காட்டுகின்றது. இதைவிட ஓர் அடக்கி ஒடுக்கப்படுகின்ற இனத்தின் அடக்குமுறைக்கெதிரான போராட்டம் எவ்வகையில் அமைய வேண்டுமென்பது புரியாத புதிராகவேயுள்ளது. இவ்வகையான போராட்டம் எந்த வகையில் இனவாதம் என்ற நாணயத்தின் மறுபக்கமாகும்? சிறப்பாகச் சொல்வதென்றால் இனத்தேசியவாதத்தை ஆதரிப்பதென்பது ஒரு தேசியத்தில் வாழும் வர்க்க ரீதியான சிந்தனை உள்ள சகல முற்போக்காளரினதும் பணியாகும். இங்கு இனத்தேசியவாதத்தை ஆதரிப்பது இன அடக்குமுறை, பாரபட்சம் என்பவற்றிற்கெதிரான தேசிய உணர்வினை மேம்படுத்தி பொது ஜனநாயக வேலைத்திட்டத்தில் சகல மக்களையும் ஒன்றிணைத்துக் கொள்வதையே குறிக்கின்றது. இனத்தேசியவாதத்தின் நகர்ச்சி பிரிந்து போகும் இலக்கை அடைய முற்பட்டாலும், அந்நிலை அந்நாட்டின் பேரின மக்கள் அவ்வின ஒடுக்குமுறையினை ஆதரிப்பதாலேயே சாத்தியமாகின்றது. எனவே, இனத்தேசியவாதம் என்பது பிரிந்து போவதையே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கொண்டிருக்கின்றதெனக் கூறமுடியாது.

ஓரினம் அடக்கி ஒடுக்கப்படும் போது அவ்வாழ்வியல் சூழலில் அச்சிற்றினம் தன் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தனது இனக்குறியீடுகளை முன்வைத்து போராடுவதைத் தவிர வேறென்ன வழிமுறை இருக்க முடியும் என்பதை இதுவரை எவரும் கூறவில்லை. எனவே, அவ்வின அடக்குமுறையில் தவிர்க்க முடியாத வாதமாக இனத்தேசியவாதமே முன்வைக்கப்படுகின்றது. நுஃமான் அவர்கள் எந்த அடிப்படையில் தமிழ் தேசியவாதத்தை தமிழ் இனவாதம் என காண முற்பட்டார் என சிந்திக்கும் போது வடகிழக்கு போராட்ட குழுவின் சில இனவாத நடவடிக்கைகளை மனதில் வைத்துக் கொண்டு இவ்வாறு கூற வருகின்றார் என்பது புலப்படுகின்றது. ஆனால், அவற்றில் உண்மைகள் இல்லாமலும் இல்லை. அதற்காக வரலாறாகிவிட்ட தமிழர் போராட்டத்தை இனவாதம் எனக்கூற முற்படுவது ஒரு பெரும் குறையாகவே எனக்குப்படுகின்றது. ஒரு நாடு எந்தளவிற்கு பிற்பட்டதாக இருக்கின்றதோ அந்தளவிற்கு அந்நாட்டின் தேசியவாதங்கள் தனிமைப்படுதல் குறுங்குழுவாத பதாகைகளைத் தூக்கிப்பிடித்தல், இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற தப்பான வழிகளுக்கு அப்போராட்டங்களை இட்டுச் சென்றுவிடுகின்றதென்பது உண்மைதான். அதற்காக அதன் பின்னணியான போராட்டத்தின் 'மூலம்' தப்பானதோ தவறானதோ அல்ல.

மறுபுறம் பல்லின மக்களைக் கொண்ட வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொரளாதார வளங்களைப் பங்கு போட்டுக் கொள்வதில்தான் தேசியவாதம் தோற்றம் பெற்றது என்கிறார் நுஃமான் அவர்கள். அது உண்மையானால் முதலாம் உலகநாடுகள் எனக் கருதப்படுகின்ற ஐரோப்பிய நாடுகளில் தோற்றம் பெற்றுள்ள இனத்தேசியவாதங்கள் எல்லாம் பொருளாதார அடிப்படையில் மட்டும் தோற்றம் பெற்றவைதானா? ஒரு காலத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தை பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிட்டுப் பேசிய நுஃமான் அவர்களின் கூற்றுக்கள் (அலை - சித்திரை 1988) எந்த வகையைச் சார்ந்திருந்தது? ''மரணத்துள் வாழ்வோம்'' போன்ற ஈழ விடுதலைப் போராட்ட கவிதைகளை பாலஸ்தீன கவிஞர் மஹ்மூட் தர்வீஷின் கவிதைகளோடு ஒப்பிட்டுப் பேசியது எந்த நிலைப்பாட்டில்? புலப்பெயர்ச்சி நுஃமான் அவர்களின் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டாதென்றே நம்புகின்றேன்.

மறுபுறம் குகநாதன் எண்ணுவது போல இனத்தேசியவாதத்தின் எல்லை தமிழீழமாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டியதோர் போராட்டமாக ஏன் இருக்கக்கூடாது?

கடந்த 'சரிநிகரி'ல் கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் சிங்கள தேசியவாதம் கட்சி மற்றும் அரசியல் செல்வாக்கினை முதன்மைப்படுத்த ஏற்படுத்தப்பட்டதெனக் கூறுகின்றார். அது ஓரளவு உண்மையாயினும் அதுவே அதன் மூலமல்ல. ஆங்கில மொழி, கிறிஸ்தவ மிஷனரிகளின் நடவடிக்கைகள் என்பவற்றிற்கெதிரான தேசிய உணர்வு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தமது கட்சியை அமைப்பதற்கு முன்னரேயே இலங்கையில் செல்வாக்குப் பெற்று வளர்ச்சி பெறலாயிற்று. இச்சமயத்திற்கேற்ற கடிவாளத்தை மாத்திரமே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க கைப்பற்றினார் என்பதே உண்மை நிகழ்வாகும். ஆனால் ஒன்றினை இங்கு சிறப்பாக கூறுவது பொருத்தமானது. காலனியின் விடுதலைப் போராட்டங்களில் மதங்களின் பங்களிப்பை லெனின் என்றும் குறைத்து மதிப்பிடவில்லை. இலங்கையில் அது சுதந்திரம் பெற்றபின் நிகழ்ந்ததாயினும் சுதேசிய இனங்களுக்கும் மதங்களுக்கும் அதன் போராட்டங்கள் ஊறுசெய்தமையாலேயே நாம் அதனைக் குறைத்து மதிப்பிட வேண்டியதாயிற்று.

கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் யாழ் தேசியவாதம் என்பதாகவெல்லாம் இதுவரை கேள்விப்படாத பதங்களில் குழம்பி, சிங்கள பௌத்த பெரும்பான்மை மனங்கள் எப்படி செயல்படுகின்றனவோ அதையொத்த செயல்பாடுகளில் தான் தமிழ்த்தேசியவாதம் செயல்படுகின்றதென்று அபத்தமாகக் கூறுகின்றார். தமிழ் தேசியவாதம் இலங்கையின் சிங்கள பெரும்பான்மை இனத்தின் உரிமையைப் பறித்துவிட்டதென்பதுதானே கொன்ஸ்ரன்ரைன் கூற்று? இப்படி தமிழ் தேசியவாதத்தை எடைபோடுவது மிகவும் கேலிக்கூத்தானதோர் செயலாகுமென்றே கருத வேண்டியுள்ளது. வெளிப்படையாகக் கூறுவதாயின் தமிழ் போராட்டக் குழுவின் செயல்பாடுகளை தமிழ் தேசியவாதத்தோடு முடிச்சுப் போட முனைவது இவர்களை பிழையான இடத்திற்கு இட்டுச் செல்கின்றது.

இன முரண்பாடுகளுக்கும் இன அடக்குமுறைக்கும் விமோசனம் கூறவரும் நுஃமான் அவர்கள் இனவாதத்தை முறியடித்து உண்மையான சமத்துவத்தையும் சமூக நீதியையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தி துரித பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலுவதே நிலையான சமாதானத்துக்கும் விடுதலைக்கும் வழிவகுக்கும் என கூறுகின்றார். வளங்கள் பற்றாக்குறையுள்ள பல்லின மக்கள் வாழும் போட்டிச் சந்தை நிலவும் முதலாளித்தவ நாடொன்றில் இது எவ்வாறு சாத்தியமாகும்? வரலாற்றில் எங்கு சாத்தியமாகியது? இது எப்படியிருப்பினும் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது, தமிழர்களின் நீண்டகால அகிம்சைப் போராட்டங்களும் பின்னைய ஆயதப் போராட்டங்களும், சிங்கள பெருந் தேசிய இனவாதங்களும் இன முரண்பாடுகளின் உச்சக்கட்டத்தில் தத்தமது நிலைகளைக் கடந்து ஓர் அரசியல் சமநிலையை அடைய முயற்சிக்கின்றதென்பது. அது இலங்கையின் தமிழர்கள், முஸ்லிம்கள் என்போரை பெருந்தேசிய இனத்திற்கு சமனான அரசியல் திட்டரீதியான சமநிலை ஒன்றிற்கு இட்டுச் செல்ல முயல்கின்றதென்பதும் வெற்றியே. ஆனால், அதுவே இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டதென்று கருதலாகாது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் பிரதேசமாக முத்திரை குத்தப்பட்ட கிறிஸ்லஸ் பார்ம் எஸ்டேட்

கொட்டகலை - கிறிஸ்லஸ் பார்ம் எஸ்டேட்டிலிருந்து (Chrystlas Farm Estate) கைது செய்யப்பட்ட இளைஞர் ஆறுமுகம் முத்துவிநாயகம் (வயது 29) தோட்டத்தில் வேலை செய்யும் சராசரி இளைஞன். வேலை நேரம் போக காய்கறித் தோட்டம் செய்து வருபவர். இப்போது இவர் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கிறிஸ்லஸ் பார்ம் சென்று அவரது பெற்றோர்களை சந்தித்து இது பற்றி கேட்ட போது அவரது தாய் இப்படி தெரிவித்தார்.

''அன்றைக்கு நவம்பர் முதலாம் திகதி; தீபாவளிக்கு முதல் நாள் காலை 5 மணியிருக்கும் வேலைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக எழுந்து தேனீர் கலக்கிக் கொண்டிருந்தேன். பின்வாசல் கதவு பலமாக தட்டப்பட்டது. 'யாரது....' என்று கேட்டுக்கொண்டே போய் கதவை திறந்தேன். வெளிச்சம் பட்டு கண் கூசியது. பொலிஸார் டோச் லைட்டை அடித்துக்கொண்டே 'எங்கே ரவி?' என்றனர். என் மகன் முத்துவிநாயகத்தை ரவி என்றுதான் அழைப்போம். நான் பதட்டத்துடன் என் கணவரை எழுப்பினேன். பொலிசார் அவசரப்படுத்தினார்கள். எனது மகன் திருமணம் முடித்து இரண்டு வருடங்கள் தான் ஆகிறது. ஒரு பெண் குழந்தையும் இருக்கிறது. அவனின் புதியவீடு எங்களின் அடுத்தவீடே. அவனின் வீட்டிற்கு விரைவாக கூட்டிச்சென்று கதவை தட்டித் திறந்தோம். மகன் எழுந்து வந்து திறந்தான். அவனுக்கும் டோச் லைட் அடிக்கப்பட்டது. அவன் 'யாரது .... லைட் அடிக்கிறது' எனக் கேட்டான்.



ரவியின் தாயின் அரவணைப்பில் ரவியின் குழந்தை

'நாங்கள் ஹட்டன் பொலிஸிலிருந்து வருகிறோம்...... நீர் தானே ரவி... வாரும் எம்முடன்' என அழைத்தனர். மகன் சேட்டை மாட்டிக் கொண்டு கிளம்பினான். நாங்களும் பின்னாலேயே அழுது கொண்டு சென்றோம், அவன் எந்த பொல்லாப்புக்கும் போறவனில்ல சாமி, அவனை ஏன் கூட்டிக்கிட்டுப் போறீங்க, அவனை விட்டிடுங்க சாமி....' என கதறினேன். விசாரித்து விட்டு விட்டுவிடுவோம் என்றனர். ஜீப் அருகே சென்றடைந்ததும் அங்கு இன்னொருவன் விலங்கிடப்பட்ட நிலையில் முகம் தெரியாத அளவு தலையை குனிந்தபடி நின்று கொண்டிருந்தான். பொலிசார் அவனிடம், இவன் தானே? என கேட்டனர். அவன் தலையை ஆம் என்பதைப் போல் அசைத்தான். இருவரையும் ஏற்றிக்கொண்டு ஜீப்புறப்பட்டது. தலையசைத்து காட்டியவன் அடையாளம் காட்ட வந்தவன் என்றும் அவனது பெயர் லோகேஷன் என்றும் பின்னர் அறிந்தோம்.

பொலிசாரிடம் சென்று எவ்வளவோ கெஞ்சியும் விடவில்லை. ஏற்கனவே நடந்த ஒரு கொள்ளைச் சம்பவத்தில் இவன் சம்பந்தப்பட்டிருகிறான் என பொலிசார் கூறுகின்றனர். ஆனால் அவன் எவ்வளவு தூரம் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கிறான் என்பதும், எவ்வளவு அப்பாவி என்பதும் எங்களுக்குத்தான் தெரியும்.

என் மகனை பிடித்துக் கொண்டு போய் இன்றோடு நூறுநாளுக்கும் மேலாகிறது. இன்னமும் விட்டபாடில்லை. எங்களை கவனிக்க அவன் ஒருத்தன் மட்டும் தான் இருந்தான். அவனின் மனைவி மாசமாயிருக்கா இந்த நேரத்திலயும் அவன் இல்லை''. என்றார்.

இந்த கிறிஸ்லஸ் பார்ம் எஸ்டேட்; வழமையாக மலையகத்தில் ஏதாவது சலசலப்புக்குள்ளாகும் காலங்களிலெல்லாம் கண்காணிப்புக்கும், சோதனைக்கும், கைதுகளுக்கும் உள்ளாக்கப்படும் இடம். இதுபற்றி அந்த தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.எஸ்.சுப்பிரமணியம் கருத்து தெரிவிக்கும் போது,

''இந்த தோட்டம் கடந்த காலங்களில் எல்லோர் வாயிலும் பேசப்பட்ட இடம். 1991இல் கொழும்பில் நடந்த கூட்டுப்படைத் தலைமையகம் (JOC) குண்டு வெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரி என சொல்லப்பட்ட வரதன் பிடிபட்டது இந்தத் தோட்டத்தில் தான். வரதன் அன்று இங்கு மறைந்திருந்த போது பொலிசார் சுற்றிவளைத்து பிடிக்க முற்பட்டனர். வரதன் பொலிசாரையும் தாக்கி விட்டு சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டான். அதைத் தொடர்ந்து இந்த 'கிறிஸ்லஸ் பார்ம்'மிலுள்ள எல்லா இளைஞர்களையும் சந்தேகித்தனர். அன்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இங்கிருந்து கைது செய்யப்பட்டனர். குறிப்பாக இந்த தோட்டத்தில் மலையக மக்கள் முன்னணியுடன் தொடர்புடைய பலர் கைது செய்து சில காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அதற்குப்பின்னரும் பல தடவைகள் இந்த தோட்டம் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டது. எங்கள் அடையாள அட்டைகள் யாழ்ப்பாண அடையாள அட்டைகள் போல் கவனிக்கப்படுகிறது. வெளியில் பொலிசாரின் சோதனைக்கு உள்ளாக்கப்படும் போது எங்களது அடையாள அட்டையில் கிறிஸ்லஸ் பார்ம் என்றதைக் கண்டவுடன் ''ஆங்... கிறிஸ்லஸ் பார்ம் நேத... கொட்டின்கே ஏரியா நேத..... வரதன்கே ஏரியா நேத'' (புலிகளின் ஏரியா அல்லவா. வரதனின் ஏரியா அல்லவா?) என கேட்கின்றனர். சில வேளை கூட்டிக் கொண்டு போய் விடுகின்றனர்'' என்றார்.

அது தலவாக்கலை பகுதி. தலவாக்கலை தோட்டத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள அந்த பிரதான வீதியோரத்தை தாண்டும் ஒவ்வொருவரும் நெஞ்சு நிறைந்த பீதியுடனேயே அதை தாண்டுகின்றனர். காரணம் அங்கு அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் தடை முகாம். அந்த தடை முகாமைச் சேர்ந்த பொலிசாரின் சோதனை, விசாரணைகளுக்குள்ளால் போய்வரும் எவரும் 'இங்கும் தொடங்கிவிட்டார்கள்' என்று எரிச்சல் படாமல் வந்ததில்லை!

சென்ற வருடம் யூலை மாதத்தின் ஒரு நாள் அந்தத் தடை முகாமைச் சேர்ந்த பொலிசார் அந்த வழியில் வந்த 23 வயதையுடைய ஒரு இளைஞனை விசாரித்தனர். தன்னிடம் அடையாள அட்டை இல்லை என அவன் கூறியதைத் தொடர்ந்து வாக்குவாதம் தொடங்கியது. வழமையான இவ்வாறான சோதனை, திட்டல், தூஷண வார்த்தை என்பவை யாருக்குமே எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தத்தான் செய்யும். அடிக்கடி இவ்வாறான விசாரணைகட்கு முகம் கொடுத்து வந்த அந்த இளைஞன் அன்றைய விசாரணையின் போது பாவிக்கப்பட்ட வார்த்தைகளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாகிவிட்டான். இளம் வயது. வார்த்தைகளுக்கு கட்டுப்படாத கோபம் அவனுக்கு. இறுதியில் பொலிசாரை அவன் தாக்கிவிட்டான். கணநேர ஆவேசத்தில் தாக்கினாலும் நெஞ்சுப்பயம் சும்மா விடவில்லை. அடுத்தது என்ன நடக்குமோ என்ற பீதி, அவன் கால்களை வேகமாக இயங்கச்செய்தன. ஓடினான் பொலிசாரும் விரட்டிச் சென்றனர். ''புலி........ புலி....... ஓடுறான் பிடியுங்கோ'' என சிங்களத்தில் கத்திக் கொண்டே துரத்தினார்கள் பொலிசார். அவன் பின்னால் வீதியில் நடமாடிய ஏனைய சனங்களும் ஓடினர். அவன் பிடிபட்டான். அவனை அடித்தும் இழுத்தும் சென்றனர் பொலிசார்.

அந்த இளைஞனை துன்புறுத்தி விசாரணை செய்த பொலிசார்; அவ்விளைஞனுடன் தப்பிச் சென்ற 25 வயதுடைய இன்னொரு இளைஞனையும் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் விடுதலைப்புலிகளைச் சேர்ந்தவர்களென்றும் அதற்கான பல ஆதாரங்களை கைப்பற்றியிருப்பதாகவும் T.56 ரக இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டும், கைத்துப்பாக்கிகள் இரண்டும், கிரனைட்டுக்கள் பந்தும், இரு ரகங்களைச் சேர்ந்த 500 துப்பாக்கிரவைகளும், சையனைட் மருந்து குப்பிகள் ஐந்தையும் இதுவரை அவர்களிடமிருந்து எடுத்துள்ளதாகவும் விசாரணையை தொடர்ந்து நடத்தி வருவதாகவும் அறிவித்தனர்.

மேற்படி செய்தி வெளியானதைத் தொடர்ந்து மலையகத்தில் பீதி பரவியது. ''இவன்கள் திரும்பவும் பொடியன்களை புடிக்கத் திட்டமிடுராங்கள்'' என்ற பீதி கலந்த கதை பரவியது. எதிர்பார்த்ததைப்போல் பெருமளவு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். குறிப்பாக செப்டெம்பர் தொடக்கம் டிசம்பர் வரை இக்கைது பெருமளவு நடந்தது. டிசம்பர் மாதமளவில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டோர் போக தடுப்பில் உள்ளோரின் எண்ணிக்கை 28 எனத் தெரியவந்தது.

இந்த கைதுகள் பற்றி சிங்கள



மொழியில் பெருமளவு பிரச்சாரங்களை மேற்கொள்ள எண்ணிய நுவரெலிய பொலிசார் திவயின, லங்காதீப ஆகிய பத்திரிகைகளை மட்டும் அழைத்து இது முழுக்க முழுக்க 'புலிகளின் செயற்பாடுகளே' என தொடர்ச்சியாக எழுதி வெளியிடும் படி தெரிவித்துள்ளார்கள்.

பொலிசாரிடமிருந்து இது தொடர்பான தகவல்கள்ளப் பெற்றுக் கொண்ட பத்திரிகைகளும் பொலிசாரின் ஆலோசனைப்படியே எழுதினார்கள். 'த ஐலன்ட்', 'திவயின', 'லங்காதீப' போன்ற பத்திரிகைகளில் இதுபற்றி வெளிவந்த செய்திகள், கட்டுரைகள் என்பவை மிகவும் இனவாத ரீதியிலும் பொறுப்பற்ற முறையிலும் வெளியிடப்பட்டிருந்தன. டிசம்பர் 25ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் 'எதிர்காலத்தில் மலையகம் புலிவாயில் சிக்குமா?'' என வெளியிடப்பட்ட கட்டுரையானது அங்குள்ள நிலைமையை ஊதிப்பெருக்கி மிக மோசமாக சித்திரித்திருந்தது. அச்சித்திரிப்பின் பின்னணியில் பொலிஸ் தரப்பே இயங்கியிருந்தது பலருக்கு தெரியாத செய்தி!

பொலிசாரின் தரப்பில் இன்று இது பற்றி தெரிவிக்கப்படும் தகவல்கள் இவையே:

மலையகத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் மேற்படி இளைஞர்கள் இணைந்துள்ளனர். இவர்கள் அனேகமாக தலவாக்கலை, டிக்கோயா, கொட்டகலை, பொகவந்தலாவ, ஹட்டன், நுவரெலியா, நானுஓயா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சியில் 3மாதம் ஆயுதப் பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மலையகத்தில் (ULO - Up Country Liberation Organization) 'மலையக விடுதலை முன்னணி' எனும் இயக்கமொன்றை ஏற்படுத்தி இயங்கிவந்திருக்கிறார்கள். இவர்களது அடிப்படை நோக்



ஓ.ஏ.ராமையா



பெ.சந்

## இளைஞர்கள் கைது, தேசியவாதம் ப

(ஓ.ஏ.ராமையா - செங்கொடிச்சங்கத்தின் பொதுச்செயலாளர்.)

''சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோரில் 90%க்கும், அதிகமானோர் நிரபராதிகளே! வடகிழக்குக்கு போய் வந்தாலும் கூட அதுவே கைதுக்கான ஆதாரமாகிவிடுகிறது இந்த பொலிசாருக்கு. இவ்வாறு குற்றம் செய்யாத நிரபராதிகள் பலர் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். ஒன்று முன்னைய அரசாங்கத்தோடு - ஒப்பிடும் போது ஓரளவு பரவாயில்லை.

மலையகத்தில் தீவிர தேசியவாதம் இருப்பதாக ஒப்புக்கொள்ள முடியாது. அப்படி ஒன்று தோன்றுவதானால் அது எப்போதோ உருவாகியிருக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் இதற்கு முன்னர் எத்தனையோ தடவை இருந்தது. மேலும் மலையக மக்களின் இன்றைய பிரச்சினையை தேசியவாத பிரச்சினையாக இனங்காண முடியாது. அவர்கள் இன்று பிரதானமாக எதிர்நோக்கும் பிரச்சினை தோட்ட முதலாளிகளால் ஒடுக்கப்படுவதே. அது தொழிற்பிரச்சினை. மலையக மக்களில் பெரும்பாலானவர்கள் தொழிலாளர்கள். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தோட்டத் தொழில் சார்ந்த வர்க்கப்பிரச்சினையே.

''வடக்கில் எழுந்த ஆயுதம் தாங்கிய தீவிர தேசியவாதத்திலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ல் 'மலைநாடு'
நாடு உருவாக்கு
த்தின் தலைவர்
டைய அருணாச
னும் இளைஞர்.
27ம் திகதி கைது
இவ்விளைஞன்
புலி உறுப்பின
க்குக்கு சென்று
புதப்பயிற்சியை
ட்டு மீண்டும்
சேர்ந்துள்ளா
ா கூறுகின்றன.

என்றும் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவில் 18 - 25 வயதுக்கு இடையிலான இளைஞர்களே உள்ளனர். இவர்களோடு பல இளைஞர்கள் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள், பல தோட்டங்களிலிருந்து இளைஞர்கள் திடீரென்று தலைமறைவாகிவிடுகின்றனர். இவர்கள் வடக்கிற்கு சென்று பயிற்சி பெற்று திரும்பி வந்து தங்களது வேலைகளை ஆரம்பிக்கின்றனர். நிதிதிரட்டலுக்காக இவர்கள் பல கொள்ளைச் சம்பவத்தின் போது தங்களை EPDP இயக்கம் என இவர்கள் கூறிக்கொண்டுள்ளனர். இது போன்று பொகவந்தலாவ பகுதியில் எஸ்டேட் ஒன்றில் நடந்த கொள்ளைச் சம்பவமும் இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவை பொலிசார் தங்களது ஊகத்தை ஆதாரப்படுத்த சொல்கிற தகவல்கள்.

இது தவிர தோட்டப்பகுதியில் தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட

# ...லையகக் கைதுகள்:
# ...ரவாதிகளாக்கப்படும்
# ...ளைஞர்கள்?

ன நடைமுறை
3 பிரிவுகளைக்
. அவற்றில் முத
ன உறுப்பினர்
...ண்டாவது
புதப் போராட்ட
நிதிதிரட்டுதல்,
நம் சேகரித்தல்

ளைச்சம்பவங்களை திட்டமிட்டு நடத்தியுள்ளனர். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 19ம் திகதியன்று அகரபத்தனை - அல்பியன் எஸ்டேட்டில் (ALBION ESTATE) நடந்த கொள்ளைச் சம்பவமும் இவர்களாலேயே நடத்தப்பட்டிருந்தது முகமூடி அணிந்து ஈடுபட்டிருந்த இக் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் திட்டமிட்டு நடத்துவதும் இவர்களது வேலைத்திட்டமாக இருக்கிறது என்றும், கடந்த வருடம் செப்டெம்பர் 14ம் திகதி பொகவந்தலாவ - லெட்சுமி தோட்டத்தில் நடந்த வேலைநிறுத்தத்தையும் அங்கு பெண் தொழிலாளர்கள் பலர் தோட்ட அதிகாரிகளை தடுத்து வைத்து செய்த போராட்டம் இவ்விளைஞர்களின் வழிகாட்டலிலேயே மேற்கொள்ளப்பட்டது என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

''பொலிசார் இந்த விசாரணையை இது புலிகளின் வேலையே'' என அழுத்திக் கூறுவதற்காக ஆங்காங்கு கிடைக்கும் சிறு சலசலப்புக்களையும் துணைக்கு சேர்த்துக் கொள்கின்றனர்'' என்றகிறார் மலையகத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி.

வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவ்விளைஞர்கள் இன்றுடன் 100 நாட்களுக்கும் மேலாகியும் தடுப்புக்காவலிலேயே வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் குற்றவாளிகள் என்பதற்கு தம்மிடம் போதியளவு ஆதாரங்கள் இருப்பதாகக் கூறும் பொலிசார், இவர்களது விசாரணைகளை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்து முடிக்காமல் இழுத்தடிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

தந்தை மேலும் குறிப்பிடுகிறார்.

இதைவிட கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் பலர் பிள்ளைகளின் விடுதலைக்காக சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், தொழிற்சங்க தலைவர்களிடமும் முறையிட்ட போதும் அவர்கள் இவ்விடயத்தில் ஓடி ஒழிகிறார்கள் என்றும், தமிழ் பிரதி அமைச்சர் ஒருவரிடம் ஒரு தகப்பன் சென்று ''என் புள்ள ஒங்க கட்சிக்காக வேலை செஞ்சதுனாலதான் அவன பயங்கரவாதின்னு சொல்லி இழுத்திட்டு போயிட்டாங்க. அவனுக்காக நீங்க பேசி விடுதலை செய்ய வைங்க சாமி'' என கண்ணீர் வடித்த போதும் அந்த அமைச்சர் ''அவன் என்ட கட்சியில்ல, சம்பந்தப்பட்ட கட்சிய போய் பாருங்க'' என்று விரட்டி விட்டாராம்.


கைது செய்யப்பட்ட இளைஞர்களில் பலர் 'மலையக மக்கள் முன்னணி'யில் இருந்தவர்களென்றும் அவ்வமைப்பின் அரசியல் வேலைகளில் ஈடுபட்டவர்கள் என்றும் தெரியவருகிறது. ஆதாரங்களுடன் பிடிபட்டதாக கூறப்படும் இளைஞர்களில் இருவர் சந்திரசேகரனின் அருகிலேயே (சிறைக்குச் செல்வதற்கு முன்) இருந்தவர்களென்றும் பெயர் குறிப்பிட விரும்பாத சிலர் தெரிவிக்கின்றனர்.

மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த முக்கிய நபரொருவரிடம் ''இந்த இளைஞர்களது விடுதலைக்காக ஏன் இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை?'' என கேட்ட போது அவர் ''தோழர், இது டேஞ்சர்..... மிச்சம் பேரு ஆயுதங்களோட பிடிபட்டிருக்காங்க, நாங்க தலையிட்டா எங்களையும் சந்தேகப்படுவாங்க. எங்கட கடந்த கால சம்பவங்களாட தொடர்புபடுத்தப் பாப்பாங்க....'' என்கிறார்.

அவரது பதிலைப்பற்றி பேசிக் கொண்டிருந்த மலையக மக்கள் முன்னணியுடன் மனமுறிவுற்றிருக்கும் இன்னொருவர் இவ்வாறு ஆத்திரத்துடன் பேசினார்: ''இவங்கள் எல்லாரும் பயங்கரவாதிகள்னு முத்திரை குத்தப்பட்டு உள்ளுக்க இருக்கிற நேரம் அவங்களுக்காக கத்தினது நாங்க....... நாங்களும் எந்த நேரமும் சந்தேகத்துக்குள்ளாகிற ஆட்கள். அப்படியிருந்தும் நாங்க பயப்பட இல்ல. ஆனா இன்னைக்கு அவங்கட பிழைப்புவாதத்தையும் இருப்பையும் பாதுகாக்க அவங்கட மக்களின்ட விடுதலைக்கு குரல் கொடுக்க பயப்படுறாங்க. ஆனா ஒன்னு.... இனி இவங்க அவுட். இவங்களை இனி நம்பேலாது... இவங்களும் இன்னுமொரு தொண்டமான் கூட்டந்தான்'' என்கிறார்.



...சகரன்



தம்பையா

## ...வளர்ந்து வரும் தீவிர
## ...றி இவர்கள்...

...ணணியின் தலை
...மப்பு நிர்மாணத்
...மான பெ.சந்திர
...சந்தித்த போது,
...செய்யப்படுவது
...னால், கடந்த அர
...பற்றிய அணுகு
...ைத்தில் கொள்ள
...வு மோசமான
...த்திடம் இல்லை.
...ற்றி நான் பாது
...சரிடம் கதைத்தி

...சேர்ந்தவர்களே
...கிறார்கள் என
...அவர்கள் எமது
...வி வகிப்பவர்க
...ாளர்களாகவோ
...ளாகவோ கூட

...ம் தேசியவாதம்
...ல், வெறும் ஆர்
... இருந்தால்
...ன ஈர்ப்பை மாத்
...டு முன்னேற
...மான நடவடிக்
...சமடையச் செய்
...போரையும் ஈடு
...யாக இருக்கும்'

**புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு தம்பையா**

''தற்போது இடம்பெற்று வரும் கைதுகள் மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை. கடந்த காலங்களில் ஆட்சி புரிந்த யு.என்.பி. அரசாங்கம் எந்த சட்டங்கள் அடக்குமுறைகள் என்பவற்றைப் பயன்படுத்தி கைதுகளைத் தொடர்ந்ததோ, அதே சட்டங்கள், அடக்குமுறைகள் என்பவற்றைத் தான் இந்த அரசாங்கமும் செய்கிறது என்றால் அர்த்தமில்லை. சென்ற அரசாங்கத்திலிருந்து மாறுபட்ட ரீதியிலேயே இந்த அரசாங்கம் செய்யும் என்ற எதிர்பார்ப்பிலேயே மலையக மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினர். அதைப் பொய்த்துவிடச் செய்யக்கூடாது.

இந்த கைதுகள் பற்றி இன்னமும் எந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ குரல் கொடுக்காதது வருந்தத்தக்க விடயம்.

மலையகத் தேசியவாத கோரிக்கைகள் எந்த வடிவத்திலும் எழலாம். அந்த கோரிக்கைகளை ஆராய்ந்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக அதை அடக்க முயற்சித்தால் அது மோசமான வடிவம் பெற்றுவிடும். கடந்த காலங்களில் வடகிழக்கில் ஏற்பட்ட அனுபவம் இது''

## என்.சரவணன்

''விசாரணைக்கென்று 180 நாட்கள் வரை பொலிசாருக்கு தடுப்புக் காவலில் வைக்க சட்டம் இடமளிக்கிறது. இதை சாட்டாக வைத்துக் கொண்டு எந்தவொரு குற்றத்துக்கும் சம்பந்தமில்லாத எங்களது பிள்ளைகளை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவரது தந்தை''.

''வழக்கறிஞர்களைக் கேட்டால் 'பொலிசார் நீதிமன்றத்துக்கு உங்கள் பிள்ளைகளைக் கொண்டு வரும்வரை எங்களால் வழக்கு தொடர்வது சாத்தியமில்லை. பொலிசார் விசாரணைகளை முடிக்கும் வரை நீதிமன்றத்துக்கும் கொண்டு வரப்போவதில்லை என்று சொல்கிறார்கள்'' என அத்

மலையகத்தில் பல இடங்களில் இன்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பல சோதனை முகாம்கள், காவலரண்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை கடக்கும் வரை பலரின் மனம் படபடத்துக் கொண்டிருக்கும். குறிப்பாக இச்சோதனை முகாம்களை ஹட்டன், நுவரெலியா, றாகல, பொகவந்தலாவ, தலவாக்கலை பகுதிகளில் அதிகமாகக் காணலாம். 1991 மத்தியில் கொழும்பில் JOC (கூட்டுப்படைத் தலைமைய

→15



## "புலிகளுடன் எங்களை முடிச்சு போட முனைகின்றனர் பொலிசார்"

### டொக்டர் சாந்தகுமார்

புதிய ஜனநாயக முன்னணி (New Democratic Front) யைச் சேர்ந்த டொக்டர் சாந்தகுமாரும் இச்சம்பவத்தின் சந்தேக நபர் என்று கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கிடைத்த ஆதாரங்களில் - குறிப்பு புத்தகமொன்றில் சாந்தகுமாரின் பெயர் இருந்ததைக் கொண்டே இவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் டிசம்பர் 10ம் திகதி மு.ப. 11 மணியளவில் ஹட்டன் டன்பார் ரோட்டில் அமைந்துள்ள அவரது வைத்தியசாலையிலிருந்து கைது செய்யப்பட்டு ஹட்டனில் ஒருநாள் தடுத்து வைத்திருந்து நுவரெலியா கொண்டு போய் அங்கிருந்து உடபுஸ்ஸல்லாவ பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று வைத்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ள 28 பேரும் வெவ்வேறான பொலிஸ் நிலையங்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சாந்த குமாரை பார்ப்பதற்காக உடபுஸ்ஸல்லாவ பொலிஸ் நிலையம் சென்று (வழக்கறிஞர் ஒருவரின் கடிதத்துடன்) பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் அனுமதி கேட்ட போது உடனடியாகப் பார்ப்பதற்கு அனுமதிக்க முடியாதென்றும் மாலையளவில் சந்திக்க அனுமதிக்கலாம் என்றும் கூறப்பட்டது. கொழும்பிலிருந்து சிரமப்பட்டு வந்திருக்கிறோம் மாலை சந்திப்பதாயிருந்தால் மீண்டும் போக சிரமம் பஸ் கிடையாது என்பதை கூறியபோது, இரண்டு நிபந்தனைகள் விதித்தனர். 'ஒன்று 5 நிமிடங்கள் மட்டுமே கதைக்க அனுமதிக்க முடியும், அடுத்தது தமிழில் கதைக்க முடியாது, சிங்களத்திலேயே கதைக்க அனுமதிக்க முடியும். கதைக்கும் போது எங்களது பொலிஸ் ஒருவர் அருகில் இருப்பார்' என்றார். அப்படியேனும் கதைக்க கிடைத்ததையிட்டு சம்மதித்தேன்.

பொலிஸ்காரர் கூட்டிச்சென்று 'இதோ சாந்தகுமார்' எனக் காட்டினர். சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் அவர். சிங்களத்தில் மட்டுமே நமக்கு கதைக்க அனுமதி என அவரிடம் நான் கூறிவிட்டு தெரிந்த சிங்களத்தில் கதைத்தேன். சாந்தகுமார் கூறியது இதுதான்.

''என்னை குறிப்பிட்ட ஒரு இயக்கத்துடன் சம்பந்தம் என கூறுகின்றார்கள். எனக்கு அப்படியொரு சம்பந்தமும் கிடையாது. கைது செய்யப்பட்ட இளைஞர்களை தெரியுமா என விசாரித்தார்கள். உண்மையில் அவர்களில் ஒரு சிலரை எனக்குத் தெரியும். காரணம் நாங்கள் இடதுசாரி அரசியலைச் சார்ந்தவர்கள். நாங்கள் அவர்களுடன் அரசியல் ரீதியில் கலந்துரையாடல்களை நடத்தியும் இருக்கிறோம். ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு பயங்கரவாத இயக்கமொன்றைச் சார்ந்தவர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. பொலிசார் என்னை விசாரிக்கையில் 'உன் கிளினிக்குக்குள்தான் ஆயுதங்களை கொண்டு வந்து மறைத்து வைத்து விட்டு எடுத்துச் செல்வதாக சொல்கிறார்களே' எனக் கேட்டனர். 'அவர்களுடன் இருந்த நட்புறவு காரணமாக அவர்களது பேக்குகள், புத்தகங்கள் ஏதேனும் வைத்துவிட்டு செல்வார்கள். அதில் என்ன இருக்கிறது என தேடுவதற்கு எனக்கு உரிமை கிடையாது' எனவே உள்ளே என்ன இருந்தது என்றும் எனக்குத் தெரியாது. பொலிசார் இப்போது என்னை அவ்வியக்கத்தின் அரசியல் ஆலோசகர் (Political Advisor) என்று குற்றம் சாட்டியுள்ளனர். மேலும், எனது விடுதலை பற்றி கதைக்க இன்னும் எந்த கட்சியோ, தொழிற்சங்கமோ முன்வரவில்லை. அவர்களுக்கும் எங்களை இது விடயத்தில் இறுக்கி வைக்க வேண்டிய தேவையும் உள்ளதே!

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழுவின் முன்னிலையில் எமது (NDF) அமைப்பு இனப்பிரச்சினை தீர்வுக்காக முன்வைத்த தீர்வுகள் புலிகள் முன்வைத்த யோசனைகளுடன் ஒத்துப்போவதாகவும் பொலிசார் கூறுகின்றனர். அதையும் தங்களுக்கு சார்பாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர்' என்றார்.

டொக்டர் சாந்தகுமார் கடந்த காலத்திலும் பிரச்சினைக்குரிய காலப்பகுதியிலெல்லாம் சிறையிலடைக்கப்பட்டவர். 1983இல் இருந்து தொடர்ந்து 3 வருடங்களுக்கும் மேலாக (J.O.C குண்டு வெடிப்பு சூத்திரதாரி வரதன், மலையக மக்கள் முன்னணி காதர் ஆகியோருடன்) பூஸாவில் அடைக்கப்பட்டிருந்தார். அதற்குப் பின்னரும் ஒரு தடவை கைது செய்யப்பட்டு சிலகாலம் சிறையிலிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புக்கள் - 16

# 1986 எழுச்சி!

**வி.ரீ.தர்மலிங்கம்**

மலையக மக்களின் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுக்கொடுத்து அரசு அமைப்பதற்கான அதிகாரத்தைப் பெற வழிவகுத்துக் கொடுத்து அரசாட்சியின் உயர்மட்டத்தில் அங்கம் வகிக்கும் கட்சியினால் மலையக மக்கள் நன்மை அடையவில்லை. ஐ.தே.கட்சி மலையக மக்கள் மீது அன்பு கொண்டு அது ஆரத்தழுவுகின்றது என மேடைகளில் முழங்கி மக்களை மயக்கி ஏமாற்றி வந்தது.

ஆனால் அக்கட்சியின் தலைவர்கள், பிரமுகர்கள் தங்கள் இதயக்கிடங்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இனத்துவேஷத்தை 1983ஆம் ஆண்டில் வெளிப்படையாகக் காட்டி தாங்கள் யார் என்பதை மக்கள் உள்ளத்தில் பதித்தனர்.

பெரும்பான்மை மக்கள் மனதில் தமிழர்கள் மீது ஆவேசத்தையும் பொறாமையையும் வளர்த்துள்ளனரே தவிர, ஒற்றுமைக்கு வழிவகுக்கவில்லை. அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதில் கொண்டிருந்த நாட்டம், பெரும்பான்மை இன மக்களுடன், மலையக மக்கள் நட்புக் கொண்டு வாழ்வதற்குரிய செயற்திட்டங்களை வகுப்பதில் இருக்கவில்லை. மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதியில் ''கிராமிய ஒன்றிணைப்பு'' என்ற பெயரால் சிங்கள மக்களைக் குடியேற்றி ஆக்கிரமிப்புச் செய்யும் திட்டத்திற்கு துணை நின்றனர் இவர்கள். ஐ.தே. கட்சியினரும் தங்களின் அரசியல் இலாபத்திற்காக வேற்றுமைகளை வளர்த்துக் கொண்டனரே தவிர மலையகத் தமிழ் மக்களை தங்களுடன் இணைத்துக் கொள்ளவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளை ஐ.தே.கட்சிக்கு வாங்கிக் தரும் தரகர்களைத் தங்களுடன் இணைத்துக் கொண்டனர். பதவிகளையும், சலுகைகளையும், வழங்கினர். அது அவர்களுக்கு மிகவும் சுலபமாக இலகுவாகவும், இலாபமாகவும் இருந்தது.

ஜனவரி மாதம் 1986ஆம் ஆண்டு தைப்பூசத்திருவிழா தலவாக்கொல்லை நகரில் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. மக்கள் பக்திப் பரவசத்தில் நிலைத்திருந்தனர். பலவித கலைநிகழ்ச்சிகளுடன் இந்து சமய வழக்கப்படி தேரில் முருகப் பெருமான் வீதிவலம் வந்து கொண்டிருந்த வேளையில் நடந்த சம்பவம் மலையக மக்கள் வாழ்வில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது. வழக்கமாக மலையக மக்கள் மீது குதிரை ஏறுபவர்கள் அன்றும் குதிரை ஏற முயன்றார்கள்.

அன்று தோட்ட இளைஞர் ஒருவரை ஒரு அறையில் அடைத்து அந்த நகரத்தில் வழமையாக சண்டித்தனம் காட்டும் ஒருவர் தலைமையில் புலர் சேர்ந்து நையப் புடைத்தனர். அந்தப் பெரும்பான்மை இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து அடித்துக் கொண்டிருந்த அறையை உடைத்து அடித்து விரட்டி இளைஞரைக் காப்பாற்றியதோடு மாத்திரம் நிற்கவில்லை. எதிர்த்தவர்களை விரட்டி, விரட்டி அடித்தனர். அவர்களைக்காக்க வந்த பொலிஸ்காரர்களுக்கும் தக்க பாடம் படிப்பித்தனர். வழக்கம் போல் அடித்து விரட்டி அடக்கலாம் என எண்ணியவர்கள் கிகைத்தனர். இதுவரை காலமும் உணர்வில்லாத நடைப்பிணங்களாகத் திரிந்தவர்களுக்கு, துணிவு எப்படி வந்தது என நினைத்தனர். மக்களின் ஒன்றுபட்ட மனமாற்றத்திற்கான காரணம் புரியாமல் தடுமாறினர். அன்றிரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிலரைப் பார்ப்பதற்குச் சென்ற பெ.சந்திரசேகரனையும் அவரது நண்பர்களையும் ஒரு லொறியில் வந்த காடையர் கூட்டம் வழிமறித்துத் தாக்கியது. இதையறிந்த மக்கள் குமுறி எழுந்தனர். ஆவேச அலை காட்டாற்று வெள்ளம் போல் திரண்டு ஆர்ப்பரித்து எழுந்தது.

சந்திரசேகரனின் தலையில் பட்ட காயம் மக்களின் மனதில்பட்ட அம்பாகச் சீறிப் பாய்ந்தது.

அடுத்த நாள் தலவாக்கொல்லை பிரதேசம் எழுச்சி கொண்டு எழுந்தது. அடக்க நினைத்தவர்களின் அடக்கு முறைகள் அனைத்தையும் அடக்கியது. ஆயுதமும், இராணுவமும் துணைக்கு வந்தும் தோட்டங்களுக்குள் நுழைய முடியவில்லை. திட்டமிட்டு சட்டத்தை உருவாக்குவோர் மலையகத்தில் இந்த மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன என கவலையுடன் ஆராயத் தொடங்கினர். அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் மக்களைச் சமாதானப் படுத்த ஆகாய மார்க்கமாகப் பறந்து.வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியது. தங்களின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஐந்து நாட்களின் பின் எழுச்சியைத் தணித்தனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நினைக்கவில்லை. எழுச்சியைத் தணிப்பதில் காட்டிய ஆர்வம் மக்களின் நல்வாழ்விற்கு வழிதேட முனையவில்லை.


1986ஆம் ஆண்டு மலையகத்தின் எழுச்சிக்கு மக்கள் மனதில் ஏற்பட்ட சிந்தனை மாற்றமே காரணமாகும். இவர்களின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம், உணர்வினைத் தூண்டியது. அதுவே, எழுச்சி கொள்ள வைத்தது. இந்த எழுச்சிக்கு காரணகர்த்தாவாகவும் - ஒரு உறுதிமிக்க மூலக்கருவாகவும் இருந்து துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டவர் திரு.பெ.சந்திரசேகரனே! இதுவரை காலமும் புதிய சிந்தனையாளர்கள், தொழிலாளர்களின் சிந்தனை மாற்றத்திற்கு தங்களின் பங்களிப்பினை அளிக்க முடியாமல் இருந்தது. அக்குறையை சந்திரசேகரன் நிறைவேற்றினார். தொழிலாளர்கள் மத்தியில் அவரின் செயல்பாடு அவர்களின் சிந்தனையைத் தூண்டியது. உணர்வினைத்தட்டி எழுப்பியது. அந்த எழுச்சியே மலையக மக்களின் எண்ணத்தில் மாபெரும் மாற்றத்தை உருவாக்கியது.

மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய, மக்களின் ஆதரவைப் பெற்ற இயக்கமாக மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற அமைப்பே இருந்தது.

அந்த அமைப்பினைப் பலவீனப்படுத்தினால் மலையக மக்களின் ஒன்றுபட்ட சக்தி பலவீனப்பட்டுவிடும் என்று நினைத்து இந்த அமைப்பினை சந்திரசேகரன் ஆதரித்தார். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நுவரெலியாத் தொகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவர் சௌ.தொண்டமான் போட்டியிட்டார். வர்த்தகர்கள் அவரை ஆதரிக்கவும், அவருக்கு ஆதரவாக வேலை செய்யவும் பயந்து கொண்டு இருந்தனர். அவ்வேளையில் துணிந்து தொண்டமானை ஆதரித்து, தலவாக்கொல்லை நகரில் பெரும் வரவேற்பு கொடுத்து வியாபாரிகளுக்குத் துணிவை ஏற்படுத்தி, தானும் பகிரங்கமாகப் பிரச்சாரத்தில் இறங்கியதன் மூலமாக அரசியலில் சந்திரசேகரன் அடியெடுத்து வைத்தார். அந்தத் துடிப்பாற்றல் கொண்ட இளைஞர் தொண்டமானின் வெற்றிக்கு முழு உற்சாகமாக உழைத்தார். இவரின் துடிப்புமிக்க பேச்சு வன்மை, செயல் திறனைக் கண்டு தொண்டமான் தனது அருகில் வைத்துக் கொண்டார்.

அன்று தொடக்கம் இ.தொ.காங்கிரசுடன் இணைந்து செயற்பட்டார். தொழிலாளர் சக்தி இவருக்கு ஆதரவாகத் திரண்டதைக் கண்டு உள்ளுக்குள் சிலர் குமுறிக், கொண்டிருந்தனர். இ.தொ.காவில் இருந்து கொண்டு திட்டமிட்ட குடியேற்றத்தை எதிர்த்தார். தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்றார். மலையக மக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட்டு அவர்களும் இந்நாட்டில் தன்மானத்துடன் வாழ வழிவகை செய்யப்படவேண்டும் என்றார். மலையக மக்களின் உரிமைகளைத் தர மறுப்பவர்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என இ.தொ. காங்கிரஸின் மேடையில் வீரமாய் முழங்கினார். இவரின் முழக்கம் அரசாங்கத்தில் அங்கம் வகிப்போரை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. இவரின் இ.தொ.காங்கிரஸ் பிரவேசமும், பேச்சும் செயலும் அரசாங்கத்தை இ.தொ.காவின் மீது சந்தேகம் கொள்ள வைத்துவிடுமோ என்று சிலர் பயந்தனர். இதனால் முதல்படியாக சந்திரசேகரனைப் புறக்கணிக்கத் தொடங்கினர்.

வரும்



## அழு

நிலவுக்கா முக்காடு?
அழகைக் கொல்லும்.
பிடித்திழு பிய்த்தெறி
சலமோன் ரசித்த திராட்சைக் குலைகளை
கசக்கு கசக்கு
யோனிகளையும் நெரி நெரி
பொஸ்னிய தளபதியின் ஆணை.

பொஸ்னிய முஸ்லிம் தோழனே..
உன் சகோதரிகள் துடிக்கின்றனர்
கசக்கி எறியப்பட்ட முலைக்காம்புகள்
நெருப்பாய்க் கனக்கின்றன.
நீயும் பாய்ந்தெழுந்தாய்
மரணம் தின்றது.
கௌடிச்சின் மிருகங்கள் குதறிய உன்னுடல்
நீ தவழ்ந்த குப்பிரெஸ்ஸின் மீட்பில்.
நம்மிலும்விட
நம் சகோதரிகளிலும்விட
உலக சமத்துவத்தைப்போல்
சிறுவர் வாழ்வு உயர்வானதென்றா
கடைசியாய் நீ நினைத்தாய்?

சுவிஸ் அகதியிருப்பில் வாடும் உன் தந்தைக்கு
அமைதியை எங்கே வைத்துவிட்டுப் போனாய்?
கூடவே இலங்கை அகதி இருப்பானென்றும்
இழப்பு, துயரம், தனிமை, இயலாமை...
எதிலும் அவன் தோய்ந்தவன் என்றும்
நீ வானத்தில் அடித்த தந்தியில் குறிப்பிட்டாயா?

தந்தையே நினைவு கொடிது
பிரிவுக்கு உயிர்வலிக்கும்.
மறப்பது எதுவும் கூடும்
அகதிக் கூலிக்கு
அழுகையும் நிரந்தரமானதோ?

அல்லாவுடன்...
கற்பனைகள் யாவும் அழித்து
டிட்டோ கட்டிய யூகொஸ்லாவியாவில்
மலர்கள் ததும்பும் பெல்கிரேட் வீதிகளில்
புரட்சி முகங்கள் பதிந்து
ஷாக்கிறேப் நகரின் மண இளைப்பாறலில்
ஆத்மாக்கள் ஆரவாரித்தன.
இன்றெப்படி இப்படியானாய்?
கூறாகி உடல் கீலங்கள் குவியும்
கசாப்பு நிலமானது.

உயிர்க்கொல்லிகள் கூடுகட்டி
சுடுகலன்கள் உலாவும்
ராட்சத யுகத்தில்
தந்தையே அமைதி எங்கிருந்து வரும்?
U.N.O இழுப்பது U.S.A தேர்தானே
சாரதியும் விரும்பா அமைதி...
எங்கிருந்து வரும்?

ஈழம், காஷ்மிர், ருவாண்டாவென...
உலகமெலாம் அமைதிக்காய் தவமிருக்க
அமைதி பந்தயமாகி தலைகீழாய் சுழல்கிறது
கழுத்து முறிந்து எங்கு விழுமோ?

**துவிதாஞ்சன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**ஒடுக்கப்படுபவர்களின் அரங்கு (Theatre of the Oppressed) என்ற கருத்தாக்கத்தை நாடகம்/அரங்கியல் ஆகியவற்றுள் புகுத்தி அரங்கியலில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்த கலைஞர் ஒகஸ்டோ புவால். அரங்கம் என்பதை அரசியலரங்காகவும் மக்களுக்குக் கல்வியூட்டும் சாதனமாகவும் கூட நடைமுறைப்படுத்தி வந்த ஒகஸ்டா புவால் பிறேசில் நாட்டு, றையோ டீ ஜனைரோ நகரில் பிறந்தவர்(1931).**

**1955 - 1971 வரை சாஓ போலோ நகரத்தின் தியேட்டர் டீ அறீனா (Theatres de Arena) என்ற நாடகக் குழுவின் நெறியாளராகக் கடமை புரிந்தார். 70களில் பிரேசிலில், இராணுவ சர்வாதிகார ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டவர். 1971 இல் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளான ஒகஸ்டோ புவால் சர்வதேச அரசாங்கங்கள், கலைஞர்களின் நிர்ப்பந்தம் காரணமாக விடுவிக்கப்பட்டார். ஐரோப்பாவிலும் தென்னமெரிக்காவிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்த போது ஒடுக்கப்படுபவர்களின் அரங்கம் என்பதை நிறுவினார். பிரேசில் நிலைமை சுமுகமான போது நாடு திரும்பிய புவால் 1992இல் தொழிற்கட்சி சார்பாக றையோ டீ ஜனைரோ மாநகரசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.**

**அதன் பிற்பாடு, மாநகரங்களின் பிரச்சினைகள், மாநகர்களோடு தொடர்புபட்ட பாட்டாளிகள், உதிரிப்பாட்டாளிகள், சேரி வாழ்வோர் போன்ற பல வகையான அடித்தட்டு மக்களுக்காக ஒடுக்கப்படுபவர்களின் அரங்கம் என்றதைப் புதிய பரிமாணத்துக்கு எடுத்துச் செல்கிறார்.**

**இந்த வடிவத்தை அவர் - Teatoro Legislativo- நீதிக்கான அரங்கம் என அழைக்கிறார்.**

**ஒகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் நாடகம்/ அரங்கப் பட்டறைகளில் பங்கு கொள்வதற்காக வியன்னா நகரத்துக்கு வந்திருந்த ஒகஸ்டோ புவால் நாடகம், அரங்கம், தீவிர அரசியல் என்பவற்றுடன் ஈடுபாடுற்றுள்ள சிலரை ஒரு கலந்துரையாடலுக்காகச் சந்தித்தார். கலந்துரையாடலின் சாராம்சத்தைக் கீழே தருகிறோம். போர்த்துக்கீசிய, ஸ்பானிய, ஆங்கில, ஜெர்மன் மொழிகளில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலை ஸ்பானிய, ஜேர்மன் மொழிகளிலிருந்து தமிழுக்குத் தருபவர்கள்: மிஹைலா றோஸா, சுப்பு.**

**கடந்த பல வருடங்களாக மக்களுக்கான அரங்கத் துறையில் உழைத்து வருகிறீர்கள். அரங்கம் என்பதே ஒருவகைக் கற்பித்தல்தான்(Education) என்று சொல்கீறீர்கள். இன்றும் கூட அரங்கம் என்பது விடுதலை, விழிப்புணர்வூட்டுதல் ஆகியவற்றுக்கான தளம் என்று கருதுகிறீர்களா?**

ஆம். என்னுடைய கருத்து மாறவில்லை. அரங்கம் என்பது யதார்த்தத்தைச் சுதந்திரமாகப் பரிசீலனை செய்யும் ஒரு தளம். இந்தச் சுதந்திரம் எவ்வகையான அரங்க உத்திவடிவங்களை அல்லது முறைகளை நீங்கள் பயன் படுத்துகிறீர்கள் என்பதற்கு அப்பாற்பட்டது. யதார்த்தம் பற்றிய பல்வேறு படிமங்களை நீங்கள் எப்படிப் பெற்றுக் கொள்கிறீர்கள் என்பதும் எப்படி நாடக அரங்கத்துக்கூடாக நீங்கள் அதைச் சித்திரிக்கின்றீர்கள் என்பதும்தான் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். சிலர் மேலோட்டமான யதார்த்த நிலைகளை அப்படியே அரங்குக்குக் கொண்டு வருகிறார்கள். அந்த யதார்த்த நிலைகளின் கீழே ஓடுகிற போக்குகளையும் அவற்றின் ஆழத்தையும் இவர்கள் தருவதில்லை. வேறு சிலரோ இந்த யதார்த்தத்துக்கான காரணங்களையும் பார்க்க விழைகிறார்கள். இவற்றை விடவும் மாறுபட்ட அரங்க வடிவங்கள் உள்ளன. உதாரணமாக ஒடுக்கப்படுபவர்களின் அரங்கு. இந்த அரங்கு வெறுமனே யதார்த்தத்தின் படிமங்களைத் தருவதுடன் நின்றுவிடாது. யதார்த்தத்தை மாற்ற வேண்டும் என்றும் அது கோருகிறது.

**அரங்கு என்பது புரட்சிக்கான வடிவம் என்று சொல்கிறீர்கள். ஆனால், லத்தீன் அமெரிக்கவிலும் ஐரோப்பாவிலும் புரட்சி என்பது ஒரு கடந்த கால விஷயமாகவே தோன்றுகிறது. புரட்சிக்கான காலகட்டம் அல்லது யுகம் முடிந்துவிட்டது. இந்த நிலைமையை எப்படி ஒடுக்கப்படுபவர்களின் அரங்கம் எதிர்கொள்கிறது?**

புரட்சி நின்றுவிடவில்லை. இப்போது றையோ நகரில் நீதிக்கான அரங்கு மூலம் நாங்கள் செய்து வருவது புரட்சிகரமானதுதான். புரட்சி நின்று விட்டது என்றால் வாழ்க்கை முடிந்து விட்டது என்று அர்த்தம். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முடிவடைந்தவை அவர்களுடைய பாணி அனுபவங்கள். அவை வெற்றியடையாத புரட்சிகர அனுபவங்களாகும்.



## "புரட்சி நின்றுவிட்டது என்றால் வாழ்க்கை முடிந்து விட்டது என்று அர்த்தம்"

## - நாடக கலைஞர் ஒகஸ்டோ புவால்

அரங்கம் என்பது புரட்சி அனுபவத்துக்கான ஒரு தளம் என்று நான் பேசுகிற போது நான் ஒட்டுமொத்தமான உலகப் புரட்சியைப் பற்றிப் பேசவில்லை. உதாரணமாகச் சிறு சிறு நகரங்களில் மந்தைகளைப் போல் மக்கள் வாழ்ந்து வரும் ஒரு சூழலில் கல்வியின் முக்கியத்துவத்தை அவர்கள் உணரச் செய்வதற்கு என்னுடைய அரங்கின் மூலம் முடியுமென்றால் அது ஒரு புரட்சிதான். சுகாதார வசதிகள் முற்றாகவே இல்லாத நிலையில் அவற்றைக் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வை மக்களிடையே தூண்ட முடியுமென்றால் அதுவும் புரட்சிகரமானதுதான். எனவேதான் அரங்கம் என்பது புரட்சிக்கான ஒரு தளம் என்று நான் மறுபடியும் சொல்லும் போது என்னுடைய அரங்கம் மேலோட்டமான யதார்த்தச் சித்திரிப்பு அல்ல. அடித்தட்டில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியாகும்.

**றையோ டீ ஜனைரோ மாநகர சபைக்காகத் தான் நீதிக்கான அரங்கத்தை உருவாக்கினீர்கள் என்று சொல்லலாமா?**

இல்லை. அவர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள். என்னுடைய அமைப்பான தொழிற்கட்சி ஆலோசனையை ஏற்றுக் கொண்டது. நான் அரங்கத்தை உருவாக்கினேன். எங்களுடைய நாடகக்குழு, வீதிகள், தேவாலயங்கள் மற்றும் கிராமப்புறங்கள் போன்ற எல்லா இடங்களிலும் வெவ்வேறு பிரச்சினைகளைப் பற்றிய எமது வெவ்வேறு நாடகங்களைக் கொண்டு சென்றது. றையோவில் மட்டுமே இத்தகைய நாடகக் குழுக்கள் 20 உள்ளன என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். மக்கள்தான் பிரதிகளை எழுதுகிறார்கள்; அவர்களே நடிக்கிறார்கள்: அவர்களே பார்வையாளர்களாகவும் பங்கேற்றுத் தீர்வுகளைச் சொல்கிறார்கள். இந்தத் தீர்வுகளை எடுத்து, செயற்திட்டங்களுக்கூடாக நிலைமையை மாற்ற முயல்கிறோம். அதேவேளை பாராளுமன்றத்துக்குள் என்ன நடக்கிறது என்பதையும் வீதிகளில் மக்களுடன் கலந்துரையாடுகின்றோம் என்று சொல்லலாம். பாராளுமன்றத்துக்கும் மக்களுக்குமிடையே எங்களுடைய அரங்கத்தினூடாக ஒரு இணைப்பை ஏற்படுத்துகிறோம். இதன் மூலம் அனைவரும் பங்கேற்கும் ஒரு ஜனநாயக முறைமையை (Participatory democracy) உருவாக்க முயல்கிறோம்.

**சிறுபான்மை மக்கள், வீதிச் சிறுவர்கள், பரத்தையருடனும் வேலை செய்கிறீர்களா?**

கடந்த இரண்டு வருடங்களாக வீதியோரம் வாழும் சிறுவர்களை மட்டுமே கொண்ட ஒரு நாடகக்குழு எம்மிடம் உள்ளது. பரத்தையரைக் கொண்ட குழுவொன்றை அமைக்கும் எங்களுடைய முயற்சி வெற்றியளிக்கவில்லை. கறுப்பு மக்களைக் கொண்ட ஒரு பல்கலைக்கழக நாடகக்குழுவும் எம்மிடமுண்டு.


**கலைஞர்கள் கட்சி அரசியலில் பங்களிப்பது நல்லது என்று கருதுகிறீர்களா? கட்சிகள், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராக ஒரு கலைஞர் தொழிற்படுவது - அதாவது ஒரு பரிவர்த்தனையாளராக, ஒரு சீரிய அவதானியாக இருப்பது நல்லது என்று நீங்கள் கருதவில்லையா?**

கட்சி அரசியலில் பங்கெடுப்பதா இல்லையா என்பது கலைஞர்களின் தனிப்பட்ட முடிவு. சில கலைஞர்கள் கட்சியமைப்புக்கள் சௌகரியமாகச் செயல்பட முடியாது என்று உணரக்கூடும். ஏனென்றால், அரசியல் கட்சிகள் ஒருவகையான கட்டுப்பாட்டை அங்கத்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன. நீண்ட காலமாக எந்த அரசியல் கட்சியுடனுமே வேலை செய்வதில்லை என்ற தீர்மானத்தில்தான் நானும் இருந்தேன். எனினும் சில வகையான பரிசோதனை முயற்சிகளுக்கு கட்சிகளூடாகச் சென்றால் மட்டுமே வாய்ப்புக் கிடைக்கிறது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டேன். கட்சிகளுக்கூடாக நிறைய வாய்ப்புக்கள் வருகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

# புனிதம்

நேற்றும் கூட அவன்
நினைவுகள் நெஞ்சோடு
நெருங்கிப்போனது. அதற்குள்-
இன்று வந்தமடல்
இல்லாமல்போன சேதி சொன்னது
இன்னொரு பள்ளித்தோழனும்
சித்தாந்த நண்பனும்
பரிசுத்தமானதாய் எனக்குப்பட்டது.

வெடித்துச்சிதறும் வெளிச்சத்தில்
ஒளித்துக்கொள்ளும் இரவுகளை
தேடிப்பார்க்கிற அவசரம் அவனுக்கு
சற்று அதிகமாய் இருந்தது.
அதனாலோ என்னவோ,
அடிக்கடி யார் யாரோ
காணாமல் போன அந்த நாட்களில்
பள்ளிப்பிராயத்திலேயே,
அவனும் தொலைந்துபோன
உண்மை.



பின்னொருநாளில்,
நீண்ட இடைவெளிக்குப்பின்
நிறைய மாற்றங்களோடும்
பட்டப்படிப்பு முடிந்த பக்குவத்தோடும்
அவனை கண்டிருக்கிறேன்.

காடு கடந்து
களனிதேடிய இன்றைய பொழுதுகளிலும்
காடுகளை களனியாக்கும்
நம்பிக்கையோடு காத்திருந்த
சொற்பங்களில் அவனும்
இருப்பினும்,
எல்லோரையும் போலவே,
எல்லா இரவுகளிலும்
கும்மிருட்டில் குரல்வளை இருக்க
குப்பிவிளக்கில் கூடியிருக்கிற சந்தோசம்
அவனுக்கு இருந்ததில்லை.

மாவீரர் தீபங்கள்
இனியும் எரியும்
கூடவே கண்ணை எரிக்கும்
கரும்புகளையும் நிறையவே கக்கும்
அதில் அவனைபோலவே
இன்றும் யாரும் கருகிபோகலாம்.

கண்ணை மூட தெரிந்தவனும்
கண்ணீர் விட தெரிந்தவனும் மட்டும்,
சராசரிக்கு பின் செத்துப்போவான்.

'முகமூடி'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## திருக்கோவில் கவியுவன்

''இனி செத்திட வேண்டியதுதான்''

யோசித்து யோசித்து கடைசியில் இந்தத் தீர்மானத்திற்குத்தான் வந்துவிட்டேன். வாழ்க்கை சலித்துவிட்டது. எதுவும் பிடிப்பில்லாமல் எதன் மீதும் அக்கறை இல்லாமல் எல்லாவற்றிலும் ஒரு வெறுமை கலந்த வாழ்க்கை சலித்துவிட்டது.

எத்தனை வேளைச் சாப்பாடுகள் சாப்பிடாதது தெரியாமலே நழுவிப் போயிருக்கிறது.

மாலை நான்கு மணிவரைக்கும் ஆங்கிலப்படம் பார்ப்பது போல் லெக்சரில் ஒன்றும் புரியாத இருக்கை. பிறகு ஐந்தரை மணிக்கு ஆமர்வீதியில் இருக்க வேண்டிய அவசரத்தில் அகப்படும் வாகனத்தில் ஓடி ஒரு மந்தித் தாவல்.

கடைசிப் பீரியட் எப்போது முடிப்பார். பிறக்கிக்கல் எப்போது முடியும் என்பதிலேயே கரையும் முழு நாளின் கவனம்.

வரவுப் பதிவேட்டில் பெயர் குறித்துக்கொள்ளாத விரிவுரையாளர்களின் முகங்களை ஒரே ஒரு தரம் தான் பார்த்ததாய் ஞாபகம் - அவர்களின் முதலாவது லெக்சரில் மட்டும்.

யார் யாரெல்லாம் வரவைப்பற்றி அக்கறைப்படவில்லையோ அவர்களின் பாடத்தைப் பற்றியே அக்கறை இல்லாமல் போய்விட்டது.

லெக்சர் றூமுக்குள் நுழைந்தால் எல்லோரின் முகத்திலும் ஒரு கேலிச்சிரிப்பு. கொஞ்சம் கேலித்தனம் கூடியவர்கள், ''ஹலோ சேந்தன், என்ன இங்காலப் பக்கம்'' கேட்கிறார்கள். அதை மட்டும் தான் கேட்பார்கள். அதைவிட இன்னும் கொஞ்சம் நெருங்கி ''ஏன் லெக்சருக்கு ஒழுங்கா வாரயில்ல'' என்று கேட்கத் தோன்றாது. அவர்களுக்கிருக்கும் புத்தகச் சுமையில் என்னைப் பற்றியெல்லாம் சிந்திக்க நேரம் இருக்குமோ என்னவோ?

அவர்கள் கேட்டாலும் என் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போகுதா என்ன?

''கடனுக்கு வட்டி ஏறிக்கொண்டு போகுது. ஏலுமெண்டால் ஒரு ஆயிரம் ரூபாய் அனுப்பு''

அம்மாவின் கடிதம் முடியும் போது இப்படித்தான் முடியும்.

நான் படித்துக் கொண்டே படிப்பிப்பது ஊரிலே அம்மாவுக்குத்தான் பெருமை.

''என்ர மகன் கெம்பஸில படிச்சுக்கொண்டே கொழும்பில ரியூசன் குடுக்கிறான்'' என்று பக்கத்து வீட்டு மாமியின் நெஞ்சை புழுங்க வைப்பதற்கு நல்லதொரு ஆயுதம். சதை பிழிந்து வியர்வையாய் வடியும் நெரிசல்களில் மூன்று பஸ்கள் மாறிமாறி பயணிப்பதும், மிரண்டு போன கண்களுடன் வீதியை கடப்பதும், படிப்பிக்கும் வீடுகளில் ஹோலிங் பெல்லை அழுத்திவிட்டு, அவர்கள் வந்து கதவைத் திறக்கும் வரையில் மோட்டைப் பார்த்துக் கொண்டே, தெருவில் போகிறவர்கள் என்னை வித்தியாசமாய்ப் பார்ப்பதாய் நினைத்துக் கொண்டு குறுகிப் போவதும் அவளுக்கெப்படி தெரியும்?

கதவைத் திறந்த உடன் நேரே படிப்பிக்கும் மேசைக்குச் செல்ல வேண்டும்.

கழுத்தில் வடியும் வியர்வையைத் துடைத்துக் கொள்ளவும் நேரமிருக்காது.

ஏற்கனவே ஐந்து, பத்து நிமிடம் லேட்டாயிருக்கும் படிப்பித்துக் கொண்டிருந்த போது முன்னிற்கிருக்கும் பிள்ளை அல்லது பெடியன் எதற்கேனும் மூக்கைத் தொட்டுக் கொண்டால் மனது சங்கடமாயிருக்கும்.

இரகசியமாய் ஒரு தரம் குனிந்து மூக்கை உறிஞ்சி, ஒரு முகர்தல் - வியர்வை நெடி வீசுகிறதா?

ரியூட்டரியில் இந்தப் பிரச்சினை இருக்காது. எனக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் கணிசமான தூரம், இடைவெளி.

பிரத்தியேக வகுப்பில் அதற்கிடமில்லை. பக்கத்தில் இருந்துதான் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

சம்பளம் வாங்குகிறபோது சங்கடம். அனேகமான இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (F)பீஸ் தர வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கிளாஸ் முடிந்த பின்பும் இருக்கையை விட்டு எழும்பாமல் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு அல்லது கழுத்தைத் துடைத்துக் கொண்டு அமர்ந்திருப்பேன்.

'பீ(F)ஸ் எடுக்கலாமா' என்று ஞாபகப்படுத்த விரும்பி நாக்கின் நுனிக்கு வரும் வார்த்தைகள் தயங்கித் தயங்கி பின் ஏலாமல் திரும்பவும் தொண்டைக் குழிக்குள் போய்விடும்.

நான் படுகின்ற அவஸ்தைகளைப் பார்ப்பதால் எதிரே அமர்ந்திருக்கும் பிள்ளைக்கு அல்லது பெடியனுக்கு பீ(F)ஸ் பற்றி ஞாபகம்வர,

''சேர் பீ(F)ஸ்'' என்று சொல்லிவிட்டு எடுத்து வர உள்ளே போவது நெஞ்சில் பால் வார்த்தது போல் இருக்கும்.

அப்படி ஞாபகம் வரவில்லையெண்டால் பீ(F)ஸைக் கேட்காமலேயே எதையோ இழந்தது போன்ற ஒரு உணர்வுடன் வெறுங்கையுடன் வெளியேறிவிட வேண்டியதுதான். ''விழுந்திட்டன் மீசையில் மண் ஒட்டவில்லை'' என்பது போல 'அடுத்த கிழமை மொத்தமாய் சேர்த்து வாங்கலாம்' என்று மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டியது தான்.

பீ(F)ஸைக் கொடுத்தால் 'தாங்ஸ்' சொல்லி வாங்கி அவசரமாய் சட்டைப்பையுள் வைத்துக் கொள்வேன். கணக்குப் பார்த்து, எண்ணிப் பார்த்து வாங்கும் கறார் பேர்வழியல்ல நான் என்பதைக் காட்டி விட்டது போல் திருப்தியாய் இருக்கும்.

வெளியே வீதிக்கு வந்தவுடன் காசை எண்ணிப் பார்த்து அந்தக் கிழமைய வகுப்புக்களை கணக்குப் பார்ப்பேன். பார்த்தது சரி, பச்சையாய் பசைமுறியாத ஆயிரம் ரூபாய்த்தாள்.

படுகின்ற கஷ்டங்கள் எல்லாம் மறைந்து ''நான் சம்பாதிக்கின்றேன்''

ஆசையாய் அந்தப் பச்சைத் தாளையும் இன்னும் கூடவுள்ள சில மஞ்சள் தாள்களையும் பேர்சினுள் திணிப்பேன். பேர்ஸ் கனப்பது போல் இருக்கும். ரவுசர்ப் பொக்கற்றில் பேர்ஸைத் திணித்து கையை வெளியில் எடுத்தேன். நான் பெறுமானம் மிக்கவன். பொக்கெற்றுக்கு மேலால் அடிக்கடி தொட்டுப்பார்ப்பேன். எல்லாம் கொஞ்ச நேரத்திற்குத்தான்.

பிறகு, பேர்ஸிலிருக்கும் பச்சைத்தாள் அம்மாவுக்காக எழுதப்பட்டிருக்கும் காகித உறைக்குள் இடம் மாறல். புறக்கோட்டை பஸ் நிலையத்துக்கு வந்து ஊருக்குச் செல்லும் பஸ் நிற்குமிடத்தில் நிற்கும் முகங்களை ஒவ்வொன்றாய் பார்த்து மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரைத் தேடும் வேட்டை.

அம்மாவுக்கு அனுப்பும் பணத்தை 'மணி ஓடர்' பண்ணாமல் இப்படி ஆட்களிடம் கொடுத்தனுப்பி விடுவதால் கிட்டத்தட்ட நாற்பது ரூபாய் லாபம்.

இன்னொரு நன்மை மறுநாளே அம்மாவின் கையில் காசு சேர்ந்துவிடும் என்பது.

ஆனால், இப்பிடிக் கொடுத்துவிடுவதிலும் சில சிக்கல்கள். கடிதத்தை கொடுக்கும் நபரிடம் வெறுமனே கடிதத்தை மட்டும் கொடுத்துவிட்டு உடனே திரும்ப முடியாது. ஏதாவது கதைக்க வேண்டும். அதுதான் சம்பிரதாயமும் கூட. இப்பிடிக் கடமைக்காக அரங்கேறும் சம்பாஷணையில் அதிகமாய் என் வாயிலிருந்து வருவது,

''ஊர் நிலைமை எப்படி?''

சிலர் எதுவுமே சொல்லப் பயந்தவர்களாய் ஒரு அசட்டுச் சமாளிப்புடன்,

''நோமலாய் இருக்கின்றது'', இல்லாவிட்டால் ''ஊரில கடும் மழை, போடியார்ர மகள் பெரிய மனுஷி ஆயிட்டாள், கிட்டினன்ட பெடியன் கந்தப்பின்ர பெட்டையைக் கூட்டிக் கொண்டோடிட்டான்.......''

என்று எதையாவது ஒப்புக்குச் சொல்லி முடிப்பார்கள்.

துணிந்த சிலரோ ஊரில் நடக்கும் ''ஒவ்வொரு விஷயத்தையும்'' கொஞ்சம் மெருகூட்டலுடன் தள்ளிவிடுவார்கள்.

யாராவது தெரிந்தவர்கள் அகாலமாய் இறந்து போன செய்தி கேள்விப்பட்டால், நெஞ்சு கொஞ்சம் நெருடும். இரவில் முழிப்புத்தட்டும்.

இப்படித்தான் போனகிழமை உழவுமெஷினுக்கு சாமான் வாங்க வந்திருந்த சிவத்தாரிடம் விசாரித்த நேரம் நேசன் செத்துப் போனதாய்ச் சொன்னார்.

அதன் பின் மூன்று நாட்கள் நான் நித்திரை கொள்ளவேயில்லை. படுப்பதற்கென்று கண்ணை மூடினால் கண்ணுக்குள் நேசனின் சிரித்த முகம்.

நேசன் - என்னிடம் குட்டுப்பட்டு, குட்டுப்பட்டு ரியூட்டரியில் கணிதம் படித்தவன். ஓ.எல் எடுப்பதற்கு ரெண்டு கிழமை இருக்கும் போது காணாமல் போனான்.

நேசன் - என்னிடம் ''அண்ணா, அண்ணா'' என்று சொல்லி என்னேரமும் கூட வருவான். என் சைக்கிள் வார் நேசன் இருப்பதற்கென்றுதான் செய்யப்பட்டது.

அப்படிப் பழகியவன் என்னிடம் கூட சொல்லாமல் போய்விட்டான்.

நாய்கள் உறுமித் தொடர்ந்த நடுராத்திரியில் கண்ணாப் பற்றைகளைக் கடந்த போது அவனுக்கு வயது 16. ஆண்டுக்கு வயது கி.பி. 1992. நேசன் காணாமல் போய் சில நாட்களின் பின்புதான் அவனைப்பற்றி ஊரே கிசுகிசுத்தது. பிறகு முன்னிருட்டுக் கால கருக்கல்களில் உப்பித் தெரிந்த சாரத்தோடு ஊருக்குள் அவனை பலதரம் கண்டதாக பலபேர் சொன்னார்கள். கடைசியில் கோமாரிக் காட்டில் இலை துளிர்க்கும் தேக்கு மரக் கன்றுகளுக்கு அவன் ரத்தமும் சதையும் எலும்பும் உரமாகிப் போய்விட்டது. இது கேட்டது முதல், அவன் மரணம் அர்த்தமுள்ளதாயும் என் இருத்தல் அர்த்தமற்றதாயும் நெஞ்சுக்குள் ஒரே அறுப்பு.

ஆட்களிடம் பணம் கொடுத்து அனுப்புவதால் ஏற்படும் சிக்கல்கள் இத்தகையது. இந்த மனச்சுமைகளையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு யாரிடமாவது கடிதத்தைக் கையளிக்கும் போது அம்மாவின் சிரித்த முகம் தெரியும். கூடவே, வட்டிக் கடனை கேட்டுக் கேட்டு வாசலில் காவடித்துக் காவடித்துப் புறுபுறுத்தபடி நிற்கும் திரவியம் அன்ரியின் அல்லது பார்வதி அக்காவின் முன்றலில் அம்மா காசை விட்டெறிவது போல் ஒரு காட்சி அல்லது சாராயத்திலேயே முகம் கழுவும் அத்தானைக் கட்டியதால் நீலம் பாய்ச்சுப்போன தொடைகளோடு சொட்டிக்கு மேலால் சேலையைச் சுற்றிக் கொண்டு ரெண்டு பிள்ளைகளையும் இழுத்தபடியே மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் திடீர் விஜயம் மேற்கொள்ளும் அக்காவின் கையில் அம்மா இருநூறோ முன்னூறோ திணித்து வழியனுப்புவது போல் ஒரு காட்சி அல்லது காதோட்டை தூர்ந்து போய்விடுமோ என்ற பயத்தில் காதில் ஈக்கிளைச் செருகிக் கொண்டு திரியும் சின்னவளின் (என் தங்கை) காதில் தங்கச்சிமிக்கி பளபளப்பதாய் ஒரு காட்சி.

எந்தக் காட்சி விழும் என்பது அம்மா கடைசியாய் அனுப்பியிருக்கும் கடிதத்தில் எழுதியிருக்கும் பிரச்சினையைப் பொறுத்தது.

எதை எழுத வேண்டும், எதை எழுதக்கூடாது என்ற பிரித்தறிதல் எல்லாம் அம்மாவிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

ஊரில் எது நடந்தாலும் அப்படியே, அதே வேகத்திலேயே எழுதிவிடுவா. (பக்கத்து வீட்டு மாமியுடன் கோழிச்சண்டை பிடித்தது கூட)

அம்மாவின் எழுத்தில் அதிகம் சந்தோசப்படும் படியாய் எதுவும் இருக்காது.

சந்தோசப்படும்படியாய் எழுத வராதோ? அல்லது அப்பாவின் மரணத்தோடு சந்தோசங்களும் செத்துப் போயிற்றோ என்னவோ?

நான் படும் கஷ்டங்களைப்பற்றி அக்கறையாய் ஏதும் விசாரிப்புக்கள் இருந்தாலும் கொஞ்சம் இதமாயிருக்கும். அதுவும் இல்லை.

அம்மாவுக்கு தெரிந்ததெல்லாம் (எதிர்காலம் பிரகாசமாக) - நான் படிக்கவேண்டும், (நிகழ்காலம் தடையின்றிப் போக) - நான் படிப்பிக்கவேண்டும்.

நான் எதிர்பார்த்திருக்கும் எதுவுமே அம்மாவின் கடிதத்தில் எழுதப்பட்டிருக்காது. இதனால் தானோ தெரியாது, அம்மாவைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் ஒரு மெல்லிய வெறுப்பு மிதந்து நிற்கிறது. இதனால் வாழ்க்கை கசந்து நிற்கிறது. எதை நினைத்தாலும் கடைசியில் ஒரு விருப்பமில்லாத உணர்வுதான் எஞ்சுகிறது.

விரக்தியாக, மெல்லிய சோகமாக, கோபமாக............

கடிதத்தை கையளித்துவிட்டு வந்து பாணந்துறை பஸ்ஸிலோ, மொரட்டுவ பஸ்ஸிலோ ஏறி ஜன்னலோரமாய் உட்கார்ந்து கொண்டால் மனது விரியத் தொடங்கும். முகத்தில் அறையும் குளிர்காற்று தலைமுடியை கலைக்க உள்ளே மனதில் கவிதை சுரக்கும். கவிதையின் முடிவும் கடைசியில் சோகமாய்ப்போகும். சில கவிதைகள் முடிவதற்கு முன்னமேயே பக்கத்து இருக்கையில் இருப்பவன் ஏதாவது கேட்டுத் தொலைத்திருப்பான்.

வளாகத்து முகப்பில் சீனித்தொழிற்சாலை இயந்திரங்கள் சப்பித்துப்பும் சக்கையாய் வாகனத்திலிருந்து வெளியே தள்ளப்படுவது அப்பாடா என்றிருக்கும். இறங்கி ஒரு நூறு மீற்றர் செக்கெண்ணை மணக்கும் கொத்து ரொட்டியைக் கொறிக்க ஒரு தள்ளாட்ட நடை.

எல்லாம் முடிந்து ஸ்ரடி ஹோலுக்குள் நுழைந்தால் ரியூப்லைட் பிரகாசமான வெளிச்சத்தின் கீழ் நண்பர்கள் வலு சீரியஸாய்ப் படித்துக் கொண்டிருப்பார்கள். ஒரு சிலர் கூடியிருந்து பாடத்தில் உள்ள ஏதாவது சிக்கல்களை விவாதித்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்களைப் பார்க்கும் போதுதான் எனக்கு எக்ஸாம் நெருங்குவது ஞாபகம் வரும்.

மூன்றாம் வாரம் சிலபஸ் கொஞ்சம் இறுக்கம் என்று எல்லோரும் கதைப்பதுதான் பயமுறுத்தும்.

கையில் ஏ.எல். நோட்சுடன் வரும் என்னைக் கண்டதும் அவர்கள்,

''என்ன சேந்தன் ரியூசனாலயோ, அவனுக்கென்ன இப்பவே அந்த மாதிரி உழைப்பு'' என்பார்கள்.

நான் எதிரே இருப்பதைப் பற்றி அக்கறைப்படாமல் படிப்பதில் கவனம் போகும்.

இருக்கப் பிடிக்காமல் எழுந்து விடுதியை நோக்கி நடப்பேன். வழியில் வாகை மரங்களின் கீழ் போடப்பட்டிருக்கும் கல் பெஞ்சுகளில் நிழல் போர்வைக்குள், ஒன்றாய் இறுகிக் கிடக்கும் ஜோடிகள் கறுப்பு →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருக்களாய்த் தெரியும்.

செவ்வந்தியை எண்ணிப் பார்ப்பேன்.

''வேலிக்கு மேலாலே மச்சான் வெள்ளை முகம் தெரிவதெப்போ'' என்று நாட்டார் பாடலால் என்னை மறைமுகமாக விளிப்பது ஒலிக்கும்.

செவ்வந்திக்கு ரெண்டாவது பிள்ளையும் பிறந்து விட்டதாய் யாரோ சொன்னார்கள்.

'அவள் புருசன் இப்பவும் குடிக்கிறானா?''

முதன் முதலாய் வளாகத்திற்கு வருவதற்கு வெளிக்கிட்ட அன்று வேலிக்கு மேலால் எட்டி ''உஸ்'' என்று கூப்பிட்டு ''கொழும்புக்கு போய் ஊராக்கள மறந்திடாதீங்க'' என்று சொன்னதுதான் பருவமடைந்த பின் இதுவரை செவ்வந்தி என்னுடன் கதைத்த ஒரேயொரு வசனம். வளாகத்திற்கு வந்த ஆரம்பத்தில் கொஞ்ச நாள் ஏன் அவள் அப்பிடி என்னிடம் சொன்னாள் என்பதை யோசித்துப் பார்த்திருந்தேன். ஏனென்று விளங்கியிருக்கவில்லை. பின்னொரு நாள் செவ்வந்திக்கு கல்யாணம் முடிந்து விட்டதாக அம்மா எழுதியிருந்ததைப் படித்த போது ஏனோ மனது வலித்ததை உணர்ந்த போதுதான் எதுவோ புரிந்த மாதிரி இருந்தது!.

காலையில் இருந்தே வேறு விதமான உணர்வுகளில் அலையும் மனதில் விடுதிக் கதவைத் திறக்கும் போது இருக்கும் நினைவு அனேகமாய் செவ்வந்தி பற்றியதாய்த்தான் இருக்கும். கதவைத் திறந்தால் நேரே மாட்டியிருக்கும் கண்ணாடியில் கரி பிடித்த முகத்தின் கன்றாவித் தோற்றம். ஒருக்கால் சிரித்துப் பார்ப்பேன். தலையைக் கோதிப் பார்ப்பேன் - வடிவாய் இருக்கிறதா?


யோசிப்பதற்கென்றே கிடப்பது போல் பிரேமை. மனதில் கேள்விகளின் முனைப்பு. பின் கிளையாய் விரிவு.

அன்றைய நாளின் நிகழ்வுகளையெல்லாம் கோர்த்துப் பார்க்கும் போது மிஞ்சும் சலிப்பில் மனம் தீர்மானம் நிறைவேற்றும்,

''இனி செத்திட வேண்டியதுதான்''

நள்ளிரவில் பாணந்துறை பக்கம் இருந்து மினிபஸ் வரும்

''பிட்டக்கொட்டுவ, கொட்டுவ, கோல்பேஸ், கொள்ளுப்பிட்டிய, பம்பலப்பிட்டிய, வெல்லவத்த, தெகிவல, கல்கிஸ்ஸ, ரத்மலான, பிட்டக்கொட்டுவ'' வாய்ப்பாடமாய் கிளினர் கத்திக்கொண்டிருப்பான்.



''நக்கின்ட, பிட்டக்கொட்டுவ நக்கின்ட''

''பிட்டக்கொட்டுவ எக்காய்'' வாய் புலம்பும். கொஞ்ச நேரத்தில் எதிரே வந்த வாகனம் ஒன்றின் முன் என் உடல் சிதறிக் கிடக்கும் சனம் கூடியிருக்கும்.

''அனே பவ்னே, இளந்தாரியகனே, லவ் பிரேக் மொகக் கரி வென்ட ஓன னேத?

(ஐயோ பாவம் இளந்தாரிப் பொடியன், லவ் பிரேக் ஏதாவது வந்திருக்கவேணும் என்ன) என்று ஆளாளுக்கு பச்சாதப்படுவார்கள்.

காலையில் அம்மா அவசர அவசரமாய் என்னை எழுப்பி விடுவது போலிருக்கும்.

கீழ்வானில் சூரியன் ஏறி வந்து கொண்டிருப்பான், இதயத்திலிருந்து செவ்வந்தியுடன் இரவின் தீர்மானங்களும் இறங்கிக் கொண்டிருக்கும்.

வெளிக்கிட்டு வளாகத்தினுள் இருக்கும் வீதிகளையே மிகக் கவனமாய், ரெண்டு பக்கமும் பார்த்துக்கடந்து கென்ரீனுக்குச் செல்வேன்.

* * *

நாளை விடியலுடன் என் வளாக வாழ்க்கைக்கு மூன்று வயது முடிந்து நான்கு வயது தொடங்குகின்றது.



**மதுரகவி யின்**

# கவிதாப் பிரவாகம்

கடந்த ஞாயிறு மாலை (29.01.1994) ஐந்துமணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் மதுரகவி பாஸ்கரனின் 'கவிதாப்பிரவாகம் ஒலிஇழை' வெளியீட்டு விழா 'கோலாகலமாக' நடைபெற்றது.

இலங்கையின் 'பிரபலமான' வானொலிக் கலைஞர் சில்லையூர் செல்வராஜன் தலைமை தாங்கிய நிகழ்ச்சிக்கு பல ''முக்கியஸ்தர்கள்'' பேசுவதாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், குறித்தவர்கள் சிலரின் வருகையின்மையால் குறிக்கப்படாத ஓரிவரும் பேசினர்.

15 வருட காலங்களுக்கும் மேற்பட்ட வானொலி நாடகக் கலைத்துறை அனுபவசாலியாக இருந்து அண்மையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி விடுதலையான கே.எஸ்.பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இவர் தற்போது வேலையிருந்து நீக்கப்பட்டு, ஓய்வூதியம் கூட பெறமுடியாதளவுக்குப் பின்தள்ளப்பட்டிருக்கிறார் என்பது கவலையுடன் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சில்லையூர் செல்வராஜன் தலைமையுரையை மிக நீண்ட நேரத்துக்கு இழுத்தடித்தார். மரபு, புதுக்கவிதைபற்றிய அலுத்துப்போன அலசல்களையும்.., தாதாதோ.. தத்தித்தோ... என்பதான ''ஞான அமுதங்களையும்'' மெய்சிலிர்க்க (அவரது) வழங்கினார். இந்த வானொலிக் கலைஞர்களிடம் பொதுவான சில பண்புகள் ஒட்டிப்போயிருக்கின்றன. அதாவது.... வானொலி அறிவிப்பின் போது தேவையில்லாமல் அறுப்பதும்..., நேயர்கள் எல்லாரையும் ஒன்றுமறியாதவர்கள் என்ற நினைப்பில் வியாக்கியானம் செய்வதும், அவர்களது பண்பாகிவிட்டது. வானொலியென்றால் நிறுத்தி விட்டாவது பேசாமலிருக்கலாம். இங்கு அப்படிச் செய்ய முடியவில்லை. கேட்டாக வேண்டிய நிர்ப்பந்தம். இன்னுமொன்று.. ஒருவருக்கொருவர் உச்சிதடவி தங்கள் பழசுகளை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பார்கள்... இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவர்கள் பார்வையாளர்களின் பலதரப்பட்ட உணர்வுகளை மறந்துவிட்டு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதில் வீரகேசரி ஆசிரியர் சிவநேசச் செல்வனும் இணைந்து கொண்டதுதான் சகிக்கமுடியவில்லை.

இவர், அவரைக், ''கவிஞர், கலைஞர்'' என்றதிலும், அவர், ''இவரும்தான் கவிஞர், கலைஞர்'' என்றதிலும் மதுரகவி பாஸ்கரன் காணாமல் போய்விட்டார்! அவருக்கு இதெல்லாம் தெரிந்துதானோ என்னவோ அவர்களின் சொற்சிலம்பங்களுக்கு அலட்டிக் கொள்ளாமல் திரிந்தார். வெளியீட்டுடன் சம்பந்தமான விமர்சன உரையை சித்திரலேகா மௌனகுருவும், அருணாசலம் ரவியும் செய்யும் போது மிகுந்த அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். சித்திரலேகா மிகுந்த தயாரிப்புடன் வந்திருந்தாலும் 'பிரபல'மானவர்களின் இழுத்தடிப்பினாலும், பார்வையாளர்கள் பெரும்பாலும் போய்விட்டதனாலும் சுருக்கிக் கொண்டார். ''மூன்று மணித்தியாலங்கள் ஒரே இடத்தில் குந்தியிருப்பது உடம்புக்கு நல்லதில்லை'' என்று சூசகமாய்ச் சொன்னார். எனினும் அது அவர்களுக்குப் பட்டிருக்காது... ஏனெனில்... பழக்கப்பட்டவர்கள் அவர்கள்!

சித்திரலேகா, அ.ரவி, போன்றவர்கள் மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலையில்தான் விமர்சன உரைகளை நிகழ்த்தினார்கள் என்பது விளங்கியது. ''வைரமுத்துவை ஒரு கவிஞனாக நாம் நம்புவதில்லை'' என்று குறிப்பிட்ட அ.ரவி. வைரமுத்து அவர்களால் சம்பிரதாய பூர்வமாக வெளியிடப்பட்ட, இலங்கையின் வைரமுத்துவாக மாறிவரும் பாஸ்கரனின், இந்த ஒலி இழைக்காக விமர்சன உரையை (மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலையில்) நிகழ்த்த முன்வந்தது ஏன் என்பது புரியவில்லை!

பிரதி அமைச்சர் அலவி மௌலானா தவிர்க்க முடியாதவாறு எல்லா இலக்கிய, கலைக்கூட்டங்களுக்கும் சமூகமளிக்க வேண்டியதாலும், அதற்குப் பின்னாலான சில அரசியற் காரணிகளாலும் இதற்கும் பிரதம விருந்தினராக வந்து உரையாற்றிவிட்டுச் சென்றார்.

இவர்கள் தவிர சிறப்புரைகள் நிகழ்த்தவென குறிப்பிடப்பட்டிருந்த மேமன்கவி, சண்முகலிங்கம் போன்றோரும் உரையாற்றினர். ஆர். சிவகுருநாதன், அருளானந்தன், வி.என்.மதியழகன் ஆகியோர் சமூகமளித்திருக்கவில்லை. பி.எச்.அப்துல் ஹமீட் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

ஒலிஇழைக் கவிதைகள் பற்றிய விமர்சனங்கள் கவிதை பற்றிய ஆழமான பிரக்ஞை கொண்டவர்களால் முன்வைக்கப்படவேண்டும். சண்முகலிங்கம் குறிப்பிட்டது போல் இது தமிழின் நான்காவது புது வடிவமா என்பது ஆராயப்பட வேண்டும்.

'அருவி' போன்ற தரமான சஞ்சிகையைத்தந்த மதுரகவி பாஸ்கரன் அண்மைக்காலமாக ஆரவாரங்களுக்குள் காணாமல் போவது ஏன் என்றுதான் தொரியவில்லை...'

***''வாழ்க்கை குரூரமானதென***
***மறுபடி மறுபடி நிரூபிக்கப் பட்டாலும்***
***வாழ்வின் மீதான காதலைமட்டும்***
***யாராலும்***
***உதறிவிடமுடிவதில்லை......''***

குரூரமாக நிரூபிக்கப்பட்ட வாழ்வில் உதறிவிட முடியாது காதல் கொள்வதில் ஓர் அர்த்தமிருப்பதாய்ப்படுகிறது. ஆனால்.... பாஸ்கரனே.... நீங்கள் கொண்டிருக்கும், இந்தப் ''பூச்சொரிகிற'' காதலால் உங்களால் உயிர் வாழ முடியுமாயிருக்கும்... ஆனால், உங்கள் கவிதைகள்............!?

கவிதைகளின் உயிர்வாழ்வுக்காக வேண்டியாயினும் மதுரகவி ஆரவாரங்களுக்குள் காணாமல் போவதை தவிர்க்க வேண்டுமென்பதே அன்பான கோரிக்கையாகும்.

**''விமர்சனங்களால் காப்பாற்றப்படுவதை விட புகழ்ச்சியினால் இறந்து போவதையே பெரும்பாலான கலைஞர்கள் விரும்புகிறார்கள்''**

# றஷ்மியின் இரு கவிதைகள்

**எங்கள் பொழுதுகளும்**
**அந்த அவர்களும்**

கனவுகளாலும் அச்சத்தாலும்
தொந்தரவுறா அரியதோரிரவு
தீர்ந்து போகிற கடைசித்தறுவாயிது.

காகமுங்கோழியும் ஆரம்பித்துவைக்கும்
இன்றின் இரைச்சலை

மெல்ல இருள் விலக
வெய்யில் வெளிக் கிழம்பி
ஈர இலைகளைத் துவட்டிவிடும்.

வானிலேறும் சூரியன்
வாசலில் நிழற்கோடுகளை வரைந்தவாறே.

படுக்கையறையுள் நுழைந்த ஒளிக்கீற்றொன்று
பிடரியைச் சுட்டுக்கண்களை விரிக்கும் என்.

தண்ணீரை நினைக்கவே உடல்கூச
கூதலைப் பயந்து
கொடுகிக் குந்தியிருப்பேன் நான்.

விடிஞ்சாச்சு
கடவுளே என் பகலைக் காப்பாற்று!
காணச்சகியாது கண் பொத்தி
கையுதறி
கதறியழும் படியாய்க் கொடுமை செய்கிற
அந்த அவர்களிடமிருந்து.

1994.04.05

**நிகழ்த்துக....**

உனக்குப் பிரச்சினையாயிருந்தால்
சூரியனுக்காயும் ஒரு தோட்டாவைச் செலவழி,
வானிலொரு மடுவெட்டு
நிலவைக்கொன்று புதை
விரும்பின்
வெள்ளிகளையும் ஒவ்வொன்றாய்ச் சுட்டு வீழ்த்து
மனிதம் பற்றிப் பேசுபவன் வாயில்
மண்ணள்ளிப் போட்டுக் குத்து
அல்லது
உனக்குச் சொல்லவும் வேண்டுமா?
இருக்கவே இருக்கிறதே துவக்கு
..............
அவன் மரணம் கொண்டு
மற்றவர்களுக்குப் பாடஞ்சொல்.
உன் வெற்றியின் குறியீடால்
மண்டையோடுகளை அடுக்கு
அதிலேறி
உயரப் பறக்கவிடு உன் கொடியை

நாளை
உன் தேசத்தின்
விடுதலையையுஞ் சுதந்திரத்தையும்
பேய்களும் பிசாசுகளுமே கொண்டாடும்.

1994.06.01

www.tamilarangam.net



# மலையகத்தில் அத்துமீறிய குடியேற்றங்கள்!

## பொ.ஐ.ஐ.முன்னணி ஆதரவு?

மலையகத்தில் மீண்டும் அத்துமீறல் குடியேற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. வகை தொகையில்லாமல் மலையக இளைஞர்கள் கைது செய்யப்படும் நிலை அதிகரித்துவருகின்றது. மலையக மக்கள் பற்றிய விடயங்களில் பெரிய அக்கறைகள் எதுவும் அற்று அசியல மைப்பு திருத்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் கம்பனிகள் தாங்கள் நினைத்த மாதிரியெல்லாம் தீர்மானங்களை எடுத்து தோட்டங்களிலிருந்து மலையகத்தமிழ் மக்களை வெளியேற்றும் கட்டளைகளை பிறப்பித்து வருகின்றன.


இவ்வாறு வகை தொகையற்ற நெருக்கடிகள் மலையகத்தில் தோன்றியிருக்கின்ற போதும் மலையக அமைப்புகள் இவ்விடயங்களில் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்துகின்றன என்று ஆராய்வோமானால் வரும் விடைகள் மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றன.

அண்மைக்காலமாக முன்னைய சுதந்திரக்கட்சி ஆட்சியில் நடைபெற்றது போல் அத்துமீறல் குடியேற்றங்கள் பொது மக்கள் முன்னணியின் உள்ளூர் தலைவர்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. கம்பளை, காசல் மிக் தோட்டம், ராத்துங்கொட தோட்டம், மாத்தளை கணபதி தோட்டம், மத்துகம மில்லகந்த தோட்டம் போன்ற இடங்களில் இவ்வாறான குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. இக் குடியேற்றங்கள் அனைத்துக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் உள்ளூர் தலைவர்களே தலைமை தாங்கியிருக்கின்றார்கள். மத்துகம மில்லகந்த தோட்டத்தில் குடியேறும் போது குடியேறியவர்கள் ''இப்போது எங்களுடைய அரசாங்கம், நாங்கள் எங்கும் குடியேறுவோம், நீங்கள் யார் தடுப்பது'' எனக்கூறி தடுத்த தமிழ் மக்களை எச்சரித்துள்ளனர். இங்கு தமிழ் மக்கள் விவசாயம் செய்த காணிகளிலேயே அத்துமீறி 30 குடும்பங்கள் குடியேறியுள்ளன. இதே போலத் தான் கம்பளை 'காசல் மில்க் தோட்ட''த்திலும் தமிழ் மக்கள் விவசாயம் செய்த 40 ஏக்கர் காணியில் குடியேற்றம் நடைபெற்றுள்ளது.

இவ்வாறான நிலப்பறிப்பு வேலைகள் பரவலாக நடைபெற்றும் மலையகத்தின் பிரதான அமைப்புக்கள் இது பற்றி மூச்சு விடக்கூட இல்லை. இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் இவற்றுள் அடங்கும். இவ்வளவுக்கும் இவர்கள் அனைவரும் பொது ஜனஐக்கிய முன்னணி ஆட்சியின் பங்காளர்களாக உள்ளனர். பதவிச்சுகம் கண்களை மறைக்கின்றதோ தெரியவில்லை. ஐ.தே.கட்சிக்காரரான புத்திரசிகாமணி, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் ஐயாத்துரை என்பவர்கள் மட்டும் இது தொடர்பாக மத்திய மாகாண சபையில் கண்டனக்குரல்களை எழுப்பியுள்ளனர்.

இத்தகைய ஒரு அக்கறையற்ற போக்கே மலையக இளைஞர்கள் கைது விவகாரத்திலும் நடைபெறுகின்றது. சுமார் 50 இளைஞர்கள் வரை கைது செய்யப்பட்ட போதும் ஒரு மலையக அமைப்பாவது இது தொடர்பாக கேள்வி எழுப்பவில்லை.

மலையக அமைப்புகளின் அக்கறையற்ற போக்கிற்கு இன்னோர் உதாரணம்: அரசாங்கத்தின் அரசியல் அமைப்பு திருத்த முயற்சிகளில் போதியளவு அக்கறை செலுத்தாமை ஆகும். இது விடயத்தில் மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயக முன்னணி என்பவை




மட்டும் மலையக மக்கள் தொடர்பான தீர்வு யோசனைகளை முன் வைத்துள்ளன. மலையக மக்கள் முன்னணி தீர்வு யோசனைகளை முன்வைத்தாலும் அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை.

மலையக மக்களுக்கான தனியான அதிகார அலகுக் கோரிக்கையை தீர்வு யோசனையாக முன்வைத்தமையால் அதனைப் பகிரங்கப்படுத்தி அரசுடன் இருக்கும் உறவை சீர்குலைக்க விரும்பவில்லை போலும். பதவிச் சுகத்திற்காகத் தான் இதனைப் பகிரங்கப்படுத்தி மலையக மக்கள் முன்னணி வேலை செய்யவில்லை என்று எழுந்து வருகின்ற குற்றச்சாட்டுக்கு அதனது பதில் என்னவாக இருக்கப்போகிறது?

இ.தொ.கா. இதுவரை மலையக மக்கள் பற்றிய யோசனைகள் எவற்றையும் சமர்ப்பிக்கவில்லை. இது பற்றிய அக்கறை அவர்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. தமது சொந்த மக்களின் பிரச்சினை மலைபோல் இருக்க வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்குள் தலையை நீட்டுகிறார் தொண்டமான் என்பது அவரைப் பற்றிய குற்றச்சாட்டு. தொண்டமான் - அஷ்ரப் திட்டத்தை அரசியலமைப்பில் சேர்ப்பதற்காக அனைத்து தமிழ் உறுப்பினர்களையும் தனது தலைமையில் அணி திரட்டப் போவதாக கூறி வருகின்றார் அவர்.

வேலை நிறுத்தம் செய்து வருகின்றார்கள் என்பதற்காக மாத்தளையில் உள்ள இங்குறுவத்த, நாகொல்ல தோட்டங்களில் உள்ள மக்களை வெளியேற்றும் முயற்சிகளிலும் இன்று தோட்ட நிர்வாகம் இறங்கியுள்ளது. இதையிட்டும் மலையக அமைப்புகள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தற்போது அங்குள்ள மக்கள் விவசாயம் செய்வதற்கு காணிகளை தமக்கு பிரித்து தருமாறு கேட்கின்றார்கள். அதனை ஊக்குவித்து பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வமைப்பும் முன்வரவில்லை. உண்மையில் இத்தோட்டங்களின் பிரச்சினை ஒரு குறியீடு மட்டுமே. இதே நிகழ்வுகள் தான் ஏனைய தனியார் தோட்டங்களிலும் நிகழப் போகின்றன. கலன் தோட்டப் பிரச்சினையையும் மலையக அமைப்புகள் வேண்டுமென்றே குழப்பியடித்துள்ளன.



மலையக அமைப்புகளின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குக் காரணம், மலையக மக்கள் தொடர்பாக அவர்களுக்கிருக்கும் பொறுப்பற்ற தனம் தான்.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேசிய இனப்பிரச்சினையே என்பதை இவர்கள் அடையாளம் காண மறுக்கிறார்கள். மேற்கூறிய நிலப்பறிப்பு, கைது தோட்டங்களை விட்டு வெளியேற்றல் என்பன தேசிய இன ஒடுக்குமுறைகளின் வடிவங்கள்தான் என இவர்கள் புரிந்து கொள்ள விரும்பவில்லை. இவ் ஒடுக்கு முறைகளை ஒடுக்கும் இனத்தின் ஆளும் வர்க்கம் மலையக தேசிய இனத்தின் அடையாளங்களையே சிதைக்கும் வகையில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பதையும் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றார்கள். இந்நிலைமைகளை இவை எப்போது புரிந்து கொள்ளப்போகின்றனவோ அன்று தொடக்கம் தான் இவைகளால் மலையக மக்களின் விடுதலைக் காக காத்திரமான பங்களிப்புக்கள் ஆற்ற முடியும். ஆனால் மறுபக்கத்தில் மலையகத் தேசிய இனம் தொடர்பாக இவைகள் மேற்கொள்கின்ற ஒவ்வொரு இழுத்தடிப்புக்களும் குறிப்பிட்ட அளவிலாவது அதன் சிதைவுகளை தவிர்க்க முடியாததாகும். ஏற்கெனவே, இவைகளின் அக்கறையற்ற போக்கினால் நுவரெலியா, பதுளை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மலையக தேசிய இனம் சிதைவடைந்துள்ளது. நிலப்பறிப்பு, தோட்டங்களைவிட்டு துரத்தல் போன்ற ஒடுக்குமுறைகளால் அங்கு வாழ்கின்ற பலர் மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற நுவரெலியா, பதுளை மாவட்டங்களை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர். இத்தகைய நிலை நுவரெலியா பதுளை மாவட்டங்களிலும் தோன்றினால் மலையக தேசிய இனம் முழுமை

→15

**பரந்தாமன்**

# கலன் தோட்டம்: இ.தொ.காவின் சுத்துமாத்து!

கடந்த ஒரு மாதகாலமாக நிலவிய கலன்தோட்டப் பிரச்சினை இ.தொ.காவும் - விகாரை நிர்வாகமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முடிவுக்கு வந்துள்ளது. கலன் தோட்டத்தை விகாரை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரக்கூடாது. ஏற்கெனவே நிர்வகித்து வந்த பலாங்கொடை பிளாண்டேஷன் கம்பனியின் நிர்வாகத்தின் கீழேயே கொண்டுவர வேண்டும் எனப்போராட்டம் நடாத்திய இ.தொ.கா. இன்று அங்குள்ள மக்களுடன் எந்தவித கலந்தாலோசனையும் மேற்கொள்ளாது விகாரை நிர்வாகம் தோட்டத்தை முகாமை செய்வதற்கு சம்மதித்து ஒப்பந்தம் செய்துள்ளது.

ஒப்பந்தத்தில் இனிமேல் விகாரை நிர்வாகம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி கூறப்பட்டுள்ளதே தவிர இதுவரையான கொடுப்பனவுகளை பலாங்கொடை பிளாண்டேஷன் கம்பனியிடமிருந்து பெற்றுக் கொடுப்பது பற்றிய விடயத்திற்கு பெரிதளவான உத்தரவாதம் எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. வெறுமனே விகாரை நிர்வாகம் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் அது சரிவராவிட்டால் அரசே அதற்கான மாற்று வழிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதில் மிகவும் கவலையளிக்கக்கூடிய விடயம் மக்களின் நிலரப்பிரச்சினை மறக்கப்பட்டமைதான். ஆரம்பத்தில் விகாரை நிர்வாகம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 1/2 ஏக்கர் கொடுக்கச் சம்மதித்திருந்தது. ஒப்பந்தத்தின் போது இதனை ஒரு நிபந்தனையாக வைத்திருக்கலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இ.தொ.கா. இதுபற்றி எந்தவித அக்கறையும் எடுக்கவில்லை. தன் சொந்த நலனுக்காக ஒருதேசிய இனத்தின் நீண்ட காலப் பாதுகாப்பை இ.தொ.கா. உதாசீனம் செய்துள்ளது.

இ.தொ.கா. ஒப்பந்தம் செய்த பின்னரும் கூட உடனடியாக மக்கள் வேலைக்கு செல்லவில்லை. இதனை விகாரை நிர்வாகம் இ.தொ.கா.விடம் முறையிட்டதைத் தொடர்ந்து இ.தொ.கா.வின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சென்னன், இ.தொ.கா.வின் ஊவா மாகாணசபை உறுப்பினர்கள் சிவம், லோகநாதன், சச்சிதானந்தம். இ.தொ.காவின் பதுளை மாவட்ட பிரதிநிதி குமரன் என்போர் மேற்படி தோட்டத்திற்குச் சென்று வேலைக்குப் போகுமாறு மக்களை எச்சரித்துள்ளனர். ஏற்கனவே தோட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தால் ஐந்து பேர் கைதாகி பிணையில் விடப்பட்டுள்ளார்கள். 11பேர் தேடப்படுகின்றார்கள். நீங்கள் வேலைக்கு செல்லவில்லையாயின் மீதி 11 பேரும் கைது செய்யப்படுவதோடு வழக்கும் தொடரப்படும், வேலைக்கு சென்றால் எல்லாவற்றையும் தவிர்க்கலாம் எனக்கூறி எச்சரித்துள்ளனர்.

இவர்கள் இவ்வாறு எச்சரித்த போது தோட்ட மக்கள் ''நீங்கள் தானே விகாரை நிர்வாகத்திடம் ஒப்படைக்கக்கூடாது என்பதற்காக வேலை நிறுத்தம் செய்யும் படி கூறினீர்கள். இப்போது விகாரை நிர்வாகத்துடனேயே ஒப்பந்தம் செய்து விட்டு வேலைக்கு செல்லுங்கள் என்கிறீர்கள்'' எனக் கேட்டனர். அதற்கு அவர்கள் ''எல்லாப் பிரச்சினையையும் ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்துள்ளோம். நீங்கள் வேலைக்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இ.தொ.கா.வுக்கும் ஊழலுக்கும் என்ன உறவு?

இ.தொ.காவுக்கும் ஊழலுக்கும் அப்படி என்ன உறவோ தெரியவில்லை. ஏற்கெனவே தொழிலாளர்களின் சந்தாப் பணம், இ.தொ.கா. தலைமையகக் கட்டிட நிதி, எயார்லங்கா - ட்ரான்ஸ் லங்கா லிமிடெட் ஊழல் என்ற ஒரு நீண்ட பட்டியலே உண்டு.

சரிநிகர் இதழ் 63இல் பதுளை மாவட்ட இ.தொ.கா. பா.உறுப்பினர் வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒழித்திருந்த கதை வந்திருந்தது. இப்போது ஒரு ஜெனரேட்டர் கதை. அந்த பா.உறுப்பினர் தனது மாவட்டத்துக்கான நிதியிலிருந்து வேலஸ்ஸ மேற்பிரிவு விநாயகர் கோவிலுக்கு ஜெனரேட்டர் வாங்க ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தார். அப்பணத்திற்கு பதுளையிலுள்ள தனியார் கடையொன்றில் ஜெனரேட்டரும் வாங்கப்பட்டது. ஆனால், அது கோவிலுக்குப் போய்ச் சேரவில்லை: கோவில் கமிட்டியினர் விடயத்தைக் கிளறினர். கோவில் கமிட்டி தலைவர், செயலாளர் ஆகியோரின் கையொப்பத்துடன் கமிட்டியின் இறப்பர் முத்திரையும் இடப்பட்டு ஜெனரேட்டர் பெறப்பட்டிருந்தது. (இவையெல்லாம் போலி என்பது வேறு விடயம்) இதற்குச் சாட்சியாக இருவர் கையொப்பமிட்டிருந்தனர். ஒருவர் டபிள்யூ குமரன் - இவர் இ.தொ.கா.வின் பதுளை மாவட்ட பிரதிநிதி. மற்றையவர் ஏ.சோமசுந்தரம் - இவர் பதுளை மாவட்ட இ.தொ.கா. பா.உறுப்பினர் ரி.வி.சென்னனின் உதவியாளர். ஜெனரேட்டருக்கு நிதி ஒதுக்கிய பா.உறுப்பினரும் இதே டி.வி. சென்னன்தான்.

வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக்கூடாது என்று தான் சொல்வார்கள். வலக்கையால் கொடுப்பதை யாருக்கும் தெரியாமல் இடக்கையால் எடுக்கலாம் என்று சொல்லவில்லையே!

சரிநிகர் இருவாரங்களுக்கொருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) சார்பில் வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினரதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும். பெயர், முகவரி தெளிவாக எழுதப்படாதவற்றையும், அநாமதேயக் கடிதங்களையும், முகமற்ற விமர்சனங்களையும் சரிநிகர் பிரசுரிக்காது. புனைபெயரிலோ அன்றி வேறு பெயரிலோ பிரசுரிக்க விரும்புபவர்கள் புனைபெயருடன் தங்களுடைய சரியான பெயர், முகவரி விபரங்களையும் குறிப்பிடுதல் வேண்டும். சரிநிகருக்கு வரும் ஆக்கங்களை திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை என்பதால் ஆக்கதாரர் தம்முடன் ஒரு பிரதியை வைத்திருத்தல் நன்று. வருட சந்தா கட்ட விரும்புபவர்கள் 'MIRJE' இன் பெயருக்கு காசோலை/ காசுக்கட்டளை/ தபால் கட்டளை மூலமாக சந்தாப்பணத்தை அனுப்பி வைக்கவும்'

சந்தா: உள்நாடு 175/= வெளிநாடு 30 U.S டொலர் (தபாற் செலவுட்பட)

சரிநிகர்
இல. 4, ஜெயரட்ண மாவத்தை,
கொழும்பு-05
☎-593615

## பஜிரோவுக்கு...

இது எத்தனையாவது பஜிரோ என்ற அவரிடம் யாரும் கேட்டுவிடக்கூடாது.
ஈ.பி.ஆர்.எல்.எப்புக்கும், ரெலோவுக்கும் இம்முறை இந்த அதிர்ஷ்டம் இல்லாமற் போய்விட்டது. மக்களுடைய பிரதிநிதிகள்; பஜிரோவுக்கும் பச்சை எலும்புக்கும் அடிமையானவர்கள் என்று சொல்லலாமா?

கீழே பஜிரோ கேட்டு விண்ணப்பித்த தமிழ் பா.உ.களது பட்டியலைத் தருகின்றோம்.

| பெயர் | | கட்சி |
|---|---|---|
| எஸ்.தொண்டமான் | - | இ.தொ.கா |
| ஏ.தங்கத்துரை | - | கூட்டணி |
| கே.ஜோசப் பரராஜசிங்கம் | - | கூட்டணி |
| பி.செல்லராசா | - | கூட்டணி |
| டி.சித்தார்த்தன் | - | புளொட் |
| வி.பாலச்சந்திரன் | - | புளொட் |
| எஸ்.சண்முகநாதன் | - | புளொட் |
| டக்ளஸ் தேவானந்தா | - | ஈ.பி.டி.பி. |
| எம்.சந்திரகுமார் | - | ஈ.பி.டி.பி. |
| எஸ்.தங்கவேல் | - | ஈ.பி.டி.பி. |
| யு.பாஸ்கரன் | - | ஈ.பி.டி.பி |
| ஆர்.ராமமூர்த்தி | - | ஈ.பி.டி.பி. |
| ஆர்.ராமேஷ்வரன் | - | ஈ.பி.டி.பி |
| ஏ.ராசமாணிக்கம் | - | ஈ.பி.டி.பி |
| எஸ்.சிவதாஸன் | - | ஈ.பி.டி.பி |
| ஏ.நடராஜா | - | ஈ.பி.டி.பி. |

## பேச்சு ...

தொடங்கிய பின் முதன் முதலாக ஏற்பட்டுள்ள இந்த இறுக்க நிலை, அரசு தரப்பின் விட்டுக் கொடுப்பின் மூலமே தளர வாய்ப்பிருக்கிறது என்றும், அவ்வாறு அரசு செய்யுமானால், அது அரசுக்கு அரசியல் ரீதியாகப் பாரிய வெற்றியாக அமையும் எனவும், பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முன்னேறும் வாய்ப்பும் வளரும் எனவும் கொழும்பில் உள்ள அரசியல் அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

## சண்டே லீடர்...

தன்னுடைய பத்திரிகையில் வெளியாகும் ஒரு தொடர் கட்டுரையை நிறுத்தக்கோரியும் அவ்வாறில்லாவிட்டால் கொல்லப்படுவாய் என்றும் சில வாரங்களுக்கு முன் மிரட்டல் வந்திருந்ததாக லசந்த பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

லசந்தவின் நண்பர்களை மேற்கோள் காட்டி 'லசந்தவைத் தாக்கிய நான்கு குண்டர்களும் சினிமா நட்சத்திரமாக இருந்து அரசியல்வாதியாக மாறிய ஒருவரது ஆதரவாளர்கள்' என்று ஆங்கிலப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம்(Free Media Movement)வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளது.

''இத்தாக்குதலுக்கான காரணங்கள் எதுவாக இருந்த போதும் இத்தகைய தாக்குதல்கள் கடத்தல்கள், மிரட்டல்கள், என்பன கடந்த தேர்தலில் வாக்களித்து மக்கள் மீட்டெடுத்த ஜனநாயகத்தின் அம்சமாக ஒருபோதும் இருக்க முடியாது.

சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் உடனடியாக இது தொடர்பாக விசாரணை நடத்துமாறும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்குமாறும் கேட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை உடனுக்குடன் தொடர்பு சாதனங்களுக்கு அறிவிக்குமாறும் கோரியுள்ளது.

இந்தத்தாக்குதல் பிரேமதாசா அரசு காலத்தில் நடந்த தாக்குதல்கள் மீள எழுந்து வருவதற்கான ஒரு சமிக்ஞையே என நாம் சந்தேகப்பட வேண்டியுள்ளது.''

## திரும்பி...

அது பற்றி ஒன்றும் தெரியாது' என்று குறிப்பிட்டதாக அப்பத்திரிகை கூறுகிறது. (பெப்.5ம் திகதிய ராவய இதழ்)
என்ன இருந்தாலும் தொண்டா தொண்டா தான்!
முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது என்பார்கள். தொண்டா மலையகத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ என்னவோ பேதுறு தாலகால மலையையே தன் தொப்பைக்குள் மறைத்துவிடக் கூடியவர், போங்கள்!

## கலன்...

குச் செல்லுங்கள்'' என்றனர். ''அப்படியாயின் ஒப்பந்தத்தை எங்களுக்குக் காட்டுங்கள்'' என மக்கள் திருப்பிக் கேட்டுள்ளனர். இதற்கு ஒப்பந்தம் இப்போது எங்களிடம் இல்லை கொழும்பில் உள்ளது என பதிலிறுத்துள்ளனர். ''நீட்வூட் தோட்டத்திலும் இப்படி ஒப்பந்தம் செய்தும் மாதக்கணக்காக அவர்கள் சம்பளம் கிடைக்காமல் வேலை நிறுத்தம் செய்தார்களே'' எனக் கேட்டதற்கு, அந்நிலை இங்கு ஏற்படாது எனக்கூறியுள்ளனர்.

இ.தொ.கா.வினரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து தோட்டத்திலுள்ள தமிழ்த் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பியுள்ளனர். ஆனால் சிங்கள தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. இப்போ காலம் காலமாகவே ஐக்கியத்துடன் வாழ்ந்த சிங்கள தொழிலாளர்களுக்கும் தமிழ்த் தொழிலாளர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. சிங்களத் தொழிலாளர்கள் மேற்படி தோட்ட இ.தொ.கா. தலைவரின் வீட்டிற்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். ''நீங்கள்தான் வேலை நிறுத்தம் செய்யும்படி கூறிவிட்டு கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமலேயே வேலை நிறுத்தத்தைக் குழப்பி வேலைக்கு செல்கிறீர்கள். வேலை நிறுத்தத்தின் போது எமக்கு கிடைக்காமல் போன சம்பளத்தை நீங்கள்தான் தர வேண்டும்'' எனக்கூறி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.
இ.தொ.கா.வின் சுயநலம் மிக்க நடவடிக்கையினால் தோட்ட மக்கள் ஏமாற்றப்பட்டதோடு தொழிலாளர்கள் மத்தியில் சிங்கள - தமிழ் முரண்பாடும் ஏற்பட்டுள்ளது.

'கலன் தோட்டப் பிரச்சினையில் ஆரம்ப முதல் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் கூறுகிறார். ''தோட்டமக்கள் மத்தியில் இ.தொ.காவின் முகமூடி மெல்ல மெல்லக் கிழிய ஆரம்பித்துள்ளது. இது இ.தொ.காவின் அந்திமக்காலம் ஆரம்பமாகிவிட்டதைக் காட்டுகிறது!''

## மலையகக் கைதுகள்...

கம்) குண்டுவெடிப்பு சூததிரதாரிக்கு புகலிடம் அளித்தது மலையகம், என்பது வெளித்தெரியவந்ததன் பின் மலையகத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு (சந்திரசேகரன், காதர், தர்மலிங்கம் உட்பட) சலசலப்பை ஏற்படுத்திய பின்னரே மேற்படி முகாம்கள் பல ஏற்படுத்தப்பட்டன. அன்று போடப்பட்ட இம்முகாம்கள் இன்னும் அகற்றப்படவில்லை. மாறாக பெருக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் நடந்த கைது விசாரணைகள் என்பவற்றைத் தொடர்ந்து இவை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க ஒரு சில இளைஞர்களை விசாரணை செய்துவிட்டு, மலையகம் பூராவும் பெருமளவு கைது நடவடிக்கைகளை பாரியளவில் நடத்திவருவதும் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தாமல் வருடக்கணக்கில் தடுப்பக்காவலில் வைத்திருப்பதும் இறுதியில் 'ஒப்புக் கொண்டால் மன்னிப்பு! அல்லது குறைந்த தண்டனை' எனக்கூறி, செய்யாத ஒன்றைச் செய்ததாக ஒப்புக்கொள்ள வைத்த சம்பவங்களையும் தமிழ் இளைஞர்கள் பலர் ஏற்கனவே சந்தித்துவிட்டார்கள். கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதி இதற்கு சான்று பகரும். அன்றைய அரசாங்கத்தை ஞாபகப்படுத்தும் வகையில் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கையும் அமைந்துவிடுமா? என்பது பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் வேதனை தொனிந்த கேள்வியாகவுள்ளது.

மேலும், பொலிசாரின் கூற்றுப்படி அவ்விளைஞர்கள் தீவிரவாத செயற்பாட்டை முன்னெடுக்கின்றார்கள் என்று கூறப்படுவது உண்மையாக இருந்தால், அவற்றிற்கான தீர்வு கைது, துன்புறுத்தல், தண்டனை என்பதல்ல. அவர்களது கோரிக்கைகள், அத்தோடு உண்மையான நிலைமை என்பவற்றை ஆராயாது, அவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தால் அது இன்னொரு வடகிழக்கு யுத்தத்தை மலையகத்தில் உருவாக்க நேரிட்டாலும் ஆச்சரியம் இல்லை.

அன்று தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஊதாசீனம் செய்ததும், இளைஞர்கள் சிறு அளவிலான கிளர்ச்சி செய்த போது அவற்றை மோசமாக அடக்கி அழிக்க முயற்சித்ததும், ஏற்படுத்திய விளைவை இன்று நாடே அனுபவிக்கிறது. இங்கும் அது போன்றதொரு முறையே கையாளப்பட்டால் என்ன விளைவு எதிர்காலத்தில் ஏற்படும் ...... என்பதை சம்பவங்களைக் கூர்ந்து பார்க்கும் ஒருவர் தெளிவாகப் புரிந்துகொள்வார்.

வரலாறு தெரியாதவர்கள் முட்டாள்கள்..... அதைக் கற்றுக் கொள்ள மறுப்பவர்களோ வெறும் முட்டாள்கள் மட்டுமல்ல, முழு நாட்டிற்குமே ஆபத்தைத் தேடித்தரப் போபவர்கள் என்பதை மட்டும் இப்போதைக்குச் சொல்லி வைக்கலாம்.

## மலையகத்தில்...


யாக சிதைவடைவதற்கே வழிகோலும்.

எனவே, இது விடயத்தில் இனியாவது மலையக அமைப்புகள் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.. இதற்கு அவை மலையக மக்களின் பிரச்சினையை சரியாக அடையாளம் காணவேண்டும். அவ்வடையாளப்படுத்தலின் பின்னர் மலையக மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்குரிய சரியான அரசியல் பாதையைக் கண்டறிதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து அதற்கான சரியான அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். இது விடயத்தில் தங்களுக்கிடையே உள்ள குழு நலன்களை மறந்து பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்பி அதனூடாக போராட்டங்களை நடாத்துவதற்கு முன்வரவேண்டும்.

இவ்வரலாற்றுக் கடமையை மலையக அமைப்புகள் சரிவர ஆற்றத்தவறினால் வரலாற்றின் குப்பைத் தொட்டிகளில் இவ்அமைப்புக்கள் தூக்கி வீசப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கிலிருந்து முஸ்லிம்கள்,

# வெளியேற்றப்பட்டமைக்காக வருந்துகிறோம்! மீளக் குடியமர்த்த விரும்புகிறோம்!!

– விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் –

"வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக நாம் எமது வருத்தத்தை தெரிவிக்கிறோம். அவர்களை வெளியேற்றியதற்காக நாம் வருந்துகிறோம். பல்வேறு காரணங்களுக்காக அவர்களை நாம் வெளியேறும்படி கேட்க வேண்டியேற்பட்டது. இது பற்றி நான் இப்போது விபரிக்க விரும்பவில்லை. ஆனால் அவர்கள் இப்போது திரும்பி வந்து குடியேற வேண்டும் என்று விரும்புகிறோம். அவர்கள் நாவாந்துறை பகுதியில் வந்து குடியேற முடியும்....''இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாலசிங்கம் அவர்கள்,. யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் சிங்கள முஸ்லிம் மக்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றின் போதே பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, 'முஸ்லிம் மக்களை திரும்பவும் இங்கு வரவழைப்பதே எமது விருப்பமாகும். சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் சிறிய அளவிலேயே இங்கு வாழ்ந்தார்கள். எந்த சமூகத்தை சேர்ந்த மக்களும் இங்கு வந்து குடியேற முடியும். நாம் எதிர்த்தது அதையல்ல. அரசுகளினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட குடியேற்றங்களையே நாம் எதிர்க்கிறோம். முஸ்லிம் மக்களுக்கு நாம் விட்ட தவறை உணர்ந்துள்ளதாக அறிவித்திருக்கிறோம். அவர்களை மீளக்குடியமர்த்த நாம் தயாராக உள்ளோம். அவர்களது. இடங்களில் இப்போது குடியிருக்கும் (தமிழ்) அகதிகள் தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதும் முஸ்லிம்கள் வந்து குடியேற முடியும். சிங்கள மக்களை போலல்லாது முஸ்லிம் மக்கள் இங்கு செறிவாக வாழ்ந்தவர்கள். வடக்கு தெற்குக்கு முற்றாக திறக்கப்பட்டதும்

சிங்கள மக்கள் மட்டுமல்ல எந்த சமூகத்தவர்களும் இங்கு வந்து குடியேறலாம். முஸ்லிம் மக்களை பொறுத்தவரையில் இது ஒரு விசேட பிரச்சினை, அவர்களில் பலர் அகதிகளாக அவஸ்தைப்படுகின்றனர். அவர்களை தமது வீடுகளுக்கு வந்து மீளக் குடியேற்ற ஆவன் செய்வது எமது கடமையாகும்."

1990ல் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபின் மிக அண்மைக்காலமாக புலிகளிடம் முஸ்லிம் மக்களை திரும்பவும் அழைப்பது தொடர்பான கருத்துக்கள் வலுப்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவித்துள்ள போதும் வெளியேற்றலுக்காக மனம்வருந்தி அபிப்பிராயம் புலிகள் தரப்பில் வெளியிடப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

இந்தப் பத்திரிகையாளருடனான மேற்படி பேட்டியில் பூநகரி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு பாலசிங்கம் விரிவாக அளித்துள்ள பதில் வருமாறு:

''த.ஈ.வி.புவை பொறுத்தவரை குடாநாட்டிலிருந்து வெளியே வருவதற்கு ஏதாவது ஒரு பாதை திறக்கப்பட வேண்டுமென்றே கருதுகிறோம். முன்னைய நாட்களில் ஆறே மணித்தியாலங்களில் வர முடிந்த யாழ்ப்பாணத்திற்கு இப்போது மூன்று நாட்களுக்குமேல் எடுக்கிறது. தமிழ் மக்களை பொறுத்தவரை இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இரண்டாவது ஈழப்போருடன் ஆனையிறவு, பூநகரி- சங்குப்பிட்டிப்பாதை இரண்டையும் அரசு மூடிவிட்டது. ஆனையிறவில் நீண்ட காலமாக இராணுவம் நிலைகொண்டுள்ளது. அது ஒரு யுத்ததந்திர ரீதியாக முக்கியமான முகாமாகும். அதிலிருந்து இப்போது வெற்றிலைக் கேணிக்கும் ஒரு முகாம் நகர்த்தப்பட்டிருப்பதால் குடாநாட்டிலிருந்து வெளியேறும் எல்லாப்பாதைகளும் அடைக்கப்பட்டுவிட்டன.

ஆனையிறவுப் பாதையால் போகும் சகல பொதுமக்களும் சோதனையிடப்படுவார்கள் என்று இராணுவம் கூறுகிறது. ஆனால் நாங்கள் பூநகரி முகாமை மூடிவிட்டு அப்பாதையை திறந்துவிடும்படி கேட்கிறோம். பூநகரி முகாமை போடுவதற்கு தாம் பல உயிர்களை இழந்ததாக தெரிவிக்கின்றது இராணுவம். நல்லது. ஆனால் அவர்கள் பூநகரிக்கு வரும் போது நாங்கள் அவர்களை தாக்கவில்லை. அது சாத்தியமில்லாத ஒன்றும் கூட. கனரக ஆயுதங்களுடன், விமான பாதுகாப்புடன் வரும் ஒரு படைப்பிரிவை திறந்த வெளியில் தாக்க முயல்வது சாத்தியமில்லை. ஆனால் அவர்கள் பின்பு அந்த முகாமை தொடர்ந்து வைத்திருக்க முயன்றதாலேயே அதை நாம் தாக்கினோம். வெற்றிலைக்கேணிக்கு அப்பால் இராணுவம் எல்லா இடங்களிலும் நிலை கொண்டுள்ளது. இது முன்னைய இராணுவ கொமாண்டோக்களால் உருவாக்கப்பட்ட திட்டம். வடமராட்சி, பூநகரி, பளை, ஆனையிறவு ஆகிய ஐந்து முனையினூடாக குடாநாட்டை தாக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதற்காகவே இங்கு இராணுவம் நிலை கொண்டுள்ளது.

அப்படி ஒரு முற்றுகை நோக்கம் இல்லை என்றால் அமைதியான முறையில் பிரச்சினையை தீர்க்க விரும்பினால் அவர்கள் ஏன் குடாநாட்டை இவ்வாறு வளைத்து பாதுகாப்பு போட்டு வைத்திருக்க வேண்டும்? ஆகவே, பூநகரி முகாமை நீக்கினால் அரசுக்கு அவ்வாறான நோக்கம் இல்லை என்று நிரூபிப்பதாய் இருக்கும். இப்போதைய நிலைமையில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், திரும்பவும் இராணுவ வழியே தொடங்கப்படும். அந்த சந்தேகம் இங்கே நிலவுகிறது. இதுவும் நாம் பூநகரி முகாமை மூடக்கோருவதற்கான காரணங்களில் ஒன்றாகும். அதை மூடி தனது நல்லெண்ணத்தை காட்டுவதன் மூலமாக எத்தகைய பாரிய தாக்குதலையும் தாம் செய்யும் உத்தேசம் இல்லை என்று எமக்கு காட்ட வேண்டும் என நாம் கோருகின்றோம். சுற்றி வளைத்திருக்கும் நிலைமை எம்மை கட்டுப்படுத்த நினைக்கும் ஒன்றாகவே நாம் சந்தேகப்படவேண்டியிருக்கிறது. பேச்சுவார்த்தைகள் எத்தகைய அழுக்கங்களுமில்லாமல் சுதந்திரமாக நடக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

சந்திரிகாவின் அரசியல் ரீதியாக பிரச்சினையை தீர்க்கும் முயற்சியை நாம் வரவேற்கிறோம். அதற்காக சேர்ந்து செயற்பட தயாராக இருக்கிறோம். நாம் எமது மக்களின் உரிமைகட்காக ஆயுதம் ஏந்தியவர்கள்: அரசு பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறையுடன் இருப்பதானால் முழுதாகவே பொருளாதார தடையை நீக்க வேண்டும். பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டும். அவர்கள் பூநகரி இராணுவ முகாமை எடுப்பார்களானால் நாம் அதே நேரத்தில் ஆனையிறவுப் பாதையை திறக்க ஒத்துக்கொள்வோம்'',

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்; நாம் சமாதான பேச்சுக்கு தயாரில்லை என்பது வெறும் கட்டுக்கதை. நாம் தயாராகவே உள்ளோம்.தமிழீழத்திற்கு மாற்றாக வைக்கப்படும் சமஸ்டி முறை, தமிழ் முஸ்லிம் மக்களது அபிலாசைகளை தீர்க்கக் கூடிய ஒரு சுயாதீன தன்மைவாய்ந்த முறையாக இருப்பின் நாம் அதை பரிசீலிக்க தயாராக உள்ளோம். இப்போது அரசின் கையிலேயே எல்லாம் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல்: ஐலண்ட்

# எங்களை அழைக்க இவர் யார்?"

# தமிழ் எம்.பிக்கள் கூச்சல்

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பது பற்றிய பேச்சு இப்போது தமிழ் எம்.பிக்கள் வட்டாரத்தில் பலமாக அடிபடுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு கூட்டாக யோசனையை முன்வைத்தல், பாராளுமன்றத்தில் கூட்டாக இயங்குதல் என்ற நோக்கங்களுக்காகவே இவ்வொன்றிணைப்பு முயற்சி தமிழ் உறுப்பினர்களால் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இது பற்றி பேசுவதற்கென கடந்த 3ஆம் திகதி ஐந்து நட்சத்திர ஹோட்டலான தாஜ்சமுத்திராவில் மாலை 5.30 க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பலத்த சலசலப்பு ஏற்பட்டதாக தெரியவ்ருகிறது. இச் சலசலப்புக்கு காரணமானவர் தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமான் அவர்களே.

மேற்படி கூட்டத்தை ஒழுங்கு செய்வதற்கான பொறுப்பு தொண்டமானிடமே விடப்பட்டிருந்தது. எனினும் கூட்டத்துக்கு சமூகமளிக்கும்படி ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமானே கையெழுத்திட்டிருந்தாராம். இதுவே, சர்ச்சைக்கான அடிப்படையாகி விட்டது!.

ஏனைய தமிழ் கட்சிகளுக்கு தொண்டமானின் பேரன் கையொப்பமிட்டது பிடிக்கவில்லை. இதற்கான ஏற்பாட்டை செய்ய ஆறுமுகம் தொண்டமான் யார்? என்ற கேள்வியை தமிழ்க் கட்சி வட்டாரங்கள் ஒரு பிரச்சினையாக எழுப்பின. அவர்களில் முக்கியமானவர் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா.

இதுபற்றி வேறுசில தமிழ் உறுப்பினர்கள் தொண்டமானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ''யார் ஆறுமுகம் தொண்டமானுக்கு இந்த பொறுப்பை அளித்தது? என வினவிய போது, அதற்கு தொண்டமான், அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிக்கும் ஒருவர் இந்த ஏற்பாடுகளை செய்தால் சர்ச்சைகள் கிளம்பும் என்பதாலேயே தான் செய்யவில்லை, என்று நழுவியிருக்கிறார்.

ஏற்கெனவே, தமிழ் எம்.பிக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் த.வி.கூ. ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, தொண்டமான் முந்திக் கொண்டு தானே கூட்டியதாக பத்திரிகைக்கு அறிக்கை விட்டதில் கடுப்புடன் இருந்த கூட்டணி, இச்சம்பவத்தினால் மேலும் ஆத்திரமுற்று அதன் செயலாளர் ஆனந்த சங்கரியினூடாக விடுத்த அறிக்கையில் சமாதான பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈ.க்கு எதிரான எந்த ஒரு தீர்மானத்தையும் தாம் எடுக்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் தற்போது 28 தமிழ் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - 9, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி - 9, தமிழர் விடுதலைக் கூட்டணி - 5, ஜனநாயக தேசிய விடுதலை முன்னணி - 3, மலையக மக்கள் முன்னணி - 1, மற்றும்

பொது ஜன ஐக்கிய முன்னணி (தேசிய பட்டியல்) உறுப்பினர் - 1.

இவர்களில் பொது ஜன ஐக்கிய முன்னணி தமிழ் உறுப்பினரான லக்ஷ்மன் கதிர்காமர் ஆளும் பொ.ஜ.மு.வைச் சேர்ந்தவரென்பதால் இக்கூட்டணியோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதில் பின்வாங்குவதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அல்லோசாலை கொழும்பு 03 ... திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்